உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 புரட்டாதி 9 சனிக்கிழமை (25.09.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 303

# பொன்சேகா நாடாளுமன்று வருவதற்கான தடை குறித்து சபையில் நேற்றுச் சர்ச்சை

## ஆராய்ந்து பதில் அளிப்பதாக சபாநாயகர் தெரிவிப்பு



கொழும்பு,செப்ரெம்பர்25

நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா நேற்றும், நேற்றுமுன்தினமும் நாடாளுமன்ற அமர்வுகளில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படவில்லை. அவரை உடன் நாடாளுமன்றத்துக்கு அழைத்து வர நடவடிக்கை எடுக்குமாறு எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று நாடாளுமன்றில் சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்தனர்.

ஜனநாயக தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினரான விஜித ஹேரத் இந்தக் கோரிக்கையை முதலில் முன்வைத்தார். இதுதொடர்பாக விஜித ஹேரத் கூறியவை வருமாறு:-

வியாழக்கிழமை இடம்பெற்ற அவசரகாலச் சட்ட நீடிப்பு பிரேரணை மீதான விவாதத்தில் உரை யாற்றுவதற்கு சரத் பொன்சேகா தயாராகவிருந்தார். ஆனால், அவர் சபைக்கு வர அனுமதிக்கப்பட வில்லை. இது தொடர்பாக நாம் உங்களிடம் (சபாநாயகரிடம்) கூறிய போது இதுதொடர்பாக (23ஆம் பக்கம் பார்க்க)

## ஒபாமா தரப்புக்கு 10 அறைகள் மஹிந்த குழுவுக்கு 4 மாடிகள்

### ஹோட்டல் ஒதுக்கீடு குறித்து ஐ.தே.க. கிண்டல்

கொழும்பு,செப்.25

ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்துகொள்ள வந்த அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் குழுவினருக்கு நியூயோர்க் ஹோட்டல் ஒன்றில் 10அறைகளே ஒதுக்கப்பட்டன. இருந்தும் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பரிவாரங்களுக்கு வய்ஞூப் அஸ்டோரியா ஹோட்டலில் நான்கு மாடிகள் ஒதுக்கப்பட்டுள்ளன - என்று மத்திய மாகாண சபை ஐ.தே.கட்சி உறுப்பினர் சாந்தினி கோங்கஹகே கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

ஜனாதிபதி உட்பட 130 பிரதிநிதிகளைக் கொண்ட குழு பல மில்லியன் டொலர்களைச் செலவிட்டு நியூயோர்க் சென்றுள்ளது.

இவர்களின் நியூயோர்க் விஜயத்துக்கென 80விசேட முதல் வகுப்பு சொகுசு விமான டிக்கெட்டுகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. (23ஆம் பக்கம் பார்க்க)

## 7 கோடி ரூபா வங்கிப்பணம் துணிகரமாகக் கொள்ளை!

கொழும்பு,செப்.25

வங்கி ரெல்லர் இயந்திரங்களுக்குப் பணத்தை இட வந்த அதிகாரிகளிடமிருந்தது ஆறரைக் கோடி ரூபா நேற்றுக் காலை இனந்தெரியாதோரால் கொள்ளையிடப்பட்டது.

கொழும்பு, பேலியகொட, தெகல பொத்த என்ற இடத்திலேயே இந்தத் துணிகரக் கொள்ளை இடம்பெற்றது. சம்பவம் தொடர்பாகத் தெரியவருபவை வருமாறு:-

தனியார் வங்கி ஒன்றிலிருந்து அதன் ஏனைய கிளைகளிலுள்ள தன்னியக்க ரெல்லர் அட்டை இயந்திரத்துக்கு (ATM) (23ஆம் பக்கம் பார்க்க)



ஐ.நா.பொதுச் செயலாளர் பான் கீ மூனை நேற்று நியூயோர்க்கில் சந்தித்துப் பேச்சு நடத்தினார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் தனக்கு ஆலோசனை வழங்கவென பான் கீ மூன் நிபுணர் குழுவொன்றை நியமித்தமை தொடர்பில் தனது அதிருப்தியை ஜனாதிபதி தெரிவிப்பார் என முன்னதாக மூத்த அமைச்சர் ஒருவர் தெரிவித்திருந்தார். சந்திப்புக் குறித்த முழு விவரம் செய்தி அச்சுக்குப் போகும் வரை வெளியாகவில்லை.

## யாழ்ப்பாணம் தனிநாடா? நாடாளுமன்றில் கேள்வி

கொழும்பு,செப்.25

யாழ்ப்பாணம் ஒரு தனிநாடா? அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா யாழ்ப்பாணம் சென்றுள்ள வேளையில் அவரது பிரதி அமைச்சர் பதில் அமைச்சராக சத்தியப்பிரமாணம் செய்துள்ளார்? இது வேடிக்கையாக இருக்கின்றது என (ஐ.தே.க.) நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க நேற்று நாடாளுமன்றத்தில் சர்ச்சை ஒன்றை எழுப்பினார்.

வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகாவை நாடாளுமன்ற அமர்வுகளில் கலந்துகொள்ள வாய்ப்பளிக்காத சம்பவம் தொடர்பாக ஜே.வி.பி. உறுப்பினர் விஜித ஹேரத் முன்வைத்த ஒழுங்குப் பிரச்சினையின் போதே ரவி கருணாநாயக்க மேற்குறிப்பிட்ட சர்ச்சையைக் கிளப்பினார்.

அப்போது ரவி கருணாநாயக்க குறிப்பிட்டவை வருமாறு:-

வழமையாகப் பதவியில் இருக்கும் அமைச்சர் ஒருவர் நாட்டுக்கு வெளியில் (23ஆம் பக்கம் பார்க்க)

## சிப்பாய் மீது கத்திக் குத்து கிளிநொச்சியில் சம்பவம்

கொழும்பு,செப்.25

கிளிநொச்சி, கனகாம்பிகைக்குளம் பகுதியில் படைச்சிப்பாய் ஒருவர் அப்பகுதிவாசி ஒருவரின் கத்திக்குத்திற்கு இலக்கானார்.

அத்துமீறி வீடு ஒன்றிற்குள் நுழைய முயன்ற சமயமே சிப்பாய் மீது தாக்குதல் நடத்தப்பட்டது எனச் செய்திகள் கூறுகின்றன. ஆனால், கத்திக் குத்து நடந்ததை உறுதிப்படுத்திய இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் உபய மெதவெல, சிப்பாய் அத்துமீறி வீட்டிற்குள் நுழைய முயன்றார் எனக் கூறப்படுவதை மறுத்தார். (23ஆம் பக்கம் பார்க்க)

## விவாகரத்து எண்ணிக்கை குடாநாட்டில் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், செப். 25

யாழ். மாவட்டத்தில் விவாகரத்துக்களின் எண்ணிக்கை கடந்த சில ஆண்டுகளில் பெருமளவு அதிகரித்துள்ளது என நீதிமன்றப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

விவாகரத்துப் பெறுபவர்களில் அரச ஊழியர்களே அதிகளவானவர்களாக இருக்கின்றார்கள் என்று சமூக ஆர்வலர்கள் கவலையுடன் சுட்டிக் காட்டுகின்றார்கள்.

இந்த ஆண்டில் இதுவரை விவாகரத்துக்கோரி 46 பேர் யாழ். மாவட்ட நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர். இந்த எண்ணிக்கை கடந்த ஆண்டு 123 ஆக இருந்தது.

30 வயதுக்குட்பட்ட இளம் தம்பதியினரே விவாகரத்துக் கோருவதில் முன்னணியில் திகழ்கின்றனர் எனப் புள்ளி விவரங்கள் கூறுகின்றன.

புரிந்துணர்வின்மை, விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை இன்மை, பொருளாதாரப் பிரச்சினைகளை எதிர்கொள்வதற்கான மனோதிடம் இல்லாமை என்பனவே விவாகரத்துக்கள் அதிகரிப்பதற்கான முக்கிய காரணங்கள் என்று சமூகவியலாளர்கள் கூறுகின்றனர்.

விவாகரத்துப் பெற வருபவர்கள் மத்தியில் இணக்கத்தை (23ஆம் பக்கம் பார்க்க)

## மஹிந்தவை அதிர்ச்சியில் ஆழ்த்திய குட்டி விமானம்

நியூயோர்க்,செப்.25

ஐக்கிய நாடுகள் சபையின் 65 ஆவது மாநாட்டில் உரையாற்றுவதற்கு நேற்று முன்தினம் புறப்பட்ட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு அதிர்ச்சி தரும் வகையிலான பதாகையொன்று கண்ணில் பட்டது.

''இலங்கை சர்வாதிகாரி ராஜபக்ஷ, ஜெனரல் பொன்சேகாவை விடுதலை செய்'' என்ற வசனங்களுடனான பதாகையொன்று வானத்தில் காணப்பட்டதாக இணையத் தளமொன்று செய்தி வெளியிட்டதுடன் பதாகையின் புகைப்படத்தையும் வெளியிட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபை அலுவலகக் கட்டடத்துக்கு கிழக்குப் புறமாக வானத்தில் குட்டி விமானமொன்று இந்தப் பதாகையுடன் வலம் வந்து கொண்டிருந்தது.

ஜனாதிபதியுடன் சென்ற பரிவாரங்கள் தாம் தங்கியிருந்த ஹோட்டலின் யன்னல் வழியாக இந்தப் பதாகையைப் பார்த்தனர் (23ஆம் பக்கம் பார்க்க)

## வன்னிப் பாடசாலைகளைப் புனரமைக்க இந்திய உதவியை நாடுகிறார் ஆளுநர்

யாழ்ப்பாணம்,செப்.25

போரால் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ள வன்னிப் பிரதேச பாடசாலைகளைப் புனரமைக்க இந்திய அரசு உதவ வேண்டும் என்று வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கொழும்பில் உள்ள இந்திய தூதரகத்திற்கு அவர் இந்தக் கோரிக்கையை நேரடியாகச் சமர்ப்பித்துள்ளார்.

போரால் இடம்பெயர்ந்து தமது வீடுகளை இழந்த மக்களுக்கு இந்திய அரசு 50,000 வீடுகளைக் கட்டிக் கொடுக்க முன்வந்துள்ளது. இதனை அடுத்தே வன்னிப் பாடசாலைகளைப் புனரமைப்புச் செய்வதற்கு இந்திய அரசு உதவி (23ஆம் பக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவ நீதிமன்றில் சாட்சியமளித்த ஜோன்ஸ்டன் அரசாங்கத்துடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்திருந்தார்

## தீர்ப்புக்கெதிரான மேன்முறையீட்டு மனுவில் சரத் பொன்சேகா தெரிவிப்பு

கொழும்பு,செப்.25

முன்னாள் இராணுவத் தளபதி சரத்பொன்சேகா இராணுவத்தில் பதவி வகித்தபோதே அரசியலில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டின் மீது முதலாவது இராணுவ நீதிமன்றத்தினால் அவர் குற்றவாளியாகக் காணப்பட்டதை எதிர்த்து மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் அவர் சார்பில் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டது.

முன்னாள் ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ அளித்தசாட்சியத்தின் மீதே தாம் குற்றவாளியாகக் காணப்பட்டதாக மனுவில் குறிப்பிட்டுள்ள சரத் பொன்சேகா, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை கொலை செய்ய முயன்றவரான விடுதலைப் புலிகளின் ஒரு தற்கொலைக் குண்டுதாரிக்கு ஜோன்ஸ்டன் உதவியும் ஒத்தாசையும் புரிந்தவர் என்ற குற்றச்சாட்டு தொடர்பாக குற்றப்புலனாய்விலிருந்து தம்மை விடுவித்துக் கொள்வதற்காக அரசாங்கத்துடன் உடன்பாடு ஒன்றைச் செய்துகொண்டவர் என்ற வகையில் குற்றஞ்சாட்டப்பட்டிருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.


போல் அசோஸியேட்ஸ் நிறுவனத்தின் ஊடாக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த றிட் மனுவில் இராணுவ நீதிமன்றத்தின் முழுச் செயற்பாடுகளுமே நியாயமற்ற முறையில் மேற்கொள்ளப்பட்டதாகவும் முக்கிய சாட்சிகள் குறுக்கு விசாரணை செய்யப்படுவதற்கு அனுமதிக்கப்படவில்லை என்றும் தம்மைத் தற்காத்துக் கொள்வதற்குத் தமது சட்டத்தரணிகள் அனுமதிக்கப்படவில்லை என்றும் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவைக் குறுக்கு விசாரணை செய்வதற்குத் தமது சட்டத்தரணிகள் அனுமதிக்கப்படவில்லையென்று தெரிவித்துள்ள பொன்சேகா, பின்னர் ஜோன்ஸ்டன் அரசாங்கத்தில் சேர்ந்துவிட்டார் என்றும் குறிப்பிட்டுள்ளார். இந்த மனுவில் ராணுவத் தளபதி ஜெகத் ஜெயசூரிய, இராணுவ நீதிமன்ற உறுப்பினர்கள் எச்.எல்.வீரதுங்க, ஏ.எல்.ஆர்.விஜேதுங்க, டி.ஆர்.ஏ.பி.ஜயதிலக மற்றும் நீதிவான் அட்வக்கேட் டபிள்யூ. ஜே.என். பெர்னாண்டோ, பிரதி சட்டமா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

கடந்த ஜனவரியில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் இராணுவச் சட்டத்தின் கீழ் தாம் கைதுசெய்யப்பட்டார் என்றும் பலவந்தமாக மரியாதைக்குறைவாகவும் அவமானப்படுத்தும் விதத்திலும் இழுத்துச் செல்லப்பட்டார் என்றும் தெரிவித்துள்ள பொன்சேகா, பின்னர் தாமும் தமது ஆதரவாளர்கள் பலரும் இராணுவ நீதிமன்ற விசாரணைக்குட்படுத்தப்பட்டனர் என்றும் தெரிவித்துள்ளார்.

ஆரம்பத்திலிருந்தே சட்டத்தரணிகளை தாம் சந்திப்பதற்கு கட்டுப்பாடு விதிக்கப்பட்டிருந்தது என்றும் தம் தரப்பில் தெரிவிக்கப்பட்ட பல ஆட்சேபனைகளை குறிப்பாக இராணுவ நீதிமன்ற அமைப்புப் பற்றிய ஆட்சேபனைகளை இராணுவ நீதிமன்றின் நீதிபதி அட்வகேட்டினால் நிராகரிக்கப்பட்டுவிட்டன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த வழக்கில் பிரதான சாட்சியாகவிருந்தவர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ ஆவார். ஆனால் பெர்னான்டோவின் நம்பகத்தன்மை மற்றும் தமக்கெதிராக அவர் சாட்சியமளிப்பதன் நோக்கம் தொடர்பாக அவரிடமிருந்து தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்காக குறுக்கு விசாரணையின் போது முன்வைக்கப்பட்ட விடயங்கள் இராணுவ நீதிமன்றத்தினால் நிராகரிக்கப்பட்டுவிட்டன என்றும் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப)



முதல்வர் கருணாநிதியை அவரது இல்லத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் எம்.பி. மரியாதை நிமித்தமாக சந்தித்துப் பேசினார். அதன்போது அவரது மனைவி லீலாதேவி, மகன் செந்தூரன் ஆகியோர் உடனிருந்தனர்.

## தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் ஸ்ரீதரனின் சொற்பொழிவு

யாழ்ப்பாணம்,செப்.25

மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் யாழ்ப்பாணம் நாச்சிமார் கோயிலடி சிவநெறிக்கலாநிதி இராசையா ஸ்ரீதரன் 'பாடும் பணி' என்னும் பொருளில் தெய்வீக இசைச்சொற்பொழிவு நிகழ்த்தவுள்ளார். (ஐ)

## தவறவிடப்பட்ட பை பருத்தித்துறை சாலையில்

யாழ்ப்பாணம்,செப்.25

கரவெட்டி இராச கிராமத்தைச் சேர்ந்த ஜெகன் ரசிதா தே.அ.அ. இல.855995085V என்பவரது தேசிய அடையாள அட்டையும் பெறுமதிமிக்க பொருள்களும் சிறிய கைப்பையுடன் இ.போ.ச. பருத்தித்துறை சாலை நடத்துநர் ஒருவரால் இ.போ.ச.பருத்தித்துறை சாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் அலுவலக நேரத்தில் நேரில் சமுகமளித்து இதனைப் பெற்றுக்கொள்ளுமாறு சாலை முகாமையாளர் செ.குலபாலச்செல்வம் அறிவித்துள்ளார். (ஐ)

## அளவெட்டியில் இன்று குருதிக் கொடை

யாழ்ப்பாணம்,செப்.25

அளவெட்டி அபிவிருத்தி மன்றம் மற்றும் மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகம், கோணேஸ் 'மற்ஸ்' அக்கடமியின் பழைய மாணவர் சங்கம் ஆகியன இணைந்து நடத்தும் குருதிக்கொடை முகாம் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணியளவில் அளவெட்டி மகாஜன சபைத் திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

'உயிர்காக்கும்' உன்னதமான இரத்ததானத்திற்கு அனைவரையும் தவறாது பங்கேற்குமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (ஐ-9)

## தீவகப் பிரதேசத்தில் நாளை மின்தடை

யாழ்ப்பாணம்,செப்.25

பொன்னாலை - காரைநகர் வீதியில் வீதி அகலமாக்கும் பணிகளுக்காக உயரழுத்த மின்கம்பங்களை இடமாற்ற வேண்டியிருப்பதால் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியிலிருந்து மாலை 4 மணிவரை காரைநகர் ஊர்காவற்றுறை, வேலணை, சரவணை, அல்லைப்பிட்டி ஆகிய பிரதேசங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின்சார சபையின் யாழ்.பிரதேச மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார். (ஐ)

## யாழ்.ஆஸ்பத்திரியில் கண்டெடுக்கப்பட்ட அ.அட்டைகள்

யாழ்ப்பாணம்,செப்.25

யாழ்.போதனா வைத்தியசாலை வளாகத்தில் கண்டெடுக்கப்பட்ட இரு அடையாள அட்டைகள் வைத்தியசாலை அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

புலோலி தெற்கு, மாலியத்திடலைச் சேர்ந்த ஆசிரியையான பொன்னுத்துரை சரோசாமலர் என்பவரின் அடையாள அட்டையும் நல்லூர் மத்தி ஆசீர்வாதப்பர் வீதியைச் சேர்ந்த பவானந்தி அன்பழகேந்திரன் என்பவரின் தற்காலிக அட்டையுமே ஒப்படைக்கப்பட்டுள்ளன.

உரியவர்கள் தகுந்த ஆதாரத்துடன் வைத்தியசாலை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளுமாறு பணிப்பாளர் கேட்டுள்ளார். (ஐ)

# நாம் சகலதையும் இழந்துவிட்டோம்; இனி இழப்பதற்கு எதுவும் இல்லை!

## குழந்தைகளுடன் சிறையிலுள்ள தாய்மார் முதற் பெண்மணி ஷிராந்திக்குக் கடிதம்

கொழும்பு,செப்.25

''நாங்கள் சகலதையும் இழந்துவிட்டோம். இனி இழப்பதற்கு எங்களிடம் எதுவுமில்லை. எங்களது பிள்ளைகளின் எதிர்காலத்தைக் கருத்தில்கொண்டு எங்களை விடுவிக்க உதவுங்கள்.''

மேற்கண்டவாறு தங்களது குழந்தைகளுடன் சிறைகளில் வாடும் தாய்மார், முதற்பெண்மணி ஷிராந்தி ராஜபக்ஷவுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் உருக்கமாக வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இத் தாய்மார் தமது குழந்தைகளுடன்சிறையில் அவல வாழ்க்கை வாழ்கின்றனர். எதுவித விசாரணையுமின்றி இவர்கள் சிறையில் தவிக்கின்றனர்.

இது தொடர்பாக அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருப்பவை வருமாறு:-

மகளிர் மற்றும் சிறுவர்களுக்கான அமைப்பின் இயக்குநரும் இலங்கையின் முதற் பெண்மணியுமாயிருக்கின்ற நீங்களும் எங்களைப் போன்ற ஒரு தாயே. எங்களைப் போன்று உங்களுக்கும் பிள்ளைகள் உள்ளனர். அவர்களை சமூகத்தில் நல்ல நிலைக்கு கொண்டுவருவதற்கு நீங்கள் எவ்வளவு பாடுபட்டிருப்பீர்கள் என்பதை நாமறிவோம்.

ஆதலால் எங்கள் ஏக்கங்களையும், கவலைகளையும் புரிந்துகொள்வீர்கள். அரசியல் கைதிகளாகத் தடுத்துவைக்கப்பட்டுள்ள பெண்கள் மற்றும் தாய்மார்களான நாங்கள் மிகவும் பணிவுடன் வேண்டிக்கொள்வது யாதெனில் -

காலங்கள் பல கடந்தும் கவனிப்பார் யாரும் இன்றி பயங்கரவாதம் மற்றும் அவசரகாலச் சட்டவிதிகளின் கீழ் எவ்வித தீர்வும் இல்லாமல், எப்போது விடுதலை என்றுகூட அறியமுடியாமல் சிறைகளில் தினம் தினம் கண்ணீரும் கவலைகளுமே சொந்தமாகிப் போன நிலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளோம்.

எங்களைப் போன்ற பல பெண்கள் இலங்கையிலுள்ள பல சிறைச்சாலைகளில் கண்ணீருடன் தங்கள் எதிர்காலத்தை இழந்து அடுத்தது என்ன என தெரியாமல் வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். எம்மில் பலர் தங்கள் குழந்தைகளுடன் குழந்தைகளின் எதிர்காலமே கேள்விக்குறியாகிய நிலையில் வாழ்கின்றனர். இவர்களில் சிலர் கருவிலேயே குழந்தையைச் சுமக்கும்போது கைதுசெய்யப்பட்டவர்கள்; சிறையிலேயே தங்கள் குழந்தையைப் பெற்றெடுத்தவர்கள்.

கணவன் காணாமல் போக அவரைத்தேடி தன்னுடைய குழந்தையுடன் கொழும்பு வந்த சமயம் 2008.11.03 அன்று கைது செய்யப்பட்டுள்ள ரவிச்சந்திரன் விஜிதா. இவர் சுன்னாகம், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர். 2007.10.04 அன்று பிறந்த குழந்தை யான ஆரணி தாயுடன் தற்போது சிறையில் உள்ளார்.

தர்சன் தங்கலா என்பவர் 2009.04.21 அன்று கர்ப்பிணியான நிலையில் இறுதி யுத்தத்தின்போது சரணடைந்தவர். இவர் 2009.12.12 அன்று சிறையில் தர்சிகன் என்னும் ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தார்.

சந்திரகுமார் ஜெயந்தினி 2008.03.03 அன்று கைதுசெய்யப்பட்டார். இவரும் 2008.10.03 அன்று சிறையில் விதுஜன் என்னும் ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தார். இவர் செட்டிக்குளம் வவுனியாவைச் சேர்ந்தவர்.

இதைவிட லட்சுமணன் அன்னலெட்சுமி 2007.07.02 அன்று கைது செய்யப்பட்டவர். இவருக்கு குணாளன் (பிறப்பு 2006.09.07) என்னும் ஆண் குழந்தையுள்ளது. இவர் கெக்கிராவை கொக்குப்பட்டியைச் சேர்ந்தவர்.

லிங்கேஸ்வரன் லதாஜனி 2009.07.22 அன்று விமான நிலையத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டவர். இவருக்கும் கேதினி (பிறந்த திகதி 2009.01.26) எனும் பெண் குழந்தையுள்ளது. இவர் பூந்தோட்டம் வவுனியாவைச் சேர்ந்தவர்.

இவர்கள் எல்லோரும் தங்கள் குழந்தைகளுடன் சிறையில் வாடுபவர்கள். இவை தவிர, இன்னும் பல பெண்கள் பல சிறைச்சாலைகளில் தங்கள் குழந்தைகளுடன் துன்புற்று வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். இன்னும் ஒருசில பெண்கள் கைதுசெய்யப்பட்ட பின்னர் மனநோயாளியானார்கள்.

நாம் எமது குழந்தைகளை சிறையில் வைத்துக்கொண்டு வேறு குற்றச்செயல்களுடன் ஈடுபட்டவர்களுடன் ஒன்றாக சிறைவைக்கப்பட்டிருப்பதனால் பிள்ளைகளின் மனநிலையும் மிகவும் பாதிக்கப்படுகின்றது.

அம்மா, அப்பாவை நாம் எப்போது பார்ப்போம்? அப்பா எங்கே? என்ற பிள்ளைகளின் ஏக்கங்களை எல்லாம் தாங்க முடியவில்லை. அவர்களுக்கு ஆரம்பகல்வியைக் கூட வழங்க முடியவில்லை. ஆரோக்கியமாக ஊட்டச்சத்துள்ள உணவுகளைக் கூட கொடுக்கமுடியவில்லை.

நாம் எப்போது விடுதலையாவோம்; எம்வாழ்வில் எப்போது வசந்தம் மலரும் என்ற அங்கலாய்ப்புகளுக்கும் ஏக்கங்களும் எம்மைச் சூழ்கின்றன. நாம் விடுதலையாகி வீடு போகையிலும் ஒரு பெண் என்ற வகையில் இச்சமூகத்தில் எமக்கு என்ன பெயர் கிடைக்குமென எண்ணிப் பாருங்கள்.

எனவே எமக்கும் எம்மைப் போன்ற அனைவருக்கும் பிணையிலோ அல்லது பொது மன்னிப்பிலோ விடுதலை செய்வதற்கு உதவி செய்யுங்கள் என உங்களைக் கேட்டுக்கொள்கின்றோம்.

மகளிர் மற்றும் சிறுவர்களுக்கான பல முன்னேற்றகரமான வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வரும் நீங்கள், குறிப்பாக போரினால் பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் சிறார்களுக்கு ஆற்றிவரும் சேவை பாராட்டத்தக்கது.

நிச்சயம் எங்கள் பிள்ளைகளினதும் எங்களினதும் உணர்வுகளைப் புரிந்துகொள்வீர்கள் என்ற எதிர்பார்ப்புடன் உங்கள் மீது நம்பிக்கை கொண்டு உங்கள் சேவை தொடரும் என நாங்கள் காத்திருக்கின்றோம். இப்படி அக்கடிதத்தில் உள்ளது. (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# மனமாற்றமின்றி உள்நாட்டில் தீர்வு சாத்தியமாவது எவ்வாறு?

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு, வெளிச் சக்திகளால் திணிக்கப்படும் எந்த வகைத் தீர்வும் முழுமையாகத் தோல்வி அடையும். அது விரோதத்தைத் பெரிதாக்கும். இதுவே நாம் இதுவரை கண்ட வரலாறு. ஆகவே, இனப்பிரச்சினைக்கான எந்தவொரு தீர்வும் உள்நாட்டில் உருவாகி வந்தால் மட்டுமே வெற்றிபெறும்.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை, ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபைக் கூட்டத்தில் பேசுகையில், எங்கள் நாட்டின் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வெளியிட்ட பிரதான கருத்துக்களில் இதுவும் ஒன்றாகும். உலக நாடுகளின் தலைவர்களின் முன்னால் அவர் வெளிப்படுத்திய இந்தக் கருத்து, எங்கள் நாட்டினது மிக முக்கியமான பிரச்சினையுடன், விவகாரத்துடன் சம்பந்தப்பட்டது.

இந்த நாட்டினை 1952 ஆம் ஆண்டு பீடித்து, இதுவரை தீர்க்கப்படாது, இப்போது கிணற்றில் போட்ட கல்லாகி விட்டது இனப்பிரச்சினை.

சிங்கள மக்கள் நாட்டின் பெரும்பான்மை எண்ணிக்கையினராக உள்ளதாலும், தமிழ், முஸ்லிம் மக்கள் எண்ணிக்கையில் குறைந்தவர்களாக இருப்பதாலும், பெரும்பான்மையினரே மேலோங்கியவர்கள், அடுத்த இரண்டு இனங்களைச் சேர்ந்த மக்களும் இரண்டாந்தரப் பிரசைகளாகவே வாழ வேண்டும் என்ற மேலாண்மை எண்ணம் அரசியல் களத்தில் ஆழக் கால் ஊன்றியுள்ளது.

நாட்டு மக்கள் எந்த இனத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், சம உரிமைகளை உடையவர் என்ற வகையில் சம அந்தஸ்துடன் வாழ வழிசெய்யப்பட வேண்டும் என்ற தமிழர்களின் கோரிக்கையை சிங்களத் தலைவர்கள் ஏற்றுக் கொள்ள மறுத்தனர். ஆட்சியில் இருந்த அரசாங்கங்கள் அனைத்தும், தமிழ் மக்களை அரசியல் ரீதியாக ஒடுக்கு வதிலும் அவர்களின் பூர்வீக பூமிகள், அதிகாரங்களைத் தமதாக்கி, கபளீகரம் செய்வதிலுமே கண்ணும் கருத்துமாக இருந்தன.

1952 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பதவிக்கு வந்த அரசாங்கங்கள் யாவும், தமிழ் மக்களின் பிறப்புரிமைகளை இல்லாது ஒழிப்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தன. தமிழர்களும், முஸ்லிம்களும் இந்த நாட்டின் பிரசைகளே என்பதனை, சம உரிமை உள்ளவர்களே என்பதனை ஏற்க மறுத்து வந்தன.

அதனால், உள்நாட்டில் எல்லோரும் இந்நாட்டு மக்கள், சமஉரிமை கொண்டவர்கள் என்ற நியாயமான நிலையை உருவாக்கவல்ல தீர்வை இனப்பிரச்சினைக்கு எட்ட முடியாமற்போயிற்று.

ஒரு குறிப்பிட்ட கட்சி ஆட்சியில் இருக்கும் போது கொண்டு வரும் சிறிதளவு நியாயமான தீர்வைத் தானும் நிறைவேறாது, தடுத்துக் கொட்டிக் குழப்புவதிலேயே எதிர்த்தரப்பு கண்ணாயிருந்தது. அதனால் இனப்பிரச் சினை உள்நாட்டில் தீர்க்கப்பட முடியாத விவகாரமாக மாறியது.

தமிழ் மக்களின் சாத்வீகமான, நியாயமான கோரிக்கைகள், தீர்வு யோசனைகள் யாவும் சிங்களத் தலைமைகளால் கால்களில் போட்டுக் கடாசப்பட்டன. இனத் துவேசம் கட்டவிழ்த்து விடப்பட்டு, இறுதியில் இன அழிப்புகள் நடத்தப்பட்டன.

அவற்றின் பெறுபேறாக வெடித்தது தான் தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டம். அதனை இல்லாமற் செய்யும் இலக்குடன் கைச்சாத்தாகிய இந்திய - இலங்கை (ராஜீவ் - ஜே.ஆர்.) ஒப்பந்தமும் 23 வருடங்களாகியும் முழு அளவில் நிறைவேற்றப்படாத முடக் கழுதையாக முடங்கிக் கிடக்கிறது.

இனப்பிரச்சினைக்கு எந்த ஒரு தீர்வும் உள் நாட்டில் இருந்து உருவாகி வந்தால் மட்டுமே வெற்றி பெறும் என்று ஜனாதிபதி மஹிந்த கூறுவது வாஸ்தவம் தான். ஆனால் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் உள்ள, பிரச்சினைக்கு ஓரளவேனும் தீர்வு தரக்கூடிய அம்சங்களை அடித்து நொறுக்கியதில் ஜனாதிபதி மஹிந்தவுக்கும் பெரிய பங்குண்டு. ஆகப்பிந்தி, வடக்கு - கிழக்கு இணைப்பை நீதிமன்றம் மூலம் துண்டித் ததன் பின்னணியில் நின்றது அவரது அரசாங்கமும் அதில் அங்கம் வகித்தவர்களுமே என்பது உலகறிந்த உண்மை.

மொத்தத்தில்-

பாதிக்கப்பட்டவர்களின் உரிமைகளை நியாயமான முறையில் எமது நாட்டிலேயே தீர்ப்பது தான் சிறந்தது; நிலைத்து நிற்கக் கூடியதும், நாட்டின் வளர்ச்சிக்கு வகை செய்யக்கூடியதும் அதுவே என்பதில் இரண்டு கருத்துக்கள் இருக்க முடியாது. ஆனால் அத்தகைய தீர்வு ஒன்றை வகுக்கக் கூடிய தூரநோக்கும், பெருந்தன்மையும், சகோதரத்துவ உணர்வும் சிங்கள அரசியல் தலைவர்களிடம் இல்லை என்பதே கடந்த ஆறு தசாப்த கால அனுபவம்.

தென்னிலங்கையில் இரண்டு பெரிய கட்சிகளில் ஒன்று நியாயபூர்வமான தீர்வு ஒன்றைக் கொண்டுவர எண்ணும் போதே, அடுத்த கட்சி முளையிலேயே அதனைக் கிள்ளிவிட திட்டம் போட்டு மக்களைத் தூண்டி விடும்.

உள்நாட்டில் நீதியான; நியாயமான, பாரபட்சமற்ற தீர்வைக் கொண்டு வரக்கூடிய இதயசுத்தி, சிங்கள அரசியல் தலைவர்களிடம் அப்போதும் இருந்ததில்லை; இப்போதும் இல்லை என்பதே இந்நாட்டு அரசியலில் தொடரும் சாபக்கேடு.

அவ்வாறிருக்க, உள்நாட்டு மட்டத்தில் தீர்வை உண்டாக்குவது எங்கள் இலங்கையில் சாத்தியப்படுமா என்பது அனுபவத்தின் பால் எழுந்துள்ள கேள்வியாகவே எப்போதும் தொக்கி நிற்கிறது!....!

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு முன்னோடியாக நீண்ட கால இடைவெளியின் பின்னர் அடைந்த, நோர்வேயின் மத்தியஸ்தத்தில் உருவான போர் நிறுத்தத்தை பேணி அமைதி நிலையை நிரந்தரமாக்க முடியாத ஆட்சியில், எப்போதும் ஏற்கக்கூடிய தீர்வை எட்டுவதற்கு உள்நாட்டில் வழிசெய்வது, வழிவிடுவது சாத்தியப் படுமா? அது சாத்தியமானால், வெளிச்சக்திகளால் தீர்வுகள் திணிக்கப்படுவதற்கு இடம் இருக்காது.

மொத்தத்தில் எல்லாமே,இந்த நாட்டின் அரசுகளிடமும் அரசாங்கத் தலைவர் களிடமும் அரசியல் தலைவர்களிடம் இருந்து பிறக்க வேண்டியவை. தமிழர்களும் இந்த நாட்டின் பிரதான இனங்களில் ஒன்று என்பதனை மனங்கொள்ளாமல் உருவாக்கப்படும் தீர்வுகள் தோல்வி காணும்; அறுபது வருட அனுபவமும் அதுவே.

# கோப்பாய் நாவலர் ம.விக்கு புதிய கட்டடங்கள் அமைக்க ஊவா மாகாணசபை நிதி உதவி

யாழ்ப்பாணம், செப்.25

ஊவாமாகாண சபையின் நிதியுதவியுடன் கோப்பாய் நாவலர் மகா வித்தியாலயத்தில் பல்வேறு அபிவிருத்தி திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

புதிய கட்டடங்களை அமைப்பதற்கு முதற்கட்டமாக 5 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக வட மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வடபகுதியில் யுத்ததால் பாதிப்பு அடைந்துள்ள பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்கு ஊவா மாகாண சபை பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளவுள்ளது.

அதன் முதற்கட்ட நடவடிக்கையாக கோப்பாய் நாவலர் மகாவித்தியாலயத்தினை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

யாழ். கல்வி வலயத்தின் ஊடாக மேற்கொள்ளவுள்ள இந்த அபிவிருத்திப் பணிகளுக்கு யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்கவின் நேரடி கண்காணிப்பில் இராணுவத்தினர் பணிக்கமர்தப்படவுள்ளனர்.

இந்த அபிவிருத்திப் பணிகளுக்கு முதற்கட்டமாக யாழ். கல்வி வலயத்திற்கு 2 மில்லியன் ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளது.

பெரும்பாலும் அடுத்தவார முற்பகுதியில் புதிய கட்டடத்துக்கான அடிக்கல் நடும் வைபவம் இடம்பெறும் என்றும் அவர் தெரிவித்தார். (ஐ-9)

# வன்னியில் மீள இயங்கும் பாடசாலைகளுக்கு அடுத்தவாரம் புதிய தளபாடங்கள் வழங்க ஏற்பாடு

## மாகாணக் கல்விப் பணிப்பாளர் தகவல்

யாழ்ப்பாணம், செப்.25

வன்னிப் பகுதியில் மீளவும் இயங்கத் தொடங்கியுள்ள பாடசாலைகளுக்கு புதிய தளபாடங்கள் அடுத்த வாரம் வழங்கப்படவுள்ளன.

இதற்கான ஏற்பாடுகளை வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி மேற்கொள்ளவுள்ளதாக மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கிளிநொச்சி, முல்லைத்தீவு, மாவட்டங்களில் மீளவும் செயற்படத் தொடங்கி உள்ள பாடசாலைகளில் தளபாடங்களின் பற்றாக்குறை காணப்படுவதாக அதிபர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதனால் வன்னிப் பகுதியில் மீளவும் செயற்படத் தொடங்கியுள்ள பாடசாலைகளுக்கு புதிய தளபாடங்களை வழங்குவதற்கு துரித நடவடிக்கைகளை வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி மேற்கொண்டுள்ளார்.

பெரும்பாலும் அடுத்த வாரமளவில் இந்த தளபாடங்கள் வடமாகாண ஆளுநரால் அந்தந்த வலயக் கல்விப் பணிப்பாளர்களிடம் கையளிக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-9)

# எரிபொருள் நிலைய ஊழியர்களுக்கு ஒக்ரோபர் மாதம் முதல் சீருடைகள்

யாழ்ப்பாணம், செப்.25

யாழ். மாவட்டத்தில் சகல எரிபொருள் நிலையங்களிலும் கடமையாற்றும் பணியாளர்களுக்கு ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதி முதல் சீருடைகள் வழங்கப்படவுள்ளதாக கூட்டுறவுச் சங்கங்களின் உதவி ஆணையாளர் க.அருந்தவநாதன் தெரிவித்தார்.

சிவப்பு நிறத்தில் கூட்டுறவு சங்கத்தின் சின்னம் பொறிக்கப்பட்டு வடிவமைக்கப்பட்ட சீருடைகளை எரிபொருள் நிலையங்களில் பணிபுரியும் அனைத்துப் பணியாளர்களுக்கும் இலவசமாக வழங்கப்படவுள்ளதாகவும் தனியார் எரிபொருள் நிலையங்களின் பணியாளர்களுக்கு இவை வழங்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (த-201-313-318)

# விஞ்ஞான பீட புதுமுக மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு செவ்வாயன்று

யாழ்ப்பாணம், செப்.25

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்திற்கு 2009/2010 ஆம் கல்வி ஆண்டுக்குத் தெரிவுசெய்யப்பட்ட புதுமுக மாணவர்களுக்கான வரவேற்பு நிகழ்வு நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 8 மணிக்கு யாழ். பல்கலைக்கழக பரமேஸ்வரன் ஆலயத் தில் இடம்பெறவுள்ளதாக விஞ்ஞானபீட மாணவர் ஒன்றியத் தலைவர் எஸ். ஐங்கரன் அறிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் புதுமுக மாணவர்கள் அனைவரையும் குறித்த நேரத்துக்கு ஒன்றுகூடுமாறு அவர் மேலும் தெரிவித்தார். (16)

# குடமியன் அ.த.க.வில் கட்டடம் திருத்தப்படாததால் மரநிழலில் கல்வி பயிலும் நிலையில் மாணவர்கள்

தென்மராட்சி, செப்.25

குடமியன் அ.த.க. பாடசாலை மாணவர்கள் மர நிழலிலும் மாணவர்களால் அமைக்கப்பட்ட ஓலைக் கொட்டில்களிலும் கல்வி கற்கின்றனர்.

தரம் 6 தொடக்கம் 9 வரையான வகுப்புகள் அமைந்திருந்த வகுப்பறை தொகுதி திருத்த வேலைக்காக கழற்றப்பட்டு நீண்ட காலமாக திருத்தப்படாமல் உள்ளதால் மாணவர்கள் மர நிழலில் அமர்ந்து கற்பதாகப் பெற்றோர் தெரித்தனர்.

மழை காலம் ஆரம்பிப்பதற்கு முன்னர் வகுப்பறைத் தொகுதியினை புனரமைக்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ளமாட்டார்களா எனவும் பெற்றோர் கேட்டுள்ளனர். (ஐ-207)

# மீசாலையில் விபத்து சைக்கிளோட்டி காயம்

மீசாலை ஏ-9 வீதியில் நேற்று இடம்பெற்ற ஓட்டோ மோட்டார் சைக்கிள் விபத்தில் மோட்டார் சைக்கிளோட்டி காயமடைந்தார்.

சம்பவத்தில் இதே இடத்தைச் சேர்ந்த இராஜேந்திரா (வய 56) என்பவரே காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத் தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். (ஐ-207)

# விஜே டயஸின் விரிவுரை நாளை யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம், செப்.25

ரஷ்யப் புரட்சியின் தலைவர்களில் ஒருவரும் நான்காம் அகிலத்தின் ஸ்தாபகருமான லியொன்ட் ரொஸ்சி, கொலை செய்யப்பட்ட 70 ஆவது ஆண்டினை நினைவு கூருமுகமாக சோசலிச சமத்துவக்கட்சி, நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ்ப்பாண ப.நோ.கூ. சங்க மண்டபத்தில் 'நிரந்தரப் புரட்சிக் கோட்பாடும் தெற்காசிய சமூக நெருக்கடியும்' என்ற தலைப்பில் விரிவுரையை ஒழுங்கு செய்துள்ளது.

இவ்விரிவுரை, சோசலிச சமத்துவக் கட்சியின் பொதுச்செயாளரும் உலக சோசலிச வலைத் தளத்தின் சர்வதேச ஆசிரியர் குழு உறுப்பினருமான விஜே டயஸ் நிகழ்த்துவார். (ஐ)

# வடமராட்சி கிழக்கில் சேவையில் ஈடுபட 4 தனியார் பேருந்துகளுக்கு அரச அதிபர் அனுமதி

யாழ்ப்பாணம், செப்.25

வடமராட்சி கிழக்கில் அண்மையில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட பகுதிகளில் 4 தனியார் பேருந்துகள் சேவையில் ஈடுபடுவதற்கான அனுமதியை அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் வழங்கியுள்ளார்.

வடமராட்சி கிழக்கில் மீள்குடியேறியவர்களின் அபிவிருத்தி தொடர்பாக அண்மையில் பாரம்பரிய கைத் தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஆழியவளை - பருத்தித்துறை, ஆழியவளை - யாழ்ப்பாணம் ஆகிய இரு மார்க்கங்களிலுமே இந்தப் தனியார் பேருந்துச் சேவை இடம்பெறவுள்ளது. இதேவேளை அரச பேருந்துச் சேவை கடந்த 14 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கூட்டம் பிற்போடப்பட்டது

நவாலி, செப்.25

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் இன்று சனிக்கிழமை நடைபெறவிருந்த முதியோர் சங்க கூட்டமும் விசேட தேவைக்குரியோருக்கான கூட்டமும் தவிர்க்க முடியாத காரணத்தினால் நாளை மறுதினம் திங்கள் நடைபெறும்.

முதியோர் சங்க கூட்டம் பி.ப. 2.30 மணிக்கும் விசேட தேவைக்குரியோரின் கூட்டம் பி.ப. 3.30 மணிக்கும் நடைபெறும்.

இக்கூட்டத்தில் விசேட தேவைக்குரியோரின் சுயதொழில் கொடுப்பனவின் இரண்டாம் கட்டம் வழங்கப் படவுள்ளதால் அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு சமூக சேவை உத்தியோத்தர் வி.அருந்தவராசா கேட்டுள்ளார். (201-100)

# கொடிகாமத்தில் வியாழனிரவு வர்த்தகர் தாக்கப்பட்டார்

தென்மராட்சி, செப்.25

கொடிகாமம் நகர்ப் பகுதி வர்த்தகர் நேற்றுமுன்தினம் இரவு இனந்தெரியாதோரால் தாக்கப்பட்டுள்ளார்.

இரவு வீட்டுக்கு சென்று அழைத்து தாக்கியதாக தெரிவிக்கப்பட்டது.

காயங்களுக்கு இலக்கான இவர் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டது. (ஐ-207)

## நாளை

| | |
|---|---|
| புரட்டாதி 10 | 26.09.2010 |
| | ஞாயிற்றுக்கிழமை |
| திதி: | : திருதியை |
| | மு.இ.07.05 வரை |
| நட்சத்திரம் | : அச்சவினி |
| | பி.ப. 04.05 வரை |
| [illegible]நேரம் | : 09.02-10.32 வரை |
| ராகுகாலம் | : 04.32-06.03 வரை |

# பருத்தித்துறை வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் சிறுவன் யார்?



வடமராட்சி,செப்.25

பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் உளநலச் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருக்கும் சிறுவனுடன் தொடர்புடையவர்கள் வைத்திய சாலையின் வைத்திய அத்தியட்சகருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

சுமார் 13 முதல் 15 வயது மதிக்கத்தக்க சிறுவன் ஒருவன் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றக் கட்டளையின் பிரகாரம் உளநலச் சிகிச்சைக்காக பருத்தித் துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளான்.கொழும்பு பம்பலப்பிட்டியில் இருந்து வந்ததாகக் கூறும் இந்தச் சிறுவன் தனது பெயரை லக்ஸன் என்று கூறிக்கொள்கிறான். இவன் தமிழ் சொற்களையே பயன்படுத்துவதால் தமிழராகக் கருதப்படுகிறது. இவர் தொடர்பான மேலதிக தகவல்களைப் பெறமுடியவில்லை.

எனவே இவருடன் தொடர்புடையவர்கள் 0212263261, 0212263262 என்ற தொலைபேசி இலக்கக்கங்களுடன் தொடர்புகொள்ளுமாறு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் அறிவித்துள்ளார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர்ப் பூக்கள்



அமரர் வீரன் வடிவேல் அவர்களின் (கல்விசாரா ஊழியர், கிளி/கனகபுரம் ம.வி.) மரணச் செய்தி கேட்டுத் துயரடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
கிளி/கனகபுரம் ம.வி.,
கிளிநொச்சி.

(103758)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறொயிலர் தினமும் சுத்தஞ் செய்து கொடுக்கப்படும். 1 Kg 550/=
தொடர்பு: தாசன் பாம்,
158/4, கோயில் வீதி, நல்லூர்.

## விற்பனைக்கு

HB Branded Computers
3.2 GHz (HT), 1GB DDR2 Ram, 80GB SATA HD, Combo Drive. 22,000/=
தொடர்பு : 0217394470

## வேலையாள்கள் தேவை

சாவகச்சேரி நகர்ப்பகுதியில் உள்ள தேனீர் கடைக்கு சப்ளையர் தேவை.
தொடர்பு : 0779905374

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

### சித்தமருத்துவப் பிரிவு

### அறிவித்தல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சித்த மருத்துவப் பிரிவுக்குப் புதிதாக அனுமதிக்கப்பட்டுள்ள முதலாம் வருட மாணவர்களுக்கான ஆரம்ப அறிமுக நிகழ்வு எதிர்வரும் 27.09.2010ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளதால் மேற்படி அறிமுக நிகழ்வில் தவறாது கலந்துகொள்ளுமாறு புதிய மாணவர்கள் அனைவரும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

பதிவாளர்
24.09.2010

(சி/371331)

## அறிவித்தல்

மானிப்பாய் கிராம உப அலுவலகம்
ஆதனப் பெயர் மாற்றம்
வட்டாரம் 04, சுதுமலை வீதி,
ஆதன இல. 47

வட்டாரம் 04, சுதுமலை வீதி, ஆதன இலக்கம் 47இல் அமைந்துள்ள ஆதனமானது பெருமாள் கயம்புவும் பெண் செல்வராணியும் என்பவர்களால் சீதனமாக வழங்கப்பட்டு, சுப்பிரமணியம் சுதாகரன் பெண் பிரதீபா என்பவர்களால் 938/25.06.2004ஆம் திகதி எழுதப்பட்ட உறுதிமூலம் குறித்த ஆதனமானது தமக்குச் சொந்தம் என்பதைத் தெரியப்படுத்தி, எமது ஆதனப் பதிவேட்டில் தமது பெயரை மாற்றஞ் செய்வதற்காகப் பெயர்மாற்றத்துக்கு விண்ணப்பித்துள்ளனர். இவ்வாதனத்துக்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள், ஆவணங்களுடன் எழுத்துமூலமாக 14 நாள்களுக்குள் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். அவ்வாறு எவராலும், எவ்வித உரிமையும் கோரப்படாதவிடத்து சுப்பிரமணியம் சுதாகரன் பெண் பிரதீபா எனும் பெயருக்கு மேற்குறித்த ஆதனம் பெயர்மாற்றஞ் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

திருமதி பு.சிவலிங்கம், செயலாளர்,
வலி.தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய். (103756)

## காணி விற்பனைக்கு

மீசாலை கிழக்கு, அல்லாரை, கச்சாய் வீதியில் பத்தினியார் றோட்டில் காட்டு வளவு கந்தசாமி கோயிலுக்கு அண்மையில் 2½ பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு : 0776354224

## BARNABAS

எலக்ரோனிக்ஸ் டெக்னீசியன்ஸ் (Electronics Technicians) தேவை
சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்




தொடர்பு: 0777448668

## அறிவித்தல்

மானிப்பாய் கிராம உப அலுவலகம்
ஆதனப் பெயர் மாற்றம்
வட்டாரம் 04, எச்சாட்டி வைரவர் கோயில் ஒழுங்கை,
ஆதன இல. 10/11

வட்டாரம் 04, எச்சாட்டி வைரவர் கோயில் ஒழுங்கை, ஆதன இலக்கம் 10/11இல் அமைந்துள்ள ஆதனமானது நாகலிங்கம் துரைராஜா என்பவரால் சீதனமாக வழங்கப்பட்டு, கோபாலகிருஷ்ணன் நாகராசா பெண் சந்திரா என்பவர்களால் 4859/30.05.2002ஆம் திகதி எழுதப்பட்ட உறுதிமூலம் குறித்த ஆதனமானது தமக்குச் சொந்தம் என்பதைத் தெரியப்படுத்தி, எமது ஆதனப் பதிவேட்டில் தமது பெயரை மாற்றஞ் செய்வதற்காகப் பெயர் மாற்றத்துக்கு விண்ணப்பித்துள்ளனர். இவ்வாதனத்துக்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருந்தால், அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள், ஆவணங்களுடன் எழுத்துமூலமாக 14 நாள்களுக்குள் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். அவ்வாறு எவராலும், எவ்வித உரிமையும் கோரப்படாதவிடத்து கோபாலகிருஷ்ணன் நாகராசா பெண் சந்திரா எனும் பெயருக்கு மேற்குறித்த ஆதனம் பெயர்மாற்றஞ்செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

திருமதி பு.சிவலிங்கம், செயலாளர்,
வலி.தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய். ([illegible])

## யாழ் நகரில் மிகக்குறைந்த கட்டணங்களில்

## BRITISH COLLEGE OF HIGHER STUDIES

BCHS வழங்கும் சர்வதேச கற்கை நெறிகள்

To Study in UK(London), Canada, Australia,Newzealand Hot.... Hot courses for easy Student visa are open now

100% நல்ல சம்பளம்

- FOUNDATION DIPLOMA IN HOSPITALITY (HOTEL) MANAGEMENT
- FOUNDATION DIPLOMA IN NURSING (HEALTH & SOCIAL CARE)
- FOUNDATION DIPLOMA IN MANAGEMENT

எங்கு சென்றாலும் நல்ல வேலை வாய்ப்பு

கல்வித்தகைமை: G.C.E. (O/L) போதுமானது

IELTS (International English Language Testing System)
(Students Visa மூலமாக வெளிநாடு செல்பவர்களுக்கானது) 2 1/2 Months
(We guarantee minimum band 5.0 Upwards)

புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடனும் நடாத்தப்படுகிறது.

பரீட்சையில் நல்ல பெறுபேறுகள் 100 % உறுதி.

SPOKEN ENGLISH

இன்றைய நவீன உலகத்தில் ஆங்கில அறிவின் தேவைக்கேற்றபடி இப்பாடத்திட்டமானது நடாத்தப்படுகின்றது.
வகுப்புகள் சனி, ஞாயிறு, வாரநாட்களிலும், தொழில் புரிபவர்களுக்காக மாலை நேரங்களிலும் உண்டு

Diploma in English | Advance Diploma Iin English

100 % பயிற்சி — மாணவர்கள் ஆங்கிலத்தில் தங்களின் உயர்கல்வியினை தொடரவும், ஆங்கிலத்தில் சரளமாக உரையாடுவதற்கும் ஏற்றவிதமாய் பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்டுள்ளது — 100 % வெற்றி

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

Second Floor, No.15, Sirampiyadi Lane (Off Stanley Road)
(ஆரியகுளச்சந்திக்கு அருகாமையில்) (கொசி Hotel மேலே)
Tel :021 2224550 HotLines: 0777222422/ 0714299935/0773501499

புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன
திகதி 02.10.2010, 06.10.2010, 09.10.2010 — காலை : 10.00 மணி, மாலை : 04.00 மணி

## விற்பனைப் பிரதிநிதிகள் தேவை

(Sale Reps)

பிரபல நிறுவனம் ஒன்றின் பொருள்களை யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய பகுதிகளில் சந்தைப்படுத்துவதற்கு விற்பனைப் பிரதிநிதிகள் (Sale Reps) தேவை.

தகைமை :-
- இரண்டு வருட விற்பனைத்துறை அனுபவம்.
- சாரதி அனுமதிப்பத்திரம் (மோட்டார் சைக்கிள்)

தொடர்பு : 0777777964,0773856912

## CANTEEN உதவியாளர் தேவை

நகரின் மத்தியில் இயங்கும் தனியார் கல்லூரி ஒன்றுக்கு Canteen உதவியாளர் தேவை. அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு : 0779688006

## ஓராண்டு நினைவில்

### உறவின் குமுறல்கள்



திருமதி
### வேலுப்பிள்ளை தங்கம்

மலர்வு 24.04.1930 — உதிர்வு 06.10.2009

திதி: துதியை

அன்பொடு அறனும் பண்பும் சுமந்தனை
புன்னகையோடு பூமியில் வாழ்ந்தனை
அன்பொடு அம்மா என்றனர் அனைவரும்
மன்னு முலகினில் மாயவாழ்வென்றோ?
உன்னதமான உலகை நாடினை
மனிதயாக்கையை மாற்றி மறந்தனை
என்றும் இறைவனின் பாதக்கமலத்தே
நன்றே சாந்தியடைய வேண்டுவோம்.

குடும்பத்தினர்.

பெருந்தெரு,
புலோலி தெற்கு,
புலோலி.

(103742)

## IELTS அவசியமில்லை

## STUDY IN UK

யாழ்.நகரில் மிகக் குறைந்த செலவில்...

லண்டனில் தரம் வாய்ந்த பல்கலைக்கழகங்கள், கல்லூரிகளில் உங்கள் உயர்கல்வியைத் தொடர்வதற்கு
★ கல்விக் காலத்திலேயே குடும்பத்தினரை U.K.க்கு அழைக்கும் வாய்ப்புகள்

- ★ Admission within 3 days
- ★ 100% Visa உத்தரவாதம் - ஆவணங்கள் சரியாக இருப்பது முக்கியம்
- ★ ஆகக் குறைந்த கல்வித் தகைமை(O/L)
- ★ UK B.A Highly Trusted College


- ★விசா நிராகரிக்கப்படுமானால் College fee மற்றும் Sponsor fee திரும்பப் பெறும் வசதிகள்
- ★Visa கிடைத்த பின்பு பணம் செலுத்தும் வசதி(College fee, Sponsor Payment உட்பட அனைத்தும்)
- [illegible]
- ★ இலகு தவணைக் கொடுப்பனவு வசதிகள்
- ★மிகக் குறைந்த கட்டணத்தில் Sponsor வசதிகள்



இறுதிச் சந்தர்ப்பத்துக்கு முந்திக்கொள்ளுங்கள்

தொடர்புகளுக்கு: 0770871616

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உலகளாவிய கிளின்ரன் புத்தூக்க அமைப்பின் மாநாடு நேற்றுமுன்தினம் நியூயோர்க்கில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றிய அமெரிக்க அதிபர் பாரக் ஒபாமாவின் கருத்துக்கு முன்னாள் அதிபர் பில் கிளிங்டன் எதிர்வினையாற்றுகிறார்.

உலக அரங்கில்

# அமெரிக்கப் படையினரைக் கொல்ல முயன்ற பெண் விஞ்ஞானிக்கு 86 ஆண்டுகள் சிறை

நியூயோர்க்,செப்.25

அமெரிக்கப் படையினரைச் சுட்டுக் கொல்ல முயன்றார் என்ற குற்றச்சாட்டில் பாகிஸ்தான் பெண் ஒருவருக்கு 86 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானைச் சேர்ந்தவர் அபியா சித்திக். நரம்பியல் விஞ்ஞானியான இவர் அமெரிக்காவில் பிரசித்திபெற்ற மாங்காசு செட்ஸ் தொழில்நுட்ப நிறுவனத்தில் படித்தவர்.

இவர் காலித் ஷேக் மெகம்த் என்பவரை திருமணம் செய்தார். இவர் அமெரிக்காவின் இரட்டை கோபுர தகர்ப்பு சம்பவத்தில் முக் கிய குற்றவாளி. விமானம் மூலம் அவற்றை தகர்க்க அல்- குவைதாவினருக்குத் திட்டம் தீட்டி கொடுத்தவர்களில் ஒருவர் அவர்.

எனவே, அவரை அமெரிக்க பொலிஸார் கைதுசெய்தனர். அபியா சித்திக் பாகிஸ்தான் திரும்பினார். இந்நிலையில் ஆப்கானிஸ்தான் சென்ற இவர் அங்கு அமெரிக்கப் படையினரைத் துப்பாக்கியால் சுட்டுக் கொல்ல முயன் றுள்ளார்.

அவரை அமெரிக்க இராணுவ அதிகாரிகள் கைதுசெய்தனர். அவரிடம் விசாரணை நடத்தியதில் அவர் அல்-குவைதா தீவிரவாதிகளின் ஆதரவாளர் எனத் தெரிய வந்தது.

இதைத் தொடர்ந்து இவர் மீது அமெரிக்க நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. வழக்கு விசாரணை நடந்தபோது, அபியா சித்திக் மனநோயால் பாதிக்கப்பட்டவர் என அவரது சட்டத்தரணிகள் வாதிட்டனர்.

ஆனால், அவர் அமெரிக்கர்களின் மீது வெறுப்பில் இந்தச் செயலில் ஈடுபட்டார் எனக் குற்றம் நிரூபிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து அவருக்கு 86 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து நீதிபதி தீர்ப்புக் கூறினார்.

இந்தத் தீர்ப்பை எதிர்த்து பாகிஸ்தானில் ஆங்காங்கே ஆர்ப்பாட்டமும், மறியல் போராட்டமும் நடத்தப்பட்டன. கராச்சி, லாகூர், பெஷாவர் ஆகிய இடங்களில் நடந்த இந்தப் போராட்டங்களின் போது அமெரிக்க கொடிகளும், அமெரிக்க தலைவர்களின் உருவ பொம்மைகளும் தீயிட்டு எரிக்கப்பட்டன. (சி)

# அணு ஆயுதமற்ற உலகை உருவாக்க புதிய அணி

நியூயோர்க்,செப்.25

அணு ஆயுதமற்ற உலகைப் படைக்கும் முயற்சியாக 10 நாடுகள் இணைந்து புதிய அணியை உருவாக்கியுள்ளன.ஜப்பான், ஆஸ்திரேலியா, கனடா, சிலி, ஜேர்மனி, மெக்ஸிக்கோ, ஹோலந்து, போலந்து, துருக்கி, ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நாடுகள் இந்த அணியில் இடம்பெற்றுள்ளன.

நியூயோர்க்கில் நடைபெற்றுவரும் ஐ.நா. பொதுக்குழு கூட்டத்தின் ஒருபகுதியாக இந்த புதிய அணு ஆயுத எதிர்ப்பு நாடுகளின் கூட்டமும் வியாழக்கிழமை நடைபெற்றது. அணு ஆயுதத்தை முற்றிலுமாக ஒழிக்க வேண்டுமென இந்த நாடுகள் உறுதி எடுத்துக்கொண்டுள்ளன.

கூட்டத்தில் பேசிய ஆஸ்திரேலிய வெளியுறவு அமைச்சர் கேவின் ரூட், இப்போது உலகுக்கு பேராபத்தை விளைவிக்கக்கூடிய 23 ஆயிரம் அணு ஆயுதங்கள் பல்வேறு நாடுகளிடம் உள்ளன எனக் குறிப்பிட்டுள்ளார். அணு ஆயுத சோதனையில் ஈடுபட்டுள்ள வடகொரியா, ஈரான் ஆகியவற்றுக்கு எதிராக ஒட்டுமொத்தமாக குரல் எழுப்புவோம் என்றும் கேவின் ரூட் தெரிவித்துள்ளார்.

# இரத்தம் குடிக்கும் வெளவாலுக்கு 5 குழந்தைகள் பலி!

லிமா,செப்.25

பெருவில் அமேசான் பகுதியில் இரத்தம் குடிக்கும் வெளவால்கள் கடித்ததில் 5 குழந்தைகள் உயிரிழந்தன. இறந்தவர்கள் அனைவரும் 5 முதல் 10 வயதுக் குட்பட்டவர்கள்.

இத்தகவலை சுகாதார அமைச்சகம் புதன்கிழமை தெரிவித்தது.

'வாம்பையர் பேட்ஸ்' என அழைக்கப்படும் இத்தகைய வெளவால்கள் விலங்கு, பறவை, மனிதர்கள் ஆகியோரின் இரத்தத்தையே உணவாக உட்கொள்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

தலைநகர் லிமாவிலிருந்து சுமார் ஆயிரம் கிலோ மீற்றர் தொலைவிலுள்ளது கன்டோர்கேன்க்யூ மாகாணம். உலகிலேயே அடர்ந்த வனப்பகுதிகளுள் ஒன்றான அமேசான் வனப்பகுதிக்கு அருகில் அமைந்துள்ளது இந்த மாகாணம்.

இங்கு வாழும் ஆஜன், வாம்பிஸ் என்ற இனத்தவர்கள் இத்தகைய வாம்பையர் வெளவால்களின் தாக்குதலுக்கு அடிக்கடி இலக்காகின்றனர் என சுகாதார இயக்குநர் டாக்டர் பெர்ணான்டோ போர்ஜஸ் கூறினார்.

இது குறித்து மேலும் அவர் கூறியவை வருமாறு:-

வாம்பையர் வெளவால்களால் தொடர்ந்து உயிரிழப்புகள் ஏற்படுவது உண்மைதான். இதற்கான, தடுப்பு மருந்தை அளிக்கலாம் என்றாலும், 15 மணி நேர ஆற்றுப் பயணத்துக்குப் பின்னரே ஆஜன், வாம்பிஸ் மக்கள் வசிக்கும் பகுதிக்குப் போவது சாத்தியம்.

அதற்குள் பாதிக்கப்பட்டவர்கள் உயிருடன் இருப்பதே கடினம். அந்த அளவுக்கு மிகவும் பின்தங்கிய பகுதியில் அந்த மக்கள் வசித்து வருகின்றனர். இப்படி அவர் தெரிவித்தார்.

இந்த ஆண்டில் மட்டும் 3 ஆயிரத்து 500 பேர் இந்த வெளவால் கடியால் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் குழந்தைகள் உட்பட இதுவரை 20 பேர் வரை உயிரிழந்துள்ளனர் என்று சுகாதாரத் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.(சி)

# மக்கள் கட்சித் தலைமைப் பதவியை துறக்குமாறு சர்தாரிக்கு வலியுறுத்து!

லாகூர்,செப்.25


பாகிஸ்தான் ஜனாதிபதி அஷிப் அலி சர்தாரி, பாகிஸ்தான் மக்கள் கட்சியின் தலைவர் பொறுப்பையும் சேர்த்து வகிப்பதை எதிர்த்து லாகூர் நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் சட்டத்தரணி சங்க உறுப்பினர் ஏ.கே. டோகர் என்பவர் லாகூர் உயர் நீதிமன்றில் இது தொடர்பான மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

''ஜனாதிபதி சர்தாரி, பாகிஸ்தான் கட்சி தலைவர் பதவியையும் சேர்த்து வகிக்கிறார். ஒருவர் இரு பதவிகளை வகிக்கக் கூடாது என்ற நடைமுறை உள்ளது. இரண்டு பதவிகளை இவர் வகிப்பதால், அரசுப் பணம் கட்சிக்கும் செலவிடப்படுகிறது.

ஜனாதிபதி தனது அலுவலக ஊழியர்களைக் கட்சிக்கும் பயன்படுத்துகிறார். தனது பதவியை இவர் முறைகேடாக பயன்படுத்துவதால் கட்சித் தலைமை பதவியிலிருந்து இவர் விலக வேண்டும் என நீதிமன்றம் உத்தரவிட வேண்டும்'' இப்படி அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(சி)



மொஸ்கோவில் நடைபெற்றுவரும் உலக ஜிம்னாஸ்டிக் போட்டியில் பெலாரஸ் நாட்டைச் சேர்ந்த அலெக்ஸான்ட்ரா நார்க்கேவிச்தனது ஆற்றலை நிரூபிக்கிறார்.

# வியட்நாம் போரில் பலியான 47 வீரர்களின் உடல் எச்சங்கள்

## நாட்டின் தென்பகுதியில் கண்டுபிடிப்பு

ஹெனாய், செப். 25

வியாட்நாம் போரின் போது பலியான 47 கம்யூனிஸ்ட் கொமாண்டோக்களின் உடல் எச்சங்கள் குவாங்நாகி மாகாணத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

பிரான்ஸ் ஆதிக்கத்திலிருந்து விடுபடுவதற்கான வியாட்நாம் போர் 1955ஆம் ஆண்டு ஆரம்பமாகியது. அப்போது தெற்கு வியட்நாம், வடக்கு வியாட்நாம் என நாடு இரண்டாகப் பிளவுபட்டிருந்தது.

இதில் தெற்கு வியாட்நாமிற்கு அமெரிக்கா ஆதரவு தெரிவித்தது. வடக்கு வியாட்நாமில் கம்யூனிஸ்ட் கட்சியினரே இராணுவப் படையினராக இருந்தனர். அமெரிக்க இராணுவ வரலாற்றில் மிக நீண்ட போர் என பெயர்பெற்ற வியாட்நாம் போரில் 58 ஆயிரம் அமெரிக்க வீரர்கள் கொல்லப்பட்டனர். வியாட்நாம் தரப்பில் 30 இலட்சம் பேர் கொல்லப்பட்டனர். இப்போர் 1975ஆம் ஆண்டு முடிவுக்கு வந்தது.

1968ஆம் ஆண்டு நடைபெற்ற போரின் போது பலியான முக்கிய 47 கொமாண்டோக்களின் உடல் எச்சங்கள் தற்போது தெற்கு வியாட்நாமின் தலைநகரான ஹோசிமிங் எனும் இடத்தில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. (சி)

# அமெரிக்க உளவுப் படையினர் 3000 பேர் பாகிஸ்தானில் பணி

நியூயோர்க்,செப்.25

பாகிஸ்தானில் தலிபான்கள் மற்றும் அல்-குவைதாவினரை ஒழிக்க 3 ஆயிரம் உளவுப் படையினரை கடந்த எட்டு ஆண்டுகளாக சி.ஐ.ஏ., நியமித்துள்ள இரகசிய வீரர்கள் பாகிஸ்தானில் செயல்பட்டு வருகின்றனர் என பொப் உட்வார்ட் எழுதிய புத்தகத்தை மேற்கோள் காட்டி, 'வாஷிங்டன் போஸ்ட்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

2001இல் ஆப்கானிஸ்தான் மீது அமெரிக்கா போர் தொடுத்த பின்னர் தலிபான்கள் ஆட்சியை இழந்து பாகிஸ்தான் எல்லையில் ஒளிந்துகொண்டனர்.

இவர்களைத் தொடர்ந்து அல்-குவைதா தீவிரவாதிகளும் பாகிஸ்தான் பழங்குடிகள் வசிக்கும் பகுதிகளில் தஞ்சம் புகுந்தனர். இவர்களை ஒடுக்க அமெரிக்காவின் சி.ஐ.ஏ., அமைப்பு, 3 ஆயிரம் இரகசிய படையினரை பாகிஸ்தானில் அமர்த்தி வேலை பார்த்து வருகிறது.

''இந்த நடவடிக்கைகள் எல்லாம், பாகிஸ்தானில் தங்கியுள்ள 3 ஆயிரம் இரகசிய வீரர்கள் மூலமாகத்தான் நடக்கிறது'' என பொப் உட்வார்ட் என்ற பத்திரிகையாளர் தான் எழுதிய புத்தகத்தில் தெரிவித்துள்ளார்.

சி.ஐ.ஏ. அமர்த்தியுள்ள இந்தப் படையினரில் ஒரு பகுதியினர் ஆப்கானிஸ்தானிலும் செயல்பட்டு வருகிறனர் என பொப் உட்வார்ட் தெரிவித்துள்ளார். ஆனால், வழக்கம் போல் இந்தச் செய்தியை மறுத்துள்ள பாகிஸ்தான் அரசு, ''அந்நிய படைகள் பாகிஸ்தானில் செயல்படுவதை அனுமதிக்க மாட்டோம்'' எனத் தெரிவித்துள்ளது. (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னியில் இனங்காணப்பட்ட வாகனங்களின் விவரம்

கிளிநொச்சி,செப். 25

மோட்டார் வாகனப் பகுதி பரிசோதகர்களால் பரிசோதிக்கப்பட்ட 1000 மோட்டார் சைக்கிள்கள், 30 மற்றைய வாகனங்களில் 416 மோட்டார் சைக்கிள்களும் 6 மற்றைய வாகனங்களும் உரிமையாளர்களால் இனங்காணப்பட்டுள்ளன. இவற்றை அடுத்த மாதம் 10ஆம் திகதிக்கு முன்னர் உரிய ஆவணங்களை சமர்ப்பித்து பெற்றுக்கொள்ளுமாறு கிளிநொச்சி அரச அபதிர் றூ.கேதீஸ் வரன் கேட்டுள்ளார்.

இனங்காணப்பட்ட வாகனங்களின் விவரம் வருமாறு:-

| | |
|---|---|
| 01 | TS-8109 |
| 02 | JG-8190 |
| 03 | NPHK-4065 |
| 04 | NPGS-6555 |
| 05 | GN-1159 |
| 06 | GS-6643 |
| 07 | NPJB-7913 |
| 08 | GN-1109 |
| 09 | NPHQ-7458 |
| 10 | NPHV-5847 |
| 11 | GR-9100 |
| 12 | GZ-9100 |
| 13 | 112-8726 |
| 14 | NPGS-7429 |
| 15 | NPHA-1589 |
| 16 | GY-2235 |
| 17 | NPHF-7627 |
| 18 | WPJH-9904 |
| 19 | NPMN-2930 |
| 20 | NPHC-3913 |
| 21 | NPHD-3531 |
| 22 | EPHR-7275 |
| 23 | NPMQ-1461 |
| 24 | NPHJ-2900 |
| 25 | NPMQ-6489 |
| 26 | NPHK-3349 |
| 27 | NPJY-5683 |
| 28 | NWGC-6184 |
| 29 | NPGW-5536 |
| 30 | T14-6071 |
| 31 | MI-6200 |
| 32 | WPGW-6619 |
| 33 | MF-1762 |
| 34 | GX-9443 |
| 35 | JW-9718 |
| 36 | NPHT-1405 |
| 37 | NPGU-2311 |
| 38 | NPJZ-7786 |
| 39 | NPGS-6652 |
| 40 | GA-9699 |
| 41 | NPMU-3409 |
| 42 | NPGU-1125 |
| 43 | NPGO-2280 |
| 44 | HS-9042 |
| 45 | GU-0717 |
| 46 | NPJA-2183 |
| 47 | HT-5399 |
| 48 | NPJI-0186 |
| 49 | GN-6591 |
| 50 | NPHK-3989 |
| 51 | HK-7821 |
| 52 | NPMN-9353 |
| 53 | TS-8145 |
| 54 | HA-8704 |
| 55 | NPGS-6524 |
| 56 | 151-7098 |
| 57 | JY-8579 |
| 58 | GS-6744 |
| 59 | 149-5349 |
| 60 | JF-5956 |
| 61 | GM-0622 |
| 62 | GC-8972 |
| 63 | 157-6497 |
| 64 | GQ-8573 |
| 65 | NPHY-9452 |
| 66 | NPHK-7830 |
| 67 | HK-2607 |
| 68 | 500-8302 |
| 69 | 156-3323 |
| 70 | 134-4421 |
| 71 | HG-0627 |
| 72 | 500-6796 |
| 73 | EPHO-9530 |
| 74 | NPJI-5181 |
| 75 | JZ-0744 |
| 76 | WPGF-4549 |
| 77 | NPHI-7780 |
| 78 | NPGZ-0096 |
| 79 | GN-7441 |
| 80 | NPGO-6284 |
| 81 | EPGY-4313 |
| 82 | GZ-4884 |
| 83 | 87-9228 |
| 84 | 109-6075 |
| 85 | 93-0127 |
| 86 | 500-7482 |
| 87 | 100-3088 |
| 88 | 138-3914 |
| 89 | HD-3363 |
| 90 | 146-7016 |
| 91 | 152-1207 |
| 92 | GN-0245 |
| 93 | 113-7286 |
| 94 | 128-6805 |
| 95 | 500-9863 |
| 96 | 94-2117 |
| 97 | 134-3746 |
| 98 | HD-6559 |
| 99 | 153-7297 |
| 100 | 151-6929 |
| 101 | 136-1242 |
| 102 | 88-3281 |
| 103 | 133-8121 |
| 104 | 140-2464 |
| 105 | 125-2294 |
| 106 | 112-2998 |
| 107 | 500.1743 |
| 108 | 502-0076 |
| 109 | GG-2031 |
| 110 | JY-6623 |
| 111 | 500-4801 |
| 112 | 102-9486 |
| 113 | HM-1087 |
| 114 | 134-1265 |
| 115 | 153-4473 |
| 116 | 114-1995 |
| 117 | 146-5457 |
| 118 | 89-8456 |
| 119 | 146-6512 |
| 120 | 145-5428 |
| 121 | 148-1678 |
| 122 | 500-5233 |
| 123 | 148-4128 |
| 124 | 128 1797 |
| 125 | MT-8836 |
| 126 | 500-9762 |
| 127 | 133-5719 |
| 128 | 148-7783 |
| 129 | 500-7152 |
| 130 | 156-0874 |
| 131 | 153-2609 |
| 132 | 137-1311 |
| 133 | 146-5648 |
| 134 | 132-9529 |
| 135 | 129-5896 |
| 136 | 90-6330 |
| 137 | 500-9817 |
| 138 | NPGF-9497 |
| 139 | 134-6858 |
| 140 | 152-3047 |
| 141 | 502-0628 |
| 142 | 502-0764 |
| 143 | GN-6640 |
| 144 | 500-7203 |
| 145 | 123-7106 |
| 146 | 158-2557 |
| 147 | 118-6205 |
| 148 | 500-4157 |
| 149 | 140-9009 |
| 150 | 145-3692 |
| 151 | 126-0853 |
| 152 | 147-6303 |
| 153 | 133-8612 |
| 154 | 142-8910 |
| 155 | 144-5839 |
| 156 | 146-0156 |
| 157 | 156-5014 |
| 158 | 144-3630 |
| 159 | NPHM-110 |
| 160 | 500-8248 |
| 161 | 157-4031 |
| 162 | NDHK-4129 |
| 163 | 130-988 |
| 164 | NPHR-9671 |
| 165 | 500-5362 |
| 166 | 153-2651 |
| 167 | 502-0153 |
| 168 | 137-5700 |
| 169 | 500-6430 |
| 170 | 136-4853 |
| 171 | 148-1161 |
| 172 | 126-4368 |
| 173 | 115-8779 |
| 174 | 502-0979 |
| 175 | 144-6786 |
| 176 | 139-1936 |
| 177 | 500-8634 |
| 178 | 145-3122 |
| 179 | 144-3259 |
| 180 | 118-6787 |
| 181 | 106-1052 |
| 182 | 500-4058 |
| 183 | 156-6387 |
| 184 | 127-4839 |
| 185 | GO-3533 |
| 186 | 117-1230 |
| 187 | 142-3073 |
| 188 | 97-1322 |
| 189 | 130-7001 |
| 190 | 500-0748 |
| 191 | WPJG-0688 |
| 192 | 147-3150 |
| 193 | 145-9190 |
| 194 | 141-7289 |
| 195 | 148-2279 |
| 196 | NPJZ-4549 |
| 197 | 500-2300 |
| 198 | WPGZ-0747 |
| 199 | 140-1278 |
| 200 | 128-6485 |
| 201 | 154-1325 |
| 202 | 142-0242 |
| 203 | 500-6051 |
| 204 | WPGY-6694 |
| 205 | NPGQ-2564 |
| 206 | 500-3234 |
| 207 | 502-0895 |
| 208 | 129-8668 |
| 209 | 121-4839 |
| 210 | 150-6264 |
| 211 | 88SR14302 |
| 212 | 127-5228 |
| 213 | NPGZ-4859 |
| 214 | 500-0610 |
| 215 | 146-7131 |
| 216 | 144-5904 |
| 217 | 133-6371 |
| 218 | NPJI-9043 |
| 219 | NPGC-3116 |
| 220 | 144-6445 |
| 221 | NPGD-5625 |
| 222 | 143-8996 |
| 223 | 146-2228 |
| 224 | 148-6090 |
| 225 | WPGJ-5289 |
| 226 | 137-4406 |
| 227 | 120-6824 |
| 228 | 148-4412 |
| 229 | 136-8678 |
| 230 | 500-4997 |
| 231 | 138-0852 |
| 232 | 500-4675 |
| 233 | 159-9308 |
| 234 | 140-5154 |
| 235 | 140-9645 |
| 236 | 500-2311 |
| 237 | GN-9753 |
| 238 | GR-9046 |
| 239 | 157-3777 |
| 240 | MJ-3831 |
| 241 | 150-2186 |
| 242 | 144-0027 |
| 243 | 159-7924 |
| 244 | 500-6978 |
| 245 | 116-6812 |
| 246 | 137-4425 |
| 247 | 131-3225 |
| 248 | 125-6796 |
| 249 | 155-4152 |
| 250 | 156-8452 |
| 251 | 144-8834 |
| 252 | HF-7345 |
| 253 | 146-7287 |
| 254 | 112-5997 |
| 255 | 144-9872 |
| 256 | 108-2201 |
| 257 | GA-7646 |
| 258 | 157-8625 |
| 259 | 125-0983 |
| 260 | 500-9073 |
| 261 | GL-9411 |
| 262 | MD-1950 |
| 263 | JZ-3017 |
| 264 | MF-0040 |
| 265 | UB-0178 |
| 266 | HA-6024 |
| 267 | NPJP-2854 |
| 268 | MX-3489 |
| 269 | MX-5538 |
| 270 | HR-7395 |
| 271 | JY-8669 |
| 272 | MG-8940 |
| 273 | HZ-2862 |
| 274 | GQ-9324 |
| 275 | NPGO-6485 |
| 276 | HS-0680 |
| 277 | 157-6271 |
| 278 | GS-0495 |
| 279 | 133-8668 |
| 280 | 152-2584 |
| 281 | HG-1329 |
| 282 | GI-6558 |
| 283 | 148-8624 |
| 284 | 106-0470 |
| 285 | 115-8644 |
| 286 | 133-1103 |
| 287 | NPHK-4113 |
| 288 | HG-0718 |
| 289 | HT-5374 |
| 290 | 140-9126 |
| 291 | JG-3719 |
| 292 | 152-7362 |
| 293 | NPJF-5208 |
| 294 | 152-0161 |
| 295 | MH-4097 |
| 296 | HQ-4369 |
| 297 | MX-3479 |
| 298 | NPHX-3407 |
| 299 | 113-5098 |
| 300 | ME-6514 |
| 301 | MO-3365 |
| 302 | GN-1190 |
| 303 | MF-3458 |
| 304 | MA-2697 |
| 305 | MS-6233 |
| 306 | 139-3225 |
| 307 | WPJZ-8359 |
| 308 | NPHI-6609 |
| 309 | 502-0518 |
| 310 | 152-5867 |
| 311 | 140-9295 |
| 312 | 159-0351 |
| 313 | GA-6625 |
| 314 | 144-7481 |
| 315 | 500-9258 |
| 316 | NPHG-0683 |
| 317 | NPHX-3323 |
| 318 | NPHM-0985 |
| 319 | 136-8609 |
| 320 | NPJP-0012 |
| 321 | NPHE-7323 |
| 322 | 160-3843 |
| 323 | HX-1970 |
| 324 | NPJY-8592 |
| 325 | NPGN-3211 |
| 326 | 500-9302 |
| 327 | 153-6079 |
| 328 | NPHC-3521 |
| 329 | NPGM-0614 |
| 330 | IK-7244 |
| 331 | NPMQ-8310 |
| 332 | 146-1773 |
| 333 | JB-7224 |
| 334 | NPHW-2608 |
| 335 | GT-4633 |
| 336 | HY-9554 |
| 337 | NPHF-4876 |
| 338 | MX-2153 |
| 339 | ME-6085 |
| 340 | MD-3363 |
| 341 | MD-2883 |
| 342 | MQ-6473 |
| 343 | MC-6798 |
| 344 | HT-1411 |
| 345 | MQ-4047 |
| 346 | JA-5664 |
| 347 | GN-4177 |
| 348 | HK-3611 |
| 349 | HC-8611 |
| 350 | MW1781 |
| 351 | GO-5722 |
| 352 | JD-4040 |
| 353 | HR-9623 |
| 354 | HW-2109 |
| 355 | 131-2516 |
| 356 | UB-0362 |
| 357 | MM-3874 |
| 358 | MG-4706 |
| 359 | MX-3233 |
| 360 | GH-1198 |
| 361 | MO-3559 |
| 362 | JZ-6102 |
| 363 | HE-7316 |
| 364 | MF-5741 |
| 365 | HY-4939 |
| 366 | MD-7894 |
| 367 | HO-5283 |
| 368 | JC-9945 |
| 369 | MQ-4511 |
| 370 | MC-9738 |
| 371 | 500-9036 |
| 372 | TL-2654 |
| 373 | HG-0691 |
| 374 | HG-0692 |
| 375 | GN-1150 |
| 376 | MG - 4979 |
| 377 | 83-6748 |
| 378 | NPGO-6068 |
| 379 | HF-0008 |
| 380 | JR-5356 |
| 381 | NPGW-5768 |
| 382 | 110-7529 |
| 383 | GN-6575 |
| 384 | JJ-4503 |
| 385 | 128-2613 |
| 386 | UB-0451 |
| 387 | GQ-0928 |
| 388 | MB-4410 |
| 389 | MU-0249 |
| 390 | GP-8495 |
| 391 | JB-1939 |
| 392 | HX-4902 |
| 393 | 500-2433 |
| 394 | MI-0188 |
| 395 | HI-6707 |
| 396 | MM-4076 |
| 397 | JT-9654 |
| 398 | GZ -8834 |
| 399 | JO-2676 |
| 400 | JD-4155 |
| 401 | MD-2225 |
| 402 | NPHI-4939 |
| 403 | NPJQ-4024 |
| 404 | HI-7878 |
| 405 | 143-2163 |
| 406 | 153-9520 |
| 407 | HM-1128 |
| 408 | NCGG-0348 |
| 409 | 131-5510 |
| 410 | HY-2740 |
| 411 | 111-2746 |
| 412 | 109-6431 |
| 413 | NPHC-3511 |
| 414 | NPHO-4796 |
| 415 | NPHM-0968 |
| 416 | NPGQ-4454 |

ஏனைய வாகனங்கள்

| S.No | Vehicle No |
|---|---|
| 01 | GN-2496 |
| 02 | JJ-9001 |
| 03 | RA-1049 |
| 04 | LD-9943 |
| 05 | RA-2690 |
| 06 | GR-6959 |


## 2 ஆம் ஆண்டு நினைவினில்

மலர்வு 27 ★ 03 ★ 1952



உதிர்வு 25 ★ 09 ★ 2008

### கணபதிப்பிள்ளை குலசேகரம்

(முன்னாள் கிராம சேவையாளர்)

ஆண்டு இரண்டு ஆனதப்பா
ஏக்கப் பெருமூச்சுடன் புலம்பித் தவிக்கின்றோம் அப்பா
மாறவில்லை எம் துயரம்
இப்புவிதனில் நாம் வாழ
வழிகாட்டிய எம் அன்பு அப்பாவே
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கல்லூரி வீதி, வட்டுக்கோட்டை.

பிரிவால் துயருறும் மனைவி, பிள்ளைகள்.

(103748)

## கண்ணீர் அஞ்சலி



எமது ஆலயத்திற்கு அருகில் உள்ள தனது காணியைப் பெருமனதுடன் எமக்கு நன்கொடையாக வழங்கிய

### திருமதி நல்லம்மா கந்தையா

அவர்கள் அமரத்துவம் அடைந்ததையிட்டுத் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த கவலையையும் அனுதாபத்தையும் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய எம் ஆசிமட அரசடி விநாயகர் கிருபை கிட்டப் பிரார்த்திக்கின்றோம்.

நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை,
கோண்டாவில் ஆசிமட அரசடி விநாயகர் ஆலயம்.
கோண்டாவில் கிழக்கு.

(103739)

## ENGLISH

ஆங்கிலத்தினை பேசுவதாயின்
1. இலக்கண வசன உருவாக்கம் வேண்டாம்
2. தமிழிலிருந்து மொழிமாற்றம் வேண்டாம்
இலகுவாக வேகமாக ஆங்கிலத்தை பேசுவதற்கான
3 மாத சனி, ஞாயிறு பயிற்சிநெறியில்
புதிய பிரிவுகள் ஆரம்பம்
பிரிவுகள்:9-10, 11-12, 1-2, 2-3, 3-4, 5-6
பல்கலைக்கழக மற்றும் A/L எடுத்த மாணவர்கள், அரச, தனியார் அலுவலர்கள் பயிற்சியில் சேரலாம்
குறிப்பு : மருத்துவபீட மாணவர்களுக்கும் வங்கி நிர்வாகிகளுக்குமான பிரிவுகள் ஆரம்பமாகி விட்டது

MyWay English
182, Stanley Road, Jaffna. 0711 25 70 35

## இறைச்சிக் கோழி விற்பனை

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து காலை 6 மணி தொடக்கம் இரவு 8 மணி வரை குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
(முட்டை மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு)
தொடர்பு: நல்லூர் பாம் சென்ரர்
19, முருகேசர் லேன், நல்லூர்.

## தவறிவிட்டது

ஊரெழு கிழக்கு, சுன்னாகத்தைச் சேர்ந்த அரியமுத்து செல்வச்சந்திரன் என்பவரது தே.அ.அ. (871141903V) கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வரும் வழியில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைத்துதவவும்.

## சேவை

UK,IRELAND, POLAND போன்ற நாடுகளுக்கு STUDENT VISA ஆவணங்கள், ஒழுங்குகள் துரித கதியில் செய்து கொடுக்கப்படும். மற்றும் Financial Sponsorship என்பன.
தொடர்பு கொள்ளவும்:- 0779218444, 0214910959

## TV கள் மலிவு விற்பனை

Sony wega Flat 14" - 10,000/=, 21" - 14,000/=, 25" - 22,000/=, 29" - 25,000/= மற்றும் பொக்ஸ் வகைகள், அம்பிளிபயர்கள், குளிர்சாதனப் பெட்டிகள், Casste Deck, ரேடியோக்கள் மலிவு விலையில் விற்பனைக்குண்டு.
அருகில்), கே.கே.எஸ்.வீதி, இணுவில்.

## Super Line இன் Super Luxury பஸ்சேவை



இலங்கையின் முதற்தர போக்குவரத்து நிறுவனமான Super Line இன் பஸ் சேவைகள் யாழ். மாவட்டத்திற்கும் முதன் முறையாக அறிமுகப் படுத்தப்படுகின்றது.
★ தினமும் யாழ்-கொழும்பு, கொழும்பு-யாழ்ப்பாணம் சேவைகள்.
★ முற்றிலும் குளிரூட்டப்பட்ட இருக்கை வசதிகள்
★ ஒவ்வொரு பயணிக்குமான காப்புறுதி வசதி
★ குறைந்த கட்டண வசதி
★ நட்புறவுடன் பழகும் ஆளணி வசதிகளைக் கொண்டது.
தொடர்புகளிற்கு: யாழ்ப்பாணம்: 0774338423, 0772067627.
கொழும்பு: 0114579017, 0773686948.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 28 ★ 01 ★ 1941



ஆண்டவன் அடியில் 06 ★ 10 ★ 2009

### திருமதி பாக்கியம் சுப்பிரமணியம்

ஆண்டொன்று ஓடி மறைந்ததம்மா
உங்கள் நீங்கா நினைவுகளை மனதில் சுமந்து
செய்வதறியாது தவித்து நிற்கும் - நாங்கள்
உங்கள் ஆத்மா சாந்தி வேண்டி
நல்லூர்க் குமரனை பிரார்த்தித்து நிற்கின்றோம்.

69, இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி.

கணவன், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(103735)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதியை ஆக்கிரமித்த கட்டடத்தால் சுத்திகரிக்க முடியாது ஊழியர்கள் சிரமம்

யாழ்ப்பாணம், செப். 25

அத்தியடி புதுவீதியில் அமைந்துள்ள பாலத்துக்குக் கீழ் பகுதியூடாகச் செல்லும் வெள்ளவாய்க்காலை ஆக்கிரமித்து ஆளும் கட்சியைச் சேர்ந்த மாநகரசபை உறுப்பினர் தனது வீட்டுக் கட்டடத்தை அமைத்துள்ளார்.

இதனால் சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் அதற்குள் இறங்கி சுத்தம் செய்ய முடியாதநிலை காணப்படுகின்றது.

இவ்வாறு யாழ்.மாநகரசபையின் உறுப்பினர்களான மு.றெமிடியஸ், கே.என்.விந்தன் கனகரத்தினம் ஆகியோர் குற்றம் சாட்டியுள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள், வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரி விக்கப்பட்டிருப்பதாவது:

யாழ்.மாநகரசபை முதல்வரின் உத்தரவின் பேரில் கடந்த 17 ஆம் திகதி யாழ். மாநகரசபைப் பகுதியில் உள்ள இராசாவின்தோட்டத்திலிருந்து அத்தியடி புது வீதி வரை அமைந்துள்ள தனியார் குடியிருப்பு பகுதிக்குள்ளால் ஊடறுத்துச் செல்லும் வெள்ளவாய்க்காலுக்கு மேலெழுந்த வாரியாக குடியிருப்பாளர்களால் கட்டப்பட்ட ஒன்பது மதில்கள் உடைக்கப்பட்டுள்ளன.

இந்த மதில்களுக்குக் கீழால் செல்லும் வெள்ள வாய்க்கால்கள், நீர்தங்கு தடையின்றி வழிந்தோடும் வசதிகள் ஏற்படுத்தப்பட்டு தொற்றுநோய்கிருமிகள் பரவாத வகையில் இக்குடியிருப்பாளர்களே பராமரித்துவந்ததை நாம் அறிவோம்.

இது இவ்வாறிருக்க பாதிக்கப்பட்டோருக்கு எவ்வித முன் அறிவித்தலும் வழங்கப்படாமல் மாநகரசபை உறுப்பினர்களின் அங்கீகாரமும் பெறப்படாது இந்த ஒன்பது மதில்களும் உடைக்கப்பட்டதன் காரணம் என்ன என கேட்கப்பட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க ஆளுங்கட்சி உறுப்பினர் அப்பகுதியில் தனது வீட்டுடன் சேர்த்து வெள்ள வாய்க்காலை ஆக்கிரமித்து அதற்கு மேலால் பெரும் கட்டடம் அமைத்துள்ளார்.

இதைத் தட்டிக்கேட்காத மாநகரசபை பொதுமக்களின் குடியிருப்புகளில் உள்ள மதில்கள் எவ்வித முன்னறிவித்தலுமின்றி அகற்றப்பட்டுள்ளன.

கடந்த மூன்று தசாப்த காலமாக பல்வேறு விதமான சொத்தழிவுகளைச் சந்தித்த எமது மக்கள் மேல் - வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல் மாநகரசபை செயற்படுவதற்கு நாம் - எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எட்டுப்பேரும் அனுமதிக்கப்போவதில்லை - என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (204-16)

## மீன்பிடித் துறைமுகங்களை நிர்மாணிக்க அங்கீகாரம்

யாழ்ப்பாணம், செப். 25

குடாநாட்டின் மீன்பிடித் துறையை அபிவிருத்தி செய்யும் வகையில் இரு மீன்பிடித் துறைமுகங்களை நிர்மாணிப்பதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்துள்ளது.

இதற்கான வேலைத்திட்டங்கள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக கடற்தொழில் நீரியல் வளத்துறை உதவிப் பணிப்பாளர் க.தர்மலிங்கம் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் குருநகர் துறைமுகமும், பருத்தித்துறையில் இன்பருட்டி துறைமுகமுமே இவ்வாறு நிர்மாணிக்கப்பட உள்ளன.

இது தொடர்பாக அமைச்சரவையிடம் முதலில் தமது திணைக்களம் மூலம் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

அதனடிப்படையிலேயே தற்போது அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது என தெரிவிக்கப்படுகிறது. (த-204-15)

## குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தின் ஜூபிலி வருடமாக இவ்வாண்டு பிரகடனம்

யாழ்ப்பாணம், செப். 25

குருநகர், புனித யாகப்பர் ஆலயத்தின் 150 ஆவது ஜூபிலி ஆண்டாக இவ்வாண்டு யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையினால் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஜூலை 25 ஆம் திகதி தொடக்கம் 2011 ஆம் ஆண்டு ஜூலை 25 ஆம் திகதி வரை ஜூபிலி ஆண்டாக பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது.

இந்த ஆண்டில் ஆலய வளாகத்துள் நற்கருணைச் சிற்றாலயம் அமைத்தல், குருமனை புதுப்பித்தல் போன்ற பல வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இந்த ஆண்டை சிறப்பிக்கும் முகமாக பல நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன.

கல்விசார் வேலைத்திட்டத்தை முன்னெடுக்க சென்.ஜேம்ஸ் ஆண், பெண் பாடசாலைகளின் அதிபர்களுடன் ஒன்றிணைந்து குடாநாடு தழுவிய மட்டத்தில் கல்விமான்களை அணுகி செயற்றிட்டத்தை வகுத்து நடைமுறைப்படுத்துவதற்கான பணிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (த-204-160)

## போதனா வைத்தியசாலையில் இரத்த வங்கிக்குப் புதிய கட்டடம்



யாழ்ப்பாணம், செப். 25

யாழ்.போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கிக்கென புதிதாக அமைக்கப்படுகின்ற கட்டடப்பணிகள் துரித கதியில் நடைபெற்றுவருகின்றன.

யாழ்.போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கிக்கென இதுவரை காலம் தனியான கட்டடம் அமைக்கப்படாத போதும் தற்போது இதற்கென சுகாதார அமைச்சினால் சுமார் 22 மில்லியன் ரூபாவுக்கும் மேற்பட்ட செலவில் இக்கட்டடம் அமைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இக்கட்டடப் பணிகள் இன்னும் இரு மாதங்களில் முடிவடையுமெனவும் கூறப்பட்டது. (த-204-16)

## சென்.அன்ரனிஸ் மகளிர் வித்தியாலய 160 ஆவது ஆண்டு விழாவும், பரிசளிப்பும்

யாழ்ப்பாணம், செப். 25

பாஷையூர் சென்.அன்ரனிஸ் றோ.க. மகளிர் வித்தியாலயத்தின் 160 ஆவது ஆண்டு நிறைவுவிழாவும், பரிசளிப்பு நிகழ்வும் இடம்பெறவுள்ளன.

இந்த நிகழ்வுகள் நாளைமறுதினம் திங்கட்கிழமை பாஷையூர் ஆலயத்திலும், மறுநாள் செவ்வாய்க்கிழமை பாடசாலை மண்டபத்திலும் நடைபெறும்.

புனித அந்தோனியார் ஆலயத்தில் காலை 9 மணிக்கு நடைபெறும் நன்றித் திருப்பலியில் மாணவர்கள், பெற்றோர்கள் பழைய மாணவர்கள் கலந்துகொள்வர்.

இரண்டாம் நாள் நிகழ்வுகள் பாடசாலை மண்டபத்தில் காலை 9 மணிக்கு அதிபர் திருமதி எம்.கலிஸ்ரா செல்வநாயகம் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அருளேஸ்வரி வேதநாயகம், சிறப்பு விருந்தினராக ஹற்றன் பங்குத் தந்தையும் பழைய மாணவருமான அருட்திரு. நேரியோ ஏபிரகாம் அடிகள் ஆகியோர் கலந்துகொள்வர்.

கௌரவ விருந்தினர்களாக யாழ்.பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி வி.சிவபாலன், பாஷையூர் பங்குத் தந்தை அருட்திரு றோய் பேடினன் அடிகளும் கலந்து கொள்வர். (த-204-135)

## மத்திய பேருந்து நிலையத்தில் கழிப்பிட வசதிகள் பற்றாக்குறை

### பயணிகள் பெரும் சிரமம்

கொழும்புத்துறை, செப். 25

யாழ்.மத்திய பேருந்து நிலையத்தில் கழிப்பிட வசதிகள் பற்றாக்குறையால் பயணிகள் பெரும் அசௌகரியங்களை தினமும் எதிர்நோக்கிவருவதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

பஸ் நிலையப் பகுதியில் பொதுப் பாவனையில் இருந்த மலசலகூடங்களில் சில பழுதடைந்த நிலையில் காணப்படுவதால் சனநெருக்கடி கூடிய வேளைகளில் பெரும் சிரமங்களுக்கு முகங்கொடுத்து இடம்தேடி அலைவதை அவதானிக்க முடிவதாகக் கூறப்படுகிறது.

அனைத்து மாவட்ட பயணிகளும் யாழ்ப்பாணம் வந்து செல்வதால் பயணிகள் தொகைக்கேற்ப மலசலகூடங்கள் அமைக்கப்படவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதாக பயணிகள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

பெரும்பாலும் வெளிமாவட்டப் பயணிகளே கழிவகற்றுவதில் பெரும் இடர்களைச் சந்திப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பழுதடைந்த மலசலகூடங்களை திருத்தி அமைப்பதோடு புதிய கழிவறைகளை அமைத்து பயணிகளுக்கு சிறந்த சுகாதார வசதிகளை ஏற்படுத்தித் தருமாறு உரியவர்களிடம் பயணிகள் கோரிக்கை விடுக்கின்றனர். (த-204-135)

## யாழ்.மாநகர சபையின் எல்லைக்குள் கழிவுப் பொருள்களை அகற்றுவதற்கு கட்டணம் அறவிட நடவடிக்கை

வலி.வடக்கு, செப். 25

யாழ்.நகர வர்த்தக நிலையங்களில் இருந்து கழிவுப் பொருள்களை அகற்றவதற்கு எதிர்காலத்தில் கட்டணம் அறவிட நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளதாக யாழ்.நகர வர்த்தகர்கள் தெரிவிக்கின்றார்கள்.

யாழ்ப்பாணம் மாநகரசபை யாழ்.நகரை சுத்தமாகவும், சுகாதாரமாகவும் வைத்திருப்பதற்காக தினமும் இர்ண்டு தடவைகள் வர்த்தக நிலையங்களில் இருந்து கழிவுப் பொருள்களை அகற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் தற்போது யாழ்.மாநகர சபையினால் வர்த்தக நிலையங்களுக்கு கழிவு அகற்றல் சம்பந்தமான விவரங்கள் அடங்கிய படிவங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

குப்பைகள் அகற்றுவதற்கு மாதம் ஒன்றுக்கு இரு நூறு ரூபாவில் இருந்து நானூறு ரூபா வரை கட்டணம் அறவிட நடவடிக்கையை யாழ்.மாநகர சபை மேற்கொள்ளவுள்ளதாக வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர். (204-86-07)




## 'தேசமான்ய' விருது பெறுகிறார் ஆர்னோல்ட்



யாழ்ப்பாணம், செப். 25

இன நல்லுறவு ஒன்றியத்தினால் நடத்தப்படுகின்ற சாமஸ்ரீ தேசிய பாராட்டு விழாவில் பாசையூரைச் சேர்ந்த இம்மானுவல் ஆர்னோல்ட் என்பவர் ''தேச மான்ய'' விருது வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளார்.

யாழ்ப்பாணம் பாசையூரைச் சேர்ந்தவரான இவர் சிறந்த சமூக சேவையாளரும், அகில இலங்கை சமாதான நீதிவானும் சென்.ஜோன்ஸ் கல்லூரியின் பழைய மாணவரும், ஜன சக்தி காப்புறுதி நிறுவனத்தின் வட பிராந்திய முகாமையாளரும் ஆவார்.

இவருக்குரிய விருது இரத்தினபுரி மாநகரசபை மண்டபத்தில் இன்று சனிக்கிழமை வழங்கப்படவுள்ளது. (த-9-23)

## நிர்ணயிக்கப்பட்ட விலைகளிலேயே குளிர்பானங்களை விற்க வேண்டும்

### யாழ்.வணிகர் கழகம் அறிவிப்பு

வலி.வடக்கு, செப். 25

குடாநாட்டு வர்த்தக நிலையங்களில் குளிர்பானங்களை நிர்ணயம் செய்யப்பட்ட விலைக்கு விற்பனை செய்யவேண்டும் என யாழ்.வணிகர் கழகம் வெளியிட்டுள்ள துண்டுப் பிரசுரத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது.

யாழ்.குடாநாட்டு வர்த்த நிலையங்கள் மற்றும் தேநீர்ச்சாலைகள் அனைத்திலும் குளிர்பானங்கள் சில்லறையாக பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

அதாவது குளிர்பானங்கள் குளிரூட்டிகள் மூலம் குளிரூட்டப்பட்டு குறிக்கப்பட்ட விலையிலும் பார்க்க 5 ரூபா முதல் 10 ரூபா வரை அதிகரித்த விலையில் இடத்துக்கிடம் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

எனவே எந்தக் காரணம் கொண்டும் குளிர்பானங்கள் குறிப்பிட்ட விலையிலும் பார்க்க அவை குளிரூட்டப்பட்டாலும் கூட அதிகரித்த விலையில் விற்பனை செய்ய முடியாது எனவும் அத்துண்டுப் பிரசுரத்தில் வணிகர் கழகம் தெரிவித்துள்ளது. (201-86)

## சிறுவர் தினத்தை முன்னிட்டு அன்பளிப்புப் பொருள்கள்

யாழ்ப்பாணம், செப். 25

சிறுவர்தினத்தை முன்னிட்டு யாழ். போதனா வைத்தியசாலை புற்றுநோய் சிகிச்சைப் பிரிவில் எதிர்வரும் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு அன்பளிப்புப் பொருள்கள் வழங்கப்படவுள்ளன.

அன்றைய தினம் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட 20 வயதுக்கு உட்பட்டவர்களை வருகை தருமாறு கேட்கப்பட்டுள்ளனர். (த-204)

## சைவ விவகாரக்குழுவிடம் புகைப்படங்கள் கிடைத்துள்ளன

யாழ்ப்பாணம், செப். 25

யாழ்.மாநகராட்சிமன்ற சைவசமய விவகாரக் குழுவின் பரிசளிப்பு சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் புகைப்படம் எடுத்துக் கொண்ட பாடசாலை மாணவர்களின் புகைப்படங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

இந்த மாணவர்கள் யாழ்.மாநகரசபையின் சைவசமய விவகாரக்குழுவுடன் தொடர்பு கொண்டு புகைப்படங்களை பெற்றுக் கொள்ளுமாறு அதன் செயலாளர் இ.இரத்தினசிங்கம் அறிவித்துள்ளார். (த-204-07)

## மின்தடையால் மக்கள் சிரமம்

யாழ்ப்பாணம், செப். 25

யாழ்ப்பாணம், நல்லூர் பகுதிகளில் தினமும் மாலை 6 மணிக்கும் 7 மணிக்கும் இடையில் மின்சாரத் தடை ஏற்படுகின்றது.

மின் விநியோகம் சீரமைக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வந்தும் அதைமீறி மின் விநியோகம் தடைப்படுவதால் பொதுமக்கள் சிரமங்களுக்கு உள்ளாகின்றனர் என தெரிவிக்கப்படுகின்றது. (த-204-07)

## ஏகாதசருத்திர ஹோமம்

யாழ்ப்பாணம், செப். 25

சுன்னாகம் ஸ்ரீகதிரமலை சிவன் தேவஸ்தானத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணி முதல் நண்பகல் 12 மணிவரை பொன்னம்பலவாணப் பெருமானுக்கு விசேட அபிஷேகம், பூசை, ருத்திர பாராயணமும் 11 குருமார்களால் ஹோமமும் நடைபெறும். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்மராட்சி பிரதேச வாழ் மக்களே!!!

உங்கள் சிறார்களின் எதிர்காலக் கல்வியை சரியான பாதையில் முதலிட்டுள்ளீர்களா அப்படியாயின்......

01 கல்வி என்பது வெறும் கட்டணக் கழிவுகளிற்காகவா? வெளிநாடு செல்வதற்காகவா? அல்லது சாதனையை நிலைநாட்டுவதற்காகவா?

02 எமது நேரத்தையும் பணத்தையும் ஒரு கற்கைநெறியில் முதலிடுவதற்கு முன் அவதானிக்கவேண்டிய விடயங்கள் எவை?

03 எமது மனதினை புலன்வழி செல்லாது ஒருமுகப்படுத்தி கல்வி மற்றும் தொழில் வெற்றி பெறுவது எவ்வாறு?

04 பல்கலைக்கழகத்தில் கற்பதால் மாத்திரம்தான் ஒருவர் சிறப்புத் தேர்ச்சி பெற முடியுமா?

05 ஒரு மாணவனின் கல்விக்காக எமது அரசு தரம் ஒன்றிலிருந்து பதின்மூன்று வரை எவ்வளவு பணம் முதலிடுகின்றது?

உங்கள் எதிர்காலத்தை வளமாக்க பதில் தெரியாத பலகேள்விகளிற்குப் பதில் தேடுங்கள். அனுபவம் வாய்ந்த தொழில் வல்லுனர்களின் உதவியை நாடுங்கள்.

IDM
City Campus #3
IDM AFFILIATED UNIVERSITY COLLEGE
CHAVAKACHCHERI CAMPUS
No. 5-1/1, Kandy Road, Chavakachcheri.
Tel : 021 2 270 270, Hotline : 0217 200 600


இடம் : IDM
சாவகச்சேரி கிளை
(கொமர்ஷல் வங்கிக்கு அருகாமையில்).

காலம் : 26வது நாள் புரட்டாதி மாதம் 2010.

நேரம் : காலை 9.00 மணிமுதல் மாலை 5.00 மணி வரை.
(விரும்பிய நேரத்தில் பங்கு பற்றலாம்)

இந்நிகழ்வு முற்று முழுதான இலவச வழிகாட்டல் கருத்தரங்கு. வியாபார நோக்கற்றது.

# கண்ணீர் அஞ்சலி



## சின்னப்பொடியன் இரத்தினம்

(உரிமையாளர் - S.R.கட்டட ஒப்பந்த நிறுவனம், கைதடி)

கோபுரம் சாய்ந்ததே
கொடுந்துன்பம் நேரிட்டதே
எங்கள் கோலங்கள் அழிந்ததுவே
ஏது கதி
தாங்க முடியாத துயரத்தில்
தவிக்குதையா எம் நெஞ்சு
அமைதியாக துயிலும் தங்கள்
ஆன்மா இறைபதம் சேர
இறைவனை இறைஞ்சுகின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**மைத்துனர்மார்**
நா.செல்லப்பா (செல்லப்பா களஞ்சியம், கைதடி வடக்கு)
ச.தங்கராசா (நவபுரம், கைதடி)
க.நாகராசா (கைதடி வடக்கு)
த.தம்பிராசா (இலங்கை மின்சாரசபை)
வே.சிவலிங்கம் (லிங்கம் ஸ்ரோர்ஸ், நவபுரம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கு மாகாணத்திற்கு ஒதுக்கப்பட்ட ஆசிரியர்களில் கணித, ஆங்கில பாடங்களுக்கு எவருமில்லை




மட்டக்களப்பு, செப்.25

கிழக்கு மாகாணத்திற்கு இவ்வருடம் ஒதுக்கப்பட்ட கல்வியியல் கல்லூரி ஆசிரியர்கள் 163 பேரில் எவரும் கணித, ஆங்கில பாட ஆசிரியர்கள் இல்லையாம்.

• இவ்வருடம் 3 வருட கற்பித் தல் டிப்ளோமாப் பயிற்சியைப் பூர்த்தி செய்து நியமனத்துக்காக கிழக்கு மாகாணத் திற்கு ஒதுக்கப்பட்டிருக்கும் கல்வியியல் கல்லூரி ஆசிரியர்களில் எவரும் கணித, ஆங்கில பாட ஆசிரியர்கள் இல்லையென்பது அதிர்ச்சியான செய்தியாகும்.

மாறாக மாகாணத்தில் மேலதிகமாக உள்ளனர் என இனங்காணப்பட்ட ஆரம்பக் கல்வி, இஸ்லாம் ஆகிய பாடங்களுக்கான ஆசிரியர்களே இம்முறை ஒதுக்கப்பட்ட கல்வியியல் கல்லூரி ஆசிரியர்களில் 90சதவீத மானவர்களாக உள்ளனரென கல்விய மைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

அதனால் அவ்வாசிரியர்களுக்குத் தட்டுப்பாடு நிலவும் திருமலை மாவட்டத்தில் கணித, ஆங்கில ஆசிரியர்களை நியமிக்க ஏற்பாடாகியுள்ளது.

இதேவேளை, கிழக்கு மாகாணத்துக் கென அனுப்பப்பட்ட 210ஆசிரியர்களில் 163 தமிழ் மொழி மூல ஆசிரியர்களும், 47சிங்கள மொழிமூல ஆசிரியர்களும் அடங்குவர்.

இப்பட்டியலில் 12 கணித பாட ஆசிரியர்களது பெயர் விவரங்களும் நியமனத்திற்காக கிழக்கு மாகாணக் கல்விய மைச்சுக்கு அனுப்பப்பட்டிருந்தன.

எனினும், ஓரிரு நாட்களில் இந்த 12 பேரது பெயர் விவரங்கள் தவறுதலாக அனுப்பப்பட்டுவிட்டன அவர்கள் தேசிய பாடசாலை களுக்கு நியமிக்கப்படவேண்டியவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டது.

எனவே, அவர்களது விவரப் பட்டியலை மத்திய கல்வி அமைச்சுக்கு மீள அனுப்புமாறு உத்தரவு கிடைத்து அவை தற்போது அனுப்பப்பட்டிருக்கின்றன.

எனவே, ஆங்கில,கணித ஆசிரியர்கள் தேசிய பாடசாலைகளுக்கு நியமிக்கப் படவிருப்பது குறிப்பிடத்தக்கது. இவர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் 26ஆம் திகதிமுதல் இசுருபாயவில் நடைபெறும்.

கிழக்கு மாகாணத்திற்கான ஏனைய ஆசிரியர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் 27,28ஆம் திகதிகளில் திருமலை கல்விய மைச்சில் நடைபெறுமென அமைச்சின் உயரதிகாரியொருவர் தெரிவித்தார்.(ளி)



திருக்கோணேஸ்வரத்தில் இருந்து வெருகல் சித்திரவேலாயுத சுவாமி ஆலயத்திற்கு ஒன்பதாவது வருடமாக வேல்நடை பஜனைக் குழுவினர் கடந்த புதன்கிழமை காலை புறப்பட்டனர். பொ.கந்தையா நடைபயணத்தை காலை 6.30 மணிக்கு திருக்கோணேஸ்வரத்தில் ஆரம்பித்து வைத்தார். திரு கோணமலை ஆலடி விநாயகர் ஆலயம், பத்திரகாளி அம்பாள் ஆலயத்தை வந்த டைந்த குழுவினர் அருணகிரி வீதி வழியாக வில்லூண்டி கந்தசுவாமி கோயிலை நோக்கிச் செல்வதைப் படத்தில் காணலாம். (ளி)

# அடிப்படை வசதிகளின்றி எருவில் மக்கள் பாதிப்பு

மட்டக்களப்பு,செப். 25

மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட எருவில் ஒழுங்கைத் தெரு கிராமமக்கள் தமக்குரிய அடிப்படை வசதிகள் செய்து கொடுப்பட வேண்டுமெனப் பரவலாகக் கோரிக்கை விடுக்கிறார்கள்.

மூன்றுபுரமும் வயல் நிலத்தால் சூழப்பட்ட இக்கிராம மக்கள் தங்களுக்கு நிரந்தர வீடு,மலசலகூட வசதி, மின்சாரவசதி, குடி தண்ணீர்வசதி ஆகியவை இல்லை எனச் சுட்டிக்காட்டுகிறார்கள்.

மண்முனை தென் எருவில்பற்றுப் பிரதேச செயலாளர் எஸ். அருள்ராசாவிடம் இத் தேவைகள் தொடர்பாக வேண்டுகோள் விடுக்கப்பட்டது. எனினும், இதுவரை பலன் அளிக்கவில்லை என்றும் அவர்கள் கவலை தெரிவிக்கிறார்கள்.

குருமண்வெளி கிராமத்திலுள்ள கிணறுகளில் உள்ள நீர் செங்கட்டிச் சிவப்பு நிறத்தில் உள்ளது. அதனால் உடைகளைக் கூட கழுவ முடியாதுள்ளது என்றும் மக்கள் குறிப்பிடுகிறார்கள்.

அண்மையில் மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலகத்தில் நடைபெற்ற அபிவிருத்திக் குழுக்கூட்டத்தில் பிரதியமைச்சர் வி.முரளிதரனிடம் இப் பிரச்சினைகள் தொடர்பாக விவரிக்கப்பட்டது. அவரும் பரிகாரம் காணப்படும் என உறுதியளித்தார். எனினும் காரியம் கைகூடவில்லை என்றும் இம்மக்கள் அங்கலாய்க்கிறார்கள். (ளி)

# விதவைகளான குடும்பத் தலைவிகள் வாழ்வை மேம்படுத்த புதிய திட்டங்கள்

திருகோணமலை, செப்.25

கிழக்கு மாகாணத்தில் கடந்த காலங்களில் இடம்பெற்ற யுத்த அனர்த்தத்தாலும், இயற்கை அனர்த்தத்தாலும் விதவைகளான குடும்பத் தலைவிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு தொழில் துறைத் திணைக்களம் பல விதமான முக்கிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தனின் ஆலோசனையின் பேரில் , கிராமிய மட்டத்தில் மட்பாண்டம், தும்புக் கைத்தொழில்களில் ஈடுபடுவோருக்கு வங்கிகள் மூலமாகக் குறைந்த வட்டி வீதத்தில் கடன் வசதிகள் பெற்றுக் கொடுக்கப்படவுள்ளன.

தற்போது பிரதேச செயலாளர் மட்டத்தில் இவ்வாறு பாதிக்கப்பட்ட குடும்பத் தலைவிகளின் முழுவிவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. (ளி)

# 2010 ற்கான குறைநிரப்பு பிரேரணை மத்திய மாகாணசபையில் சமர்ப்பிப்பு

கண்டி செப்.25

மத்திய மாகாணசபையின் 2010 ஆம் ஆண்டுக்கான குறைநிரப்பு பிரேரணை கடந்த செவ்வாக்கிழமை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. சபையின் மாதாந்த அமர்வில் முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க பிரேரணையைச் சமர்ப்பித்தார்.

குறைநிரப்புத் தொகையாக 6,89, 095,016 ரூபா பிரேரணையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

எனவே, இதில் தேச நிர்மாண மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சு மூலம் 9,102,943 ரூபாவும்-

நீர்ப்பாசன மற்றும் நீர் முகாமைத்துவ அமைச்சுமூலம் 9,564,500 ரூபாவும் -

விவசாய அமைச்சு மூலம் 18,111,500 ரூபாவும் -

கால்நடை மற்றும் கிராமிய சனசமூக அபிவிருத்தி அமைச்சு மூலம் 13,300,000 ரூபாவும் -

பொருளாதார அபிவிருத்தி அமைச்சு மூலம் 68,280,213 ரூபாவும் -

சனசமூக அபிவிருத்தி மற்றும் சமூக வக்கிரங்களைப் போக்கும் அமைச்சு மூலம் 1,46,985 ரூபாவும் -

வர்த்தக சந்தைப்படுத்தல், கூட்டுறவு, நுகர்வோர் சேவை அமைச்சுமூலம் இரண்டு கோடி ரூபாவும் -

திறைசேரி மூலம் 559,629,000 ரூபாவும் -

யுனிசெவ் மூலம் 7,960,000 ரூபாவும் பெறப்பட்டு இந்தக் குறை நிரப்பப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குறை நிரப்பு பிரேரணையில் மீள்வரும் செலவினமாக 484,393,000 ரூபாவும் -

மூலதனச் செலவாக 204,702,016 ரூபா என்றும் குறிப்பிடப்பட்டது.

குறைநிரப்புப் பிரேரணை மூலம் ஹட்டன் ஹைலண்ட் தமிழ் வித்தியாலயக் கட்டுமாணப் பணிகளுக்கு 1,46,985 ரூபா வும் -

ஹட்டன் சீடாவள நிலையத்திற்குப் பொருட்கள் வாங்க ஒரு கோடி ரூபாவும் -

நுவலெியா ககஸ்வர்ல்ட் தமிழ் வித்தியாலய மூன்று மாடிக் கட்டட நிர்மாணத் திற்கு 6,80,213 ரூபாவும் -

'ரிவ்' திட்ட தமிழ்ப்பாடசாலைக் கட்டடத்திற்கு 67,600,000 ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (ளி)




# 'செல்போன்' திருடன் கைது ஆறு தொலைபேசிகள் மீட்பு

கொழும்பு,செப். 25

கண்டியிலும் அதன் அயல் பிரதேசங்களிலும் நீண்டகாலமாக கையடக்கத் தொலைபேசிகளை மிகவும் தந்திரமாகத் திருடிவந்த நபரொருவர் ஆறு தொலைபேசி களுடன் கடந்த திங்கட்கிழமை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட நபர் கண்டி குன்னேபான, சிரிமல்வத்த பிரதேசவாசியாவார். இவர் போதைப் பொருளுக்கு அடிமையானவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஹெரோயின் பொட்டலம் ஒன்றை வைத்திருத்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட இந்நபரிடம் மேற்கொண்ட தீவிரவிசாரணைகளின் போதே இந்த திருட்டு விவகாரம் அம்பலமாகியுள்ளது.

போதைப்பொருள் வாங்குவதற்காகவே தான் செல்போன்களைத் திருடினார் என சந்தேகநபர் தெரிவித்துள்ளார். (ளி)

# கம்பளை நகரசபையில் ஊழல்; விசாரணையின் பின் நடவடிக்கை

## மத்திய மாகாண முதலமைச்சர் தெரிவிப்பு

கண்டி,செப். 25

கம்பளை நகரசபை ஊழல்கள் விசாரிக்கப்படும். இதற்காக விசாரணைக் குழுவொன்று அமைக்கப்படும். விசாரணைகளின் போது ஊழல் நிரூபிக்கப்பட்டால் அதற்கெதிராக உடன் நடவடிக்கை எடுக்கப்படும் - என மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க மாகாண சபையில் அறிவித்தார்.

மாகாணசபை மாதாந்தக் கூட்டம் பள்ளேகல மாகாணசபை மண்டபத்தில் சபையின் பிரதிதலைவர் எம். யசமான தலைமையில் நடைபெற்றபோதே முதலமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

உறுப்பினர் அநுர பெர்ணான்டோ (ஐ.ம.சு.மு) கம்பளை நகரசபை ஊழல்கள் குறித்து பிரஸ்தாபித்தபோதே முதலமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்பின்னர் உரையாற்றிய ஜமால்டீன் ஜெயினுலாப்டீன், ''ஐ.தே.க. ஆட்சியிலுள்ள மாநகர, நகர, பிரதேசசபைகளுக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இவற்றை நிறுத்த வேண்டும்'' - எனக் கோரிக்கை விடுத்தார். (ளி)

# கடத்தப்பட்ட மாணவர் தப்பினார் வத்துகாமத்தில் பெரும் பரபரப்பு

கொழும்பு,செப். 25

வத்துகாமம் கல்வி வலயத்திற்குட்பட்ட பாத்ததும்பறை மகாவித்தியாலய மாணவர் ஒருவர் கடந்த செவ்வாய்க்கிழமை பாடசாலை செல்லும் வழியில் வான் ஒன்றில் வந்த இனந்தெரியாதோரால் கடத்திச் செல்லப்பட்டுள்ளார். இருந்த போதிலும் அந்த மாணவர் அவர்களிடமிருந்து தப்பி வந்துள்ளார்.

இச்சம்பவத்தையடுத்து பிரதேச மாணவர்களிடமும், பெற்றோரிடமும் பெரும் பீதி ஏற்பட்டுள்ளது.

இதுபற்றி மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:-

மேற்படி வித்தியாலயத்தில் 11 ஆம் தரத்தில் கல்வி பயிலும் குறித்த மாணவர், சம்பவதினம் காலை தனது வீட்டிலிருந்து பாடசாலைக்கு நடந்து சென்றுள்ளார்.

வழியில் வான் ஒன்றில் இருந்தவர்கள் தனது முகத்தில் துணியொன்றைப் போட்டு நினைவிழக்கச் செய்தபின் தன்னைக் கடத்திச் சென்றனர் என மாணவர் பொலிஸாரிடம் வாக்குமூலமளித்துள்ளார்.

பிற்பகல் ஒரு மணியளவில், தனக்கு நினைவு திரும்பியது என்றும், தன்னைக் கடத்தியவர்கள் தேநீர் அருந்தச் சென்ற வேளையில் தான் வானிலிருந்து தப்பி வந்தார் என்றும் அவர் குறிப்பட்டுள்ளார்.

இவர் தப்பி வந்து தனது உறவினர்களிடம் தொலைபேசியில் தகவல் தெரிவிக்கும் வரை இக்கடத்தல் சம்பவம் எவருக்கும் தெரிந்திருக்கவில்லை எனக் கூறப்படுகின்றது.

தான் தப்பிய இடம் ஹோமகம எனத் தெரிய வந்ததையடுத்து, அவர் ஹோமாகம பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ளி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹிந்த - துருக்கி ஜனாதிபதி சந்திப்பு பல்வேறு விடயங்கள் குறித்துப் பேச்சு

கொழும்பு, செப்.25

இலங்கையில் மூன்று தசாப்த காலமாகத் தொடர்ந்த யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை துருக்கி ஜனாதிபதி அப்துல்லா குல், ஜமைக்கா பிரதமர் புரூஸ் ஜோல்தன் ஆகியோர் நேரில் சந்தித்துப் பாராட்டுத் தெரிவித்தனர்.

நூற்றாண்டு அபிவிருத்தி இலக்கைப் பூர்த்தி செய்யும் 65ஆவது ஐ.நா. மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய பின்னர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் துருக்கிய ஜனாதிபதி அப்துல்லா குல்லுக்குமிடையிலான சந்திப்பொன்று இடம்பெற்றது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இதற்கு முன்னர் துருக்கிக்கு விஜயம் மேற்கொண்டபோது செய்துகொண்ட ஒப்பந்தங்கள் செயற்படுவது தொடர்பாகவும் இச்சந்திப்பின்போது ஆராயப்பட்டது. இரு நாடுகளுக்குமிடையில் நேரடி விமானச்சேவை ஆரம்பிப்பது தொடர்பாக செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது குறித்தும் இரண்டு தலைவர்களும் கவனம் செலுத்தினர்.

சுதந்திர இலங்கையில் இடம்பெறும் துரித அபிவிருத்தி தொடர்பாக துருக்கி ஜனாதிபதி கவனம் செலுத்தியதுடன் இன்றளவில் துருக்கி நிர்மாணத்துறையில் உயர்ந்த தரத்தைப் பேணுவதால் அவர்களது தொழில்நுட்ப அறிவையும் நிர்மாணப்பணிகளிலுள்ள நிறுவனங்கள் இலங்கை நிர்மாணத்துறையில் பங்களிப்பு வழங்குவது குறித்தும் இரு நாட்டுத் தலைவர்களும் கலந்துரையாடினர்.

மேலும் இலங்கை துருக்கிக்கு தேயிலையை ஏற்றுமதி செய்யும்போது முகம்கொடுக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் இங்கு முக்கிய கவனம் செலுத்தப்பட்டது. இதற்கென சலுகை வழங்கும் முறையொன்றைக் கடைப்பிடிக்கத் தமது அரசு நடவடிக்கைமேற்கொள்ளுமென்றும் துருக்கி ஜனாதிபதி தெரிவித்தார்.

இதன் பின்னர் ஜமைக்கா பிரதமர் புரூஸ் கோலிடினுடனான சந்திப்பு ஒன்றில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கலந்துகொண்டார். (சி)




## முச்சக்கரவண்டி அன்பளிப்பு

யாழ்ப்பாணம், செப்.25

நெடுந்தீவு அரசினர் வைத்தியசாலைக்கு அமெரிக்க சர்வதேச மருத்துவ சுகாதார கழகத்தினால் புதிய முச்சக்கர்வண்டி ஒன்று அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

இந்த முச்சக்கரவண்டிமூலம் நோயாளர்களை வைத்தியசாலையில் இருந்து அம்புலன்ஸ் படகில் ஏற்றி இறங்குதுறைக்குக்கொண்டு செல்ல முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது (ஐ-10)

## கணிதப் போட்டி

கோப்பாய்,செப்.25

கோப்பாய் கோட்டப் பாடசாலைகளின் ஆரம்பக்கல்வி செயற்றிட்ட எண் கணித சதுரப்பெட்டி கணித்தல் போட்டி இன்று சனிக்கிழமையும் வாய்ப்பாடு மனனம், சிறுவர் அரங்கப் போட்டிகள் நாளை மறுதினம் திங்கட்கிழமையும் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும் என கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் தி.சித்திரவேல் அறிவித்துள்ளார். (ஐ-72)


## முக்கிய அறிவித்தல்

### கரைச்சி வடக்கு ப.நோ.கூ.சங்கம்

(வரையறுக்கப்பட்டது)

கிளைகள் ரீதியாக அங்கத்தவர்கள் விவரங்களைத் திரட்டுதலும் புதிய அங்கத்தவர்களை இணைத்துக் கொள்ளலும்

கடந்த வருடம் வன்னியில் ஏற்பட்ட போர்ச் சூழ்நிலை காரணமாக எமது சங்கம் பல இடங்களிலும் இடம்பெயர்ந்து சங்க ஆவணங்களையும், சொத்துக்களையும் கைவிட்டு தற்போது தமது சொந்த இடத்தில் மீளவும் இயங்கி வருகின்றது. கண்டாவளை பிரதேச செயலர் பகுதியில் மக்கள் முழுமையாக மீள்குடியேற்றப்பட்டுள்ளனர்.

எதிர்காலத்தில் எமது சங்கத்தின் பொதுச் சபையினையும், இயக்குநர் சபையினையும் கிளை ரீதியாக அங்கத்தவர்களின் விவரங்களைத் திரட்ட வேண்டியுள்ளது. அத்துடன் புதிய அங்கத்தவர்களையும் சேர்த்துக்கொள்ள முடியும்.

அங்கத்தவர்களின் விவரத்தைத் திரட்டுவது தொடர்பில் ஏற்கனவே சங்கத்திலிருந்த அங்கத்தவர்கள் பின்வருவனவற்றை கவனத்தில்கொண்டு செயற்படுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

* தாங்கள் சங்கத்தின் ஏதாவது கிளையொன்றில் அங்கத்தவராகச் சேர்ந்திருப்பின் அதற்கு ஆதாரமாக பங்குப்பணம் கட்டிய பற்றுச்சீட்டு அல்லது சேமப் புத்தகத்தில் பங்குப்பணம் கட்டியமையை அல்லது ஆதாரப்படுத்தக்கூடிய சான்றளிக்கக்கூடிய விவரமிருப்பின் அதனை சங்கச் செயலாளருக்கு/தலைவருக்குச் சமர்ப்பித்து இரு பிரதிகளில் அங்கத்துவ விண்ணப்பப்படிவத்தைத் தயாரித்துச் சங்கச் செயலாளரிடம் ஒப்படைக்கவும்.
* ஏற்கனவே அங்கத்தவராகச் சேர்ந்து அவர்கள் ஆதாரங்களைச் சமர்ப்பிக்க முடியாதவிடத்து 100ரூபா பங்குப்பணத்தைச் செலுத்தி இருபிரதிகளில் அங்கத்துவ விண்ணப்பத்தைப் பூர்த்திசெய்து சங்கச் செயலாளரிடம் அவற்றைச் சமர்ப்பிப்பதுடன், தான் பழைய அங்கத்தவர் என்பதை உறுதிப்படுத்த சத்தியக் கடதாசி ஒன்றைத் தயாரித்து முறைப்படி பூரணப்படுத்தி சங்கச் செயலாளரிடம் பூரணப்படுத்திய விண்ணப்பப்படிவத்துடன் ஒப்படைக்கவும் (எதிர்காலத்தில் பழைய கணக்கு விவரம் கிடைக்கும் பட்சத்தில் அதில் குறிப்பிடப்படும் பங்குப்பணம் தற்போது கட்டிய பங்குப்பணத்துடன் சேர்க்கப்படும்).
* ஒரு பங்கின் பெறுமதி 100/= ஆகும்.
* புதிய அங்கத்தவர்கள் 100/= பங்குப்பணத்தைச் செலுத்தி அங்கத்துவ விண்ணப்பப்படிவங்களை இரு பிரதிகளில் பூரணப்படுத்திச் சங்கச் செயலாளரிடம் ஒப்படைக்கவும்.

இந்த நடவடிக்கைக்கான இறுதித் திகதி: 30.11.2010 ஆகும்.

திரு.அ.கேதீஸ்வரன் (தலைவர்). (சி/570527) திரு.க.செல்வராசா (செயலாளர்).



## தீபாவளியை முன்னிட்டு TIP TOP சொகுசு பஸ் (AC.Baloon) 27.09.2010 திங்கட்கிழமை தொடக்கம் (யாழ்.கொழும்பு) ரூபா ~~1200~~/ 900/= குறைக்கப்பட்டுள்ளது

**எமது பிரதான காரியாலயம்-கொழும்பு**
296/A, காலி வீதி, வெள்ளவத்தை.
0112361144, 2364999, 0773236354

**எமது பிரதான காரியாலயம்-யாழ்ப்பாணம்**
வின்சர் தியேட்டர் (சந்தோச அருகாமையில்)
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
0217903073, 0777351588, 0773236354

கிளை:
**RB.BOOKING CENTRE**
நவீன சந்தை கீழ்த்தளம் (வைரவர் கோயில் அருகாமை)

| யாழ்ப்பாணம் BOOKING CENTRE | Colombo BOOKING CENTRE |
|---|---|
| 1) | 1) |
| 2) | 2) |
| 3) | 3) |

| யாழ்ப்பாணம் BOOKING CENTRE | COLOMBO BOOKING CENTRE |
|---|---|
| 01) VINAYAGAR COMMUNICATION SITHANKERNY JUNCTION JAFFNA. 0212250001/0778932805 | 01) COSY RESTAURENT (PVT) NO.25, STATION ROAD WELLAWATTE, COLOMBO-06 0112504020/0112581359 |
| 2) IYNKARAN MOTORS MARKET VIEW, JAFFNA ROAD MANIPAY. 0215671073/0215671074 | 2) MICRO COMPUTER TECHNOLOGY NO.224, 1st FLOOR GALLE ROAD WELLAWATTE, COLOMBO-06 0112363322 |
| 03) LANKA FUEL MART NO.173, PALALY ROAD PARAMESHWARA JUNCTION THINNAWELI SOUTH JAFFNA. 0212222041 | 03) ARB AUDIO VIDEO VISION NO.358, GALLE ROAD, WELLAWATTE COLOMBO-06 0112505538/0777328279 |
| 04) BHARATHY. COM PALALY ROAD KONDAVI 0212225148 | 04) VASANTHAN STORES NO.101C, HAMDAN LANE WELLAWATTE COLOMBO-06 0777667503/0773593469 |
| 05) AJI COMMUNICATION CHULIPURAM EAST, CHULIPURAM. 0779346534 | 05) VIVIAN TRADE NO.308C, GALLE ROAD, WELLAWATTE, COLOMBO-06 0112587639/0773499570 |
| 06) வளர்பிறை பட்டுச்சோலை பிரதான வீதி, சங்கானை. 0217913186/0776283429 | 06) BAGAVAN TRAVELS NO.89, KOTAHANA STREET COL-13 0112435183/0752726961 |
| 07) MAGNIAJI STORES NO.866, K.K.S. ROAD, JAFFNA. 0773484992 | 07) GEETHA COMMUNICATION NO.79,MESSENGER STREET, COLOMBO-12 0755843282 |
| 08) THE PHONE SHOP MAIN STREET, NELLIYADY KARAVEDDY. 0772850285/0212263770 | 08) DATACOM COURRIER SERVICES NO.3,W.A.De SILVA MAWATHA, COLOMBO-06 0112596140 |


## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 04.09.1938



உதிர்வு: 08.10.2006

எங்கள் அன்புச் சகோதரியே!
தாயே! குடும்பத்தினருக்கு ஓயாது
சேவை செய்த தாயினும் நல்ல
தாயே! இறைவன் உங்களுக்கு
ஓய்வு கொடுப்பதற்காக தம்மடி
சேர்த்துக்கொண்டார்
ஆனால், ஆண்டுகள் நான்கு சென்றாலும்
எங்கள் துயரம் தீரவில்லையம்மா

என்றும் உங்கள் ஆத்மா
சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

### அமரர் தவமணி வன்னியசிங்கம்

555, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

சகோதர, சகோதரிகள்,
பெறாமகள் - ஈஸ்வரஜனனி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலாலி உயர் பாதுகாப்பு வலயத்தினுள் 5000 தென்னங்கன்றுகள் நடத் திட்டம்

## கட்டளைத் தளபதி ஆரம்பித்து வைத்தார்



யாழ்ப்பாணம், செப். 25

பலாலி உயர்பாதுகாப்பு வலயத்திற் குள் 5000 தென்னைமரக் கன்றுகளை நடும் பெரும் திட்டம் ஒன்றை யாழ். பாதுகாப்பு படைகளின் தலைமையகம் ஆரம்பித்துள்ளது.

கடந்த வியாழக்கிழமை இந்தத் திட்டம் தொடங்கப்பட்டது. யாழ். மாவட்டக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க முதலாவது தென்னங்கன்றை நட்டார்.

பலாலிப் படைத்தள வளாகத்திற்குள் அன்றைய தினமே 300 தென்னங்கன்றுகள் நடப்பட்டன. தென்னைப் பயிர்ச் செய்கை அதிகாரசபையில் இருந்து இதற்கான தென்னங்கன்றுகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

நாட்டின் பொருளாதாரத்திற்கும் அரசின் வடக்கு பொருளாதார அபிவிருத்தித் திட்டத்திற்கும் உதவும் நோக்குடன் தென்னங்கன்றுகளைப் பயிரிட இராணுவம் முன்வந்துள்ளது என பலாலி தலைமையகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் பனை மரங்களை அதிகளவில் பயிரிடுவதற்கு இராணுவம் உதவி செய்யத் தீர்மானித்துள்ளது என அந்த அறிக்கை கூறுகின்றது. மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க இதற்கான வழிகாட்டல்களை வழங்கி உள்ளார்.

பனை அபிவிருத்திச் சபையுடன் இணைந்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளது.

யாழ். குடாநாட்டில் உள்ள அனைத்துப் படை முகாம் பகுதிகளிலும் இருந்து 4 லட்சம் பனம் விதைகளைச் சேகரித்து வழங்குமாறு கட்டளைத் தளபதி தெளிவான அறிவுறுத்தல்களை வழங்கி உள்ளார் என பலாலி படைத் தலை மையகம் தெரிவித்தது.

கடந்த 30 ஆண்டுகளாகத் தொடர்ந்த போரில் வடக்கில் இருந்த பெருமளவு பனை மரங்கள் அழிக்கப்பட்டிருந்தன. (உ)

# சுன்னாகம் மயிலணி ம.வி நூற்றாண்டு விழா நிகழ்வுகள்

வலி.வடக்கு, செப்.25

சுன்னாகம் மயிலணி சைவ மகா வித்தியாலய நூற்றாண்டு விழா நிகழ்வுகள் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை விவேகானந்தர் மண்டபத்தில் அதிபர் நா.சிவநேசன் தலைமையில் நடை பெறவுள்ளது.

குமாரசாமி அரங்கில் நடைபெறும் நிகழ்வுகளில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரனும், சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம், ஓய்வுபெற்ற ஆசிரியை திருமதி சறோஜினிதேவி குலேந்திரராஜா ஆகியோரும், கௌரவ விருந்தினராக ஏழாலை மகாவித்தியாலய ஆசிரியை திருமதி லோ.சிவலிங்கமும் கலந்து கொள்ளவுள்ளனர்.

ஆசியுரையை சுன்னாகம் ஸ்கந்த வரோதயாக் கல்லூரி அதிபர் செஞ்சொற் செல்வர் ஆறுதிரு முருகனும் நிறுவுனர் நினைவுப் பேருரையை ஓய்வுபெற்ற உப அதிபர் திருமதி க.பரமசாமியும் வழங்குவர்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக சட்டத்துறைத் தலைவர் கல்வியியல் பேராசிரியர் மா. சின்னத்தம்பி கல்லூரியின் நூற்றாண்டு மலரைவெளியிட்டுவைக்கக.குலேந்திரராஜா முதல் பிரதியை பெறவுள்ளார்.

மலர் வெளியீட்டுரையை அகவிழி பிரதம ஆசிரியர் தெ. மதுசூதனன் நிகழ்த்தவுள்ளார்.

மாலை நிகழ்வுகள் பிற்பகல் 2 மணிக்கு இரத்தினேஸ்வர ஐயர் அரங்கில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தியும், சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வணிக பீட முகாமைத் துவப் பீடாதிபதி பேராசிரியர் க.தேவராசா, உடுவில் கல்விக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் செ.குபேந்திரநாதன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.(த-201-86)

# ஆனைக்கோட்டை குணபாலன் வித்தியின் பவளவிழா நாளை

வலி.வடக்கு, செப்.25

ஆனைக்கோட்டை உயரப்புலம் குணபாலன் வித்தியாலயத்தின் 50 ஆவது ஆண்டு நிறைவு விழா நிகழ்வுகள் நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு கல்லூரி அதிபர் என்.தனபாலசிங்கம் தலைமையில் பாடசாலை மாணிக்கம் பாக்கியம் திறந்தவெளி அரங்கில் நடைபெறவுள்ளன.

ஆசி உரைகளை உத்துங்க விநாயகர் ஆலய பிரதம குரு சிவஸ்ரீக.குகதாசக் குருக்கள், தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர் செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன் ஆகியோர் வழங்குவர்.

வாழ்த்துரைகளை ஊர்காவற்றுறை மாவட்ட நீதிபதி ஆர்.வசந்தசேனன், வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ். சுந்தரசிவம், சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ். கந்தசுவாமி ஆகியோர் நிகழ்த்துவர்.

ஆண்டு விழா நூல் வெளியீட்டுரையை யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வணிக முகாமைத்துவத்துறை பீடாதிபதி பேராசிரியர் க.தேவராசா நிகழ்த்துவார். அத்துடன் நூலை பேராசிரியர் வெளியிட்டு வைக்க முதற்பிரதியை தொழிலதிபர் மாணிக்கம் சுப்பிரமணியம் பெற்றுக்கொள்வார்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாகத் தொழிலதிபர் மாணிக்கம் சுப்பிரமணியம்-திருமதி மாலதி சுப்பிரமணியம் தம்பதியினரும் சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணம் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கே. சிவராசாவும் கலந்துகொள்வர்.

பாடசாலை கலைச் சங்கமம் நிகழ்வில் கொக்குவில் இந்துக் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி, இணுவில் மத்திய கல்லூரி, சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம், ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயம் ஆகியவற்றின் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (த-201-86)

# வீதிப் புனரமைப்புக்கு அரச அதிபரிடம் கோரிக்கை

வடமராட்சி,செப்.25

அல்வாய் வடக்கு நாவலடி பெரிய தம்பிரான் முருகன் ஆலயத்திற்கு அருகிலுள்ள கந்தப்பு வளவு வீதியைப் புனரமைத்துத் தருமாறு ஆலய நிர்வாகிகள் யாழ்.அரச அதிபரைக் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சுமார் 50 வருடங்களுக்கு மேலாக இந்த வீதியில் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படவில்லை. இதனால்இப்பாதையில் பயணிப்பது சிரமத்தையும் வேதனையையும் ஏற்படுத்தியிருக்கிறன்றது. 2005 ஆம் ஆண்டு முதல் இந்த வீதியின் புனரமைப்புத் தொடர்பாக உரியவர்களுக்குப் பலமுறை அறிவித்தும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையெனவும் அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் பிரதிகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பருத்தித்துறை பிரதேச செயலர், பருத்தித்துறை பிரதேசசபைச் செயலாளர், அ.விநாயகமூர்த்தி எம்.பி ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.(க)

# சுயதொழில் ஓய்வூதியத் திட்டத்தில் இதுவரை 36 ஆயிரம் பேர் இணைவு

## யாழ். மாவட்ட அதிகாரி தகவல்

யாழ்ப்பாணம், செப்.25

இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபையின் சுயதொழில் ஓய்வூதியத் திட்டத்தில் இதுவரை சுமார் 36 ஆயிரம் பேர் இணைந்துள்ளதாக இச்சபையின் யாழ். மாவட்ட இணைப்பு அதிகாரி பா. பிரதீபன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு:

இலங்கை சமூக பாதுகாப்பு சபையின் இத்திட்டத்தில் ஆறாயிரம் ரூபாவிற்குட்பட்ட வருமானமுடைய 18 வயது முதல் 59 வயதுக்குட்பட்ட அரச உத்தியோகத்தர்கள், ஊழியர் சேமலாப நிதியைப் பெறுவோர் தவிர்ந்தமக்கள் இதில் இணைக்கப்பட்டு தமது 60ஆவது வயதில் மாதாந்த ஓய்வூதியத்தினைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

இத்திட்டம் அரச திறைசேரியின் பங்களிப்புடன் நிதி திட்டமிடல் அமைச்சினால் இலங்கை சமூக பாதுகாப்புச் சபைமூலம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

இத்திட்டத்தில் இணைய விரும்புபவர்கள் தமது பிறப்பு அத்தாட்சிப்பத்திரத்துடன் அந்தந்தப் பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர்களுடன் தொடர்புகொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார்.

இதேவேளை இவ்வருடம் மாத்திரம் 17 பேர் தமக்கான ஓய்வூதியமும் 30 பேருக்கான இறப்புப் பணிக்கொடையும் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-16)




# வேலை வாய்ப்புத் தொடர்பான விண்ணப்பம் இளைஞர், யுவதிகளைச் சென்றடைவதில்லை

## முதலீட்டுச்சபை அதிகாரி சுட்டிக்காட்டு

வடமாகாணத்திலுள்ள தமிழ் இளைஞர், யுவதிகளிடம் வேலை வாய்ப்புத் தொடர்பான விண்ணப்பங்கள் சென்றடைவதில்லை என இலங்கை முதலீட்டுச் சபையின் வடபிராந்திய பிரதிப் பொது முகாமையாளர் எஸ். ஜெயமனோன் கூறினார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:

புதிய நிறுவனங்கள், வங்கிகள் போன்றன தமது வேலைவாய்ப்பு விவரங்களை ஆங்கிலப் பத்திரிகை மற்றும்ஒருசிலதமிழ்ப் பத்திரிகையிலேயே விளம்பரப்படுத்துகின்றன.

இதனால் இங்குள்ள வேலை வாய்ப்பைத் தேடும் இளைஞர், யுவதிகள் அத்தகவல்களைப் பெற்றுக் கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

எனவே இங்குள்ள வேலைவாய்ப்புக்களை வெளி இடங்களில் உள்ளவர்கள் பெற்றுக்கொள்ள ஏதுவாக அமைகிறது.

இங்கு முதலீடு செய்வதற்கு வரும் நிறுவனங்கள் இங்குள்ள மனிதவளம் தொடர்பாகப் போதிய நம்பிக்கையீனத்தையே கொண்டுள்ளார்கள்.

எனவேதான் இவர்களுக்குரிய மனித வளத்தை வழங்கும்பொருட்டு ஒவ்வொரு தரங்களையுடைய இளைஞர் யுவதிகளின் விவரங்கள் எம்மால்திரட்டப்பட்டு வருகின்றன.

இதன் மூலம் இவர்களுக்கான வேலைவாய்ப்புக்களை நாம் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளோம்.

எனவே இங்குள்ள சகல இளைஞர், யுவதிகளும் தமது விவரங்களை இலங்கை முதலீட்டுச் சபையின் யாழ். மாவட்ட அலுவலகத்தில் பதிவு செய்துகொள்ளுமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (த-201-16)

# மானிப்பாய் கூட்டுறவுச் சங்கத்தின் பணியாளர்களுக்கான சம்பளம் தாமதம்

## அதற்காகப் பொருள்களைப் பெறுமாறு பணிப்பு

சண்டிலிப்பாய், செப்.25

மானிப்பாய் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் மூன்று மாதங்களுக்கான சம்பளத்தை பணியாளர்களுக்கு வழங்காமல் காலம் கடத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தற்பொழுது சம்பளத்தில் 50 வீதத்திற்குச் சங்கத்தில் பொருள்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

சங்கத்தில் வியாபாரமின்மையால் இரண்டரைக் கோடிக்கு மேல் நிதிநெருக்கடி ஏற்பட்டுள்ளது. வங்கியில் எடுத்த கடனுக்கு வட்டி செலுத்தவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதால் பணியாளர்களுக்கு சம்பளம் வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மானிப்பாய் பரிஸ் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க முகாமையாளரிடம் கேட்டபோது,

பணியாளர்களின் வேண்டுகோளுக்கு இணங்கவே 50 வீதம் சம்பளத்தில் பொருள்கள் வழங்கப்பட்டன எனத் தெரிவித்துள்ளார். (204-115)



வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் சமுர்த்தி சமூக அபிவிருத்தி மன்றத்தால் திறமையான வறிய மாணவர்களுக்கு தலா 2 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு ஆவரங்கால் சிவசக்தி மண்டபத்தில்அண்மையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வலி.கிழக்கு பிரதேச செயலர் சி.ஏ.மோகன்றாஸினால் மலர்மாலை சூட்டி வரவேற்கப்படுவதை முதலாவது படத்திலும்-

கோப்பாய் உதவிப் பிரதேச செயலர் செல்வி அ.பிரேமினி [illegible] ஆங்கிலப் பேச்சு இடம்பெறுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒரு தொகுதியினரையும் அடுத்துள்ள படங்களிலும் காணலாம்.

(படங்கள்: மருதன்,குமரசிறி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முக்கிய தினங்கள்

சு.நிலா

| | |
|---|---|
| ஜனவரி 12 | - இளைஞர் தினம் |
| பெப்ரவரி 14 | - உலக காதலர் தினம் |
| பெப்ரவரி 28 | - தேசிய அறிவியல் தினம் |
| மார்ச் 08 | - சர்வதேச மகளிர் தினம் |
| மார்ச் 11 | - பொதுநலவாய தினம் |
| மார்ச் 13 | - உலக சிக்கன தினம் |
| மார்ச் 15 | - உலக ஊனமுற்றோர் தினம் |
| மார்ச் 22 | - சர்வதேச குடிநீர் தினம் |
| மார்ச் 23 | - உலக வளிமண்டல தினம் |
| மார்ச் 27 | - சர்வதேச நாடக தினம் |
| ஏப்ரல் 01 | - உலக முட்டாள் தினம் |
| ஏப்ரல் 07 | - சர்தேச சுகாதார தினம் |
| ஏப்ரல் 12 | - சர்வதேச தாதிகள் தினம் |
| | உலக விண்வெளி தினம் |
| ஏப்ரல் 22 | - சர்வதேச பூமிப்பாதுகாப்புத்தினம் |
| ஏப்ரல் 23 | - சர்வதேச புத்தக தினம் |
| மே 01 | - சர்வதேச தொழிலாளர் தினம் |
| மே 03 | - சர்வதேச பத்திரிகைச் சுகந்திர தினம் |
| மே 08 | - சர்வதேச செஞ்சிலுவை |
| | செம்பிறை தினம் |
| | சர்வதேச நூதனசாலை தினம் |
| மே 15 | - குடும்ப நலன் தினம் |
| மே 17 | - உலக தகவல் தொடர்பு தினம் |
| மே 21 | - சர்வதேச கலாசார பண்பாட்டுத்தினம் |
| மே 31 | - சர்வதேச புகைத்தல் மறுப்பு தினம் |
| ஜுன் 05 | - சர்வதேச சுற்றுச்சூழல் தினம் |
| ஜுன் 07 | - உலக தொல்பொருளியலாளர் தினம் |
| ஜுன் 26 | - சர்வதேச போதைப்பொருள் தடுப்பு தினம் |
| ஜுன் 27 | - உலக நீரிழிவாளர் தினம் |
| ஜுலை 11 | - சர்வதேச சனத்தொகை தினம் |
| ஜுலை 28 | - சர்வதேச அகதிகள் தினம் |
| ஓகஸ்ட் 06 | - உலக சமாதான தினம் |
| ஓகஸ்ட் 29 | - சர்வதேச விளையாட்டுத் தினம் |
| செப்ரெம்பர் 08 | - சர்வதேச எழுத்தறிவு தினம் |
| செப்ரெம்பர் 16 | - உலக ஓசோன் தினம் |
| செப்ரெம்பர் 25 | - உலக செவிப்புலனற்றோர் தினம் |
| செப்ரெம்பர் 27 | - உலக சுற்றுலா தினம் |
| ஒக்ரோபர் 01 | - உலக சிறுவர் தினம் |
| ஒக்ரோபர் 03 | - சர்வதேச மது ஒழிப்பு தினம் |
| | உலக உயிர்கள் தினம் |

*(வளரும்)*



# நமது பெரு...

வடக்கு மறை மாவட்ட ஆயராகப் பொறுப்பேற்றுக்கொண்ட ஆயர் சமேரியா

ஆயர் பெற்ராச்சினி வடக்கு மறைமாவட்ட ஆயராக இருந்த காலகட்டத்தில் (1846-1855) இரண்டு கத்தோலிக்க ஆங்கிலப் பாடசாலைகள் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கபட்டிருந்தன. ஆண்களுக்காக ஆரம்பிக்கபட்டதே இன்றைய புனித சம்பத்தரிசியர் கல்லூரி. இதேநேரம்

1862 இல் ஐரோப்பாவில் இருந்து 6 திருக்குடும்ப கன்னியரை அழைத்து வந்தார். இவர்களே இலங்கைக்கு வந்த கத்தோலிக்க சமயத்தின் முதற்பெண் துறவிகளாவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. 24 மே 1862 இல் தற்போதைய

# யாழ்ப்பாணம் திருக்கு...

யாழ்ப்பாண பழைய நீதிமன்றச் சுற்றாடலில், யாழ்ப்பாணம் பழைய வாடி வீடு அமைக்கப்பட்ட காணிக்குள் அதற்கு முன்பதாகப் பெண்களுக்கான ஒரு பாடசாலையும் அமைக்கப்பட்டது. திருமதி மேரி ஆன் ஓ பிளானகன் மற்றும் அவரது மூத்த மகளான கத்தரின் ஓ பிளானகன் ஆகியோரால் நடத்தப்பட்ட மேற்படி பாடசாலையே பின்னர் திருக்குடும்பக்கன்னியர் மடமாக மாற்றப்படுகிறது.

1862 இல் ஆயர் பெற்ராச்சினியைத் தொடர்ந்து




இடத்தில் திருக்குடும்பக்கன்னியர் மடத்திற்கு அடிக்கல் இடப்பட்டது. அவ்விடத்தில் இருந்ததாகக் கூறப்படும் மஞ்சள்கரைச்சான் குளத்தை அருகிலிருந்த தேவநீர் குளத்து மண்ணெடுத்து நிரவி இவ்விடம் உருவாக்கப்பட்டதுடன் 1870 களில் இவ்வேலைகள் பூரணத்துவப் படுத்தப்பட்டன. 1862 களிலிருந்து 1969 வரை ஒரு நூற்றாண்டுக்கு மேலாக ஐரோப்பிய திருக்குடும்பக் கன்னியர்களால் நிர்வகிக்கப்பட்டுவந்த இந்த நிறுவனத்தின் முதல் சுதேசிய திருக்குடும்பக் கன்னியாக மாட்டினா பொறுப்பேற்றார். யாழ்ப்பாணத்திலிருந்து பின்னர் இலங்கை முழுமைக்குமானதிருக்குடும்பக் கன்னியர் மடங்கள் வியாப்பித்துச் சென்றுள்ளன.

இன்று எம்மிடமுள்ள மூத்த கட்டடக்கலை வெளிப்பாடுகளின் ஒரு தொகுதியைத்

திருக்கு...
கன்னி...
நல்ல...
பேணி...
என்பது...
சமூகப்...
வரலா...
சேர்த்...
பெரு...
சேர்க்...
வெவ்...
காலக...

சேர்ந்...
உள்ள...
கெட...
இக்க...
இன்னு...
வருட...
கொள...
எ...
பாரிய...
இ...
செந்...
(Class...
செல்...
கட்டு...
எமது...
வர ல...
களுக்...
ணமா...
உள்ள...
கு...
என்ப...
கலை...
வகை...
பாணி...
முடை...
நிறுத்...
இக்க...

# இப்படியானவர்கள் திருந்த வேண்டும்



கவிநேசன்

நல்லைக்கந்தன் தேர்திருவிழா சனத்திரள் மத்தியில் கோலாகலமாக இனிதே நிறைவேறியுள்ளது.

எல்லாமே இழந்து போயுள்ள எம்மவர்கள் மனங்களின் தெய்வீக பலம்தான் இதயங்களை இதப்படுத்தப் கூடியது.

வந்தோரை வரவேற்பதும், வாழ வைப்பதும் எம்மண்ணிற்கே உரித்தான தனித்துவ பண்பாகும். அந்த வகையில் நல்லைக்கந்தன் திருவீதியெங்கும் தாகசாந்தி நிலையங்கள், அன்னதான மடங்கள் எனச் சிறப்புப்பெற்றிருந்தது.

ஆலயச்சூழல் சனத்திரளினால் நிறைந்து வழிந்துகொண்டிருந்தது. பறவைக்காவடி, தூக்குக்காவடி, தீச்சட்டிகள், அங்கப்பிரதிஷ்டை எனத் தெய்வீகக்காற்று சில்லென்று வீசிக்கொண்டிருந்தது.

அந்தத் தெய்வீகக் காற்றினை சுவாசித்துக்கொண்டிருந்தபோது தான் - அந்தக்காட்சி என் கண்ணில் பட்டது.

அங்கு ஒரு குழுவினர் பசுவதைக்கெதிராகக் கையெழுத்து வேட்டையினை நடத்திக்கொண்டிருந்தனர்.

'அப்பாடா மீண்டும் எம்மண்ணில் ஞானப்பிரகாசர் வந்துவிட்டாரா? என்ற மகிழ்ச்சி மனமெங்கும் இழையோடியது.

மெதுவாக அந்தக்குழுவினரை அண்மித்து அங்கு நடப்பதை அவதானித்துக்கொண்டிருந்தேன்.

''அப்போது அங்கு நின்ற அவர் ஒரு படித்த மனிதன்போல் காட்சியளித்தார்.

அவரிடம் சென்று கையெழுத்து வேட்டையில் ஈடுபட்ட குழுவினர் தமது விண்ணப்பத்தினை நீட்டி பசுவதைக்கெதிராக இதில் ஒரு கையொப்பம் இடுங்கள் என்று பணிவுடனும், அன்புடனும் கேட்டுக்கொண்டனர்.

அப்போது அந்த மனிதர் சீறிப்பாயத்தொடங்கினார் பாருங்களேன்.

''நீங்கள் பசுவை வெட்டவேண்டாமென்றால் நாங்கள் எதைச் சாப்பிடுவது. பேசாமல் உங்கட வேலையைப் பாருங்கோவன். இப்படி ஏன் தேவையில்லாத பிராக்குகளைப் பார்க்கிறீங்கள்'' என்று கோபக்கனல் சொட்டச் சொட்டப் பேசிக்கொண்டிருந்தார்.


''அட இந்த நல்ல விடயத்திற்கா இப்படிச் சீறிச்சினக்கிறான் பாவி என்று எனக்குள்ளே திட்டினேன். ஆனால் அவரைப் பார்த்தபோது வேட்டியும், சால்வையும் அணிந்து தெய்வீகப்பொலிவுடன் காணப்பட்டார்.

'பார்த்தால் பசுபோல இருக்கிறார். பசுவதைக்கெதிராக கையெழுத்துக் கேட்டால் புலி போல பாய்கிறார் என்று எனக்குள்ளே விமர்சித்துக் கொண்டேன்.

பார்த்தீர்களா? கேட்டீர்களா? விடயத்தை எமது சமூகத்தில் நல்லதைச் செய்யப்போனால் இப்படியானவர்கள் ''நந்தி'' மாதிரிக் குறுக்கே நின்று ''மந்தி'' விளையாட்டுக்காட்டுதுகள்.

பசுவதைக்கஞ்சி யாழ்ப்பாணத்தைவிட்டு ஓடிய ஞானப்பிரகாச சுவாமிகள் வாழ்ந்த புண்ணிய பூமியில் இப்படியான மனிதர்களும் இருக்கிறார்கள் என்று நினைக்கும்போது உண்மையில் வெட்கமாக இருக்கிறது. துக்கமாகவும் இருக்கிறது.

இப்படியானவர்கள் தாமாகவே திருந்தும் வரைக்கும் எமது சமூகத்தில் எதையுமே சீர்செய்ய முயாது என்பது யதார்த்தம். நல்லூர்க்கந்தனே இனிமேல் வது எம்மவர்களுக்கு நல் அறிவுபுகட்ட நீதானப்பா வழிசெய்யவேண்டும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடலரசன்...

(சென்ற வாரத்...

சிவபிரானாடிய தாண்டவங்கள் 108 என நாட்டிய... சிவாகமங்களும் கூறுகின்றன. இத்தாண்டவங்கள் ... முக்கியமாகக் கொண்டது. சிவனுக்கேயுரிய கம்பீரம்... தாண்டவங்களில் எம்பிரான் தனித்தும் முருகன், ப... தேவர்களுக்காகவும் ஆடியுள்ளார். ஒவ்வொரு தாண்... தலத்தினையும் இதர இடங்களையும் அரங்காகக் கொ... தாண்டவங்களில் சப்த தாண்டவங்கள் சிறப்பானவை... திதி, சங்காரம், திரோபவம், அனுக்கிரகம்'' ஆகிய ஐ... தனித்தும், ஒரு சேரவும் விளக்குகின்றன. இவ் ஐந்து... விளக்கும் ஆனந்த தாண்டவ நடனமே உண்மையா... இந் நடனத்தின் உருவம் தான் இறைவன் எங்கும், எ... உணர்த்துகின்றது. எம்பிரான் அம்பலத்திலும் ஆடு... புல்லிலும், பூண்டிலும், பிராணியிலுள்ள சக்தியிலு... ஆனந்தக் கூத்தன். அற்புதக் கூத்தன், நாம் பிறவிப்... கூத்தன்.

'' சிற்பரஞ் சோதி சிவானந்தக் கூத்தனை
சொற்பதமாம் அந்த சுந்தரக் கூத்தனை
பொற்பதிக் கூத்தனை பொற்றில்லைக் கூத்த...
அற்புதக் கூத்தனை யாரறிவாரே''

ஆனந்த நடனமாடிக் கொண்டிருக்கும் எம்பெரும... அசையாப் பொருள்களும் ஆனந்தமான பொருள்க... ஒத்தாடுகின்றன. அவர் கூத்தாடும் போது ... ஆகமங்களும், கீதங்களும், அண்டங்கள் ஏழும் பூத... களோடு புவனங்களும் ஆடின. அதுமட்டுமன்றி,

உம்பரிற் கூத்தனை உத்தமக் கூத்தனை
செம்பொற்றிரு மன்றுட் சேவகக் கூத்தனை
சம்பந்தக் கூத்தனை தற்பரங் கூத்தனை
இன்புற நாடி என் அன்பினில் வைத்தேனென்...

# பெருமை மிகுந்த மரபுரிமைகள்




திருக்குடும்பக் கன்னியர் மடங்கள் நல்ல முறையில் பேணி வருகின்றது என்பது அதன் சமூகப் பண்பாட்டு வரலாற்றோடு சேர்த்து அதற்குப் பெருமை சேர்க்கிறது. வெவ்வேறு காலகட்டங்களைச்

# குடும்பக் கன்னியர்மடம்

சேர்ந்த சேர்ப்புகள் (Additions) உள்ளனவாயினும் அதன் மூலம் கெடாது அதன் தொடர்ச்சியாகவுள்ள இக்கட்டடங்களின் மூத்த தொகுதி இன்னும் இரு வருடங்களில் தமது 150 வருடத்தினை (2012 இல்) கொண்டாடவுள்ளன.

எளிமையான ஆனால் மிடுக்கும் பாரிய தன்மையுமுடைய இக்கட்டுமானம் ஐரோப்பிய செந்நெறிக் கட்டடக்கலையின் (Classical architerture) பரந்துபட்ட செல்வாக்கிற்குட்பட்ட ஒரு கட்டுமானமாகும். அவ்வகையில் எமது காலனித்துவ கால கட்டட வர லாற்றின் முதன்மைச் சான்று களுள் ஒன்றாக - வாழும் உதார ணமாக இக்கட்டடங்கள் உள்ளன.

குறிப்பாக டொறிக் (Doric) எனப்படும் கிரேக்கக் கட்டடக் கலைப் பாணியின் ரோமானிய வகைக்குரிய ரஸ்கன் (Tuscan) பாணிக்குரிய பாரிய பீட முடைத்தூண்களால் தூக்கி நிறுத்தப்பட்டுள்ள இக்கட்டுமானம் தனது வளாகத்தின் ஒரு பகுதியாக ஒரு தேவாலயத்தினையும் கொண்டுள்ளது. பழைய சாயக்கண்ணாடி (Staindglass) வேலைப்பாடுகளை யுடைய சாளரங்கள், கதவுகளைக் கொண்டுள்ள மேற்படி தேவாலயத்தின் பாடகர் பகுதி மாடிமுகப்பாய் (Balcony) அமைந்திருப்பது குறிப்பிடத்தது.

உயரமும், எளிமையையும் , விலாசமுடைய நிரற் தூண்களுடைய அதன் விறாந்தைகளும் எமது கட்டடக்கலைப் பாரம்பரியத்தின் சிறப்புக்கூறுகள் என்பதில் எந்தச் சந்தேகமுமில்லை.



# சனின் அற்புத நடனங்கள்

சென்ற வாரத் தொடர்ச்சி)
என நாட்டிய நூல்களும் சிற்பநூல்களும்
ண்டவங்கள் நாட்டியக் கலையின் தாளக் கூறினை
புரிய கம்பீரம் நிறைந்தது. சிவனாடிய 108
முருகன், பார்வதி மற்றும் தேவர்களுடனும்
வொரு தாண்டவ நடனத்திற்கும் ஒவ்வொரு
ரங்காகக் கொண்டார். எம்பிரானின் 108
சிறப்பானவை. உலகத்தினுடைய ''சிருஷ்டி.
ம்'' ஆகிய ஐந்து தொழிற்பாடுகளைத்
. இவ் ஐந்து தொழில்களையும் ஒருசேர
உண்மையானது எனக் கொள்ளப்படுகிறது.
எங்கும், எமக்குள்ளும் நிறைந்திருப்பதை
திலும் ஆடுகின்றான். ஒவ்வொரு
சக்தியிலும் ஆடுகின்றான்.பகவான்
ம் பிறவிப் பயனை எய்தவல்ல சுந்தரக்

னை
னை
லைக் கூத்தனை

ம் எம்பெருமானுக்கு உலகில் அசையும் பொருள்களும்,
பொருள்களே... இவை ஒவ்வொன்றும் எம்பிரானுடன்
அவருடன் இணைந்து வேதங்கள் ஆடுகின்றன.
ஏழும் பூதங்
டுமன்றி,
னை
த்தனை
னை
த்தேனென்றே'



"நாட்டியக்கலா வித்தகர்"
திருமதி அ.உமாமகேஸ்வரி (B.F.A)
உடுவில் தெற்கு, மானிப்பாய்.

(வளரும்)

# 'பழசை மறந்திடுங்கோ!'

"நீ.. என்ன மனுசனப்பா...- அந்தாளே பழசை மறந்து போய் உன்ரை வீடு தேடி வந்து "கலியாண வீட்டுக்கு வரச் சொல்லிப் போட்டு போறார்... என்ன யோசனை பழசை மனசில வைச்சிர்ராம மறந்து போட்டு அங்க போட்டுவா..."

"நீங்கள் என்ன சொன்னாலும் என்னால் பழய சம்பவத்தை மறக்கேலாது. அந்த நேரத்தில அவன் என்னை நம்ப வைச்சு கழுத்தறுத்துப் போட்டான். இப்ப நினைச்சாலும் நெஞ்சுக்குள்ள என்னமோ செய்யுது"

" அப்ப நீ அந்தாள் வந்து சொன்னதுக்காண்டி போவியோ? போக மாட்டியோ?"

"....யோசிப்பம்...."

பழசை மறப்பதென்பது கஷ்டமா?ംபழைய விடயங்களென்டால் அதில் நல்லதும் கெட்டதும் என இரு விடயங்களும் அடங்கியிருக்கும். இவற்றில் இரண்டையுமே மனிதனால் மறக்க முடியாது. ஆனால் மானிடப் பிறவிகளுக்கு மிகுந்த கஷ்டத்தை கொடுப்பது துன்பமான விடயங்களே. தமிழ் மக்கள் பல வருடங்களாக இழப்புக்களைச் சந்தித்ததே மிகவும் அதிகம். உயிர் இழப்புக்களோடு தொடங்கி நாம் வாழ்ந்த மண்ணில் தொடங்கி வாழ்க்கையோடு தேவையான பின்னிப்பிணைந்த எல்லா வகையான தொடர்புகளையும் இழந்து கொண்டிருக்கிறோம்.

மனிதன் சக மனிதர்களோடு வாழ்ந்து கொண்டிருந்தகால கட்டத்திலும் பகைமை, சண்டை போன்றவற்றை மறந்து சகமனிதனை அவரது பலம், பலவீனத்தோடு ஏற்றுக் கொண்டு பழகி வாழ்வது எவ்வளவு கஷ்டமான காரியமாக உள்ளது. எனவே எந்தவித முன்யோசனையுமின்றிப் பழசை மறந்திடுங்கோ என்பது யோசிக்கப்படவேண்டிய விஷயம்.

இழப்புக்களையும் நாங்கள் ஏமாற்றப்பட்டதையும் உடன் மறக்கச் செய்வது போராட்டங்கள் நிறைந்த வேலைத்திட்டமாகும். தமது உறவுகளைத் தேடி இன்னமும் அலைந்து கொண்டிருக்கும் எமது சகோதரர்களை நீங்கள் பார்த்திருப்பீர்கள். கணவனை இழந்த மனைவியோ, மகனை இழந்த தாயோ இன்று வரை காலம் கடந்தாலும் அவர்கள் இன்னமும் உயிரோடு இருக்கிறார்கள் என்ற நம்பிக்கையில் தான் இப்போதும் வாழ்ந்துகொண்டு இருக்கிறார்கள். மனிதர்களால் இழப்புக்களை உடன் ஏற்றுக்கொள்ள முடியாது.

அதேபோல நம்பிக்கை வைத்து ஏமாற்றப்பட்டதையும் மறக்கச் செய்வது, ஏற்றுக்கொள்ளச் செய்வது உடனே செய்யக்கூடிய செயற்பாடு அல்ல.

கடைசிவரைக்கும் உதவி செய்வனென்டுதான் சொல்லிக் கொண்டு இருந்தவன். நானும் சரியா நம்பிக்கை வைச்சுக் கொண்டு நம்பித்தான் இருந்தனான். ...சே... கடைசியில் ஏமாத்திப் போட்டான்.

மொத்தத்தில் மனதைக் காயப்படுத்துகின்ற நோகடிக்கப்படுத்துகின்ற எந்த விடயமானாலும் மனிதர்களுக்கு அதனால் ஏற்படுகின்ற, உணர்கின்ற வலிகளால் மிகவும் கஷ்டப்படுகிறான். மனதினை ஒருமுகப்படுத்தி நிலை நிறுத்த முடியாமல் திணறுகிறான். மனித மனங்களோடு வேலை செய்யும் உளமருத்துவ நிபுணர்களும், உளவளத்துணையாளர்களும் இவ்விடயத்தில் மிகுந்த சவாலை எதிர்கொள்கிறார்கள்.

வெளி உலகத்தில் உள்ளவர்களுக்கு இம் மனிதர்களின் உள்ளே எரியும் பிரச்சினைகளை வெறும் கண்களால் மட்டும் பார்த்திட முடியாது. அவர்களின் நடத்தைக் கோலங்களையும் புரிந்து கொள்ளல் சிரமமானதாகும்.

இவர்களோடு வேலை செய்பவர்களாலும் ஆதரவு அளிப்பவர்களாலுமே இந்த மனிதர்களது உலகத்தை புரிந்து கொள்ளமுடியும். எனவே எமது மக்கள் சொந்த இடங்களில் குடியேறுவதும் உணவுத் தேவையினைப் பூர்த்தி செய்வதினால் மட்டும்... அவர்கள் வாழ்க்கை பூரணமாகி விட்டது.

மனங்கள் மாற்ற மடைய வேணும். பழசை மறக்க வேண்டும். இது பற்றி பக்கத்து நாட்டிலிருந்து வருகை தந்த வெளிவிவகாரச் செயலாளர் அம்மணியும் கடந்த காலத்தை மறந்து விட்டு எதிர்காலம் பற்றி சிந்தியுங்கள். கடும் மன அழுத்தத்துக்கு உள்ளாகியிருக்கும் உங்களுக்கு நீங்கள் கூறுபவற்றை செவிமடுக்கவும் காயங்களை ஆற்றுப்படுத்தவும் நாங்கள் தயாராக உள்ளோம் என்று அம்மணி இலகுவாக சொல்லிவிட்டார்.

தொல்புரம்:
சி.கதிர்காமநாதன்

" பழசை மறந்துவிடுங்கோ"

" சரி அம்மணி நீங்கள் எம் இனத்தின் மீது கொண்டுள்ள கசப்பான உணச்சிகளையும் உங்களால் மறக்க முடியாத துன்பியல் நிகழ்வுகளையும் நீங்கள் பழசை மறந்திடுங்கோ பாணியில் மறந்து இருந்தால், தடுக்க நினைத்திருந்தால் எமது இனத்திற்குக் கடைசி நேரத்தில் இப்படியான கோர முடிவு ஏற்பட்டு இருக்காதல்லவா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**தருபவர்: வித்யா**

### மேடம்



பொறுமையாகவும், முன்னெச்சரிக்கையுடனும் செயற்பட வேண்டிய நாள். புதியவர்கள் சிலரின் அறிமுகம் கிடைக்கும். தொழில் ரீதியாக சிலர் உங்களை தேடி வரலாம். உறவினர்கள் சிலர் உங்களை விமர்சிக்கலாம். சில காரியங்களுக்கு ஒன்றுக்கு இரண்டு மடங்காக செலவாகலாம். முக்கிய செய்தி கேட்கலாம்.

### இடபம்



சொல்வாக்கை காப்பாற்றி செல்வாக்கு பெறுவீர்கள். பிள்ளைகளைப் பற்றி மற்றவர்களிடம் பெருமை பேசுவீர்கள். ஆன்மீக விடயங்களில் நாட்டம் செல்லும். உதவி கேட்ட ஒருவரிடம் தந்திரமாக பேசிச் சமாளிப்பீர்கள். கிடைக்குமோ, கிடைக்காதோ என நினைத்த பொருள் ஒன்று கிடைக்கலாம். நட்பு வட்டம் விரிவடையும்.

### மிதுனம்



மற்றவர்களுக்கு தெரியாத வகையில், சில தவறுகளைச் செய்வீர்கள். பழகிய சிலர் மூலம் பணவரவுகளைப் பெறலாம். இடமாற்றங்களை எதிர்பார்ப்போர் நல்ல செய்திகளைக் கேட்கலாம். மனதை வாட்டிய கவலைகள் தீர்ந்து, எதையும் தைரியமாக செய்யும்சூழ்நிலை உருவாகும். வெற்றிகரமான நாள்.

### கடகம்



உங்களுக்கு ஏற்பட்ட அனுபவம் ஒன்றைப் பற்றி நண்பர்களிடம் சொல்வீர்கள். முடிந்து விட்டதாக நினைத்த பிரச்சினை ஒன்று மீண்டும் இழுத்தடிக்கலாம். தொழில் ரீதியாக சிலர் வெளியூர் பயணம் செல்லலாம். யாரிடமும் ஏமாறாமல் இருக்க எச்சரிக்கை அவசியம். அவசர செலவுக்காக பிறரிடம் கைமாத்து வாங்கலாம்.

### சிங்கம்



குறித்த நேரத்திற்கு ஆரம்பித்துவிடும் என நினைத்த வேலை ஒன்று காலதாமதமாக ஆரம்பிக்கலாம். குடும்ப விடயம் ஒன்றில் முடிவுகள் எடுக்க முடியாமல் குழப்பங்களைச் சந்திக்கலாம். பண வரவுகளை எதிர்பார்த்து ஏமாந்து போகலாம். தொழில் ரீதியாக கவனக் குறைவாக செயல்படுவீர்கள். சபலங்களை தவிர்ப்பது நல்லது.

### கன்னி



குடும்பத்தில் மகிழ்ச்சி, சந்தோஷம் அதிகரிக்கும். எதையும் ஒரு முறைக்கு பல முறை யோசித்து செய்வீர்கள். மனைவி, குழந்தைகளின் சின்ன சின்ன ஆசைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். உறவினர் ஒருவருக்காக மற்றவர்களிடம் உதவி கேட்பீர்கள். உங்களின் திறமையை வெளிக்காட்டுவீர்கள். கேளிக்கை, கொண்டாட்டம் உண்டு.

### துலாம்



ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் உதவிகளைப் பெறும் நாள். தொழில் ரீதியாக புதிய ஒப்பந்தங்கள் போட மேற்கொண்ட முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். நெடு நாளைய எண்ணம் ஒன்று நிறைவேறும் சூழ்நிலை உருவாகும். வரவாக வந்த பணவரவு ஒன்றை மற்றொருவருக்கு கடனாக கொடுக்கலாம். தடைகள் விலகும் நாள்.

### விருச்சிகம்



மற்றவர்களை நம்ப ஒப்படைத்த வேலை ஒன்று முடியாமல் நீங்களே அதைச் செய்ய நேரிடலாம். போட்டி, எதிர்ப்புகளை எதிர்கொள்ளலாம். எதிர்பாராத தண்டச் செலவுகளுக்கு ஆள்படலாம். உறவினர் ஒருவர் அவரின் சொந்த விடயங்களைப் பற்றி உங்களிடம் சொல்லி ஆலோசனை கேட்கலாம். சோர்வு கூடும்.

### தனுசு



தாய் வழியில் செலவுகளைச் சந்திக்கலாம். சக ஊழியர்கள் விடுமுறையால் கூடுதல் வேலைப்பளுவை எதிர்கொள்ளலாம். உங்கள் குடும்பத்தினர் சண்டை போட்ட சிலரிடம், நீங்கள் சமாதானமாகச் செல்வீர்கள். நண்பர்கள் சிலரின் யோசனையை கேட்டு நடப்பதன் மூலம் ஆதாயம் பெறலாம். வெறுப்பு, விரக்தி ஆள்கொள்ளும்.

### மகரம்



பெரிய மனிதர்களின் சந்திப்பு நிகழும். பல மணி நேரமாகும் என நினைத்த காரியம் ஒன்று சுலபமாக முடிந்து விடும். விலை உயர்ந்த பொருட்கள் வாங்கலாம். கொடுக்கல் வாங்கல்களில் சீரான நிலைமை காணப்படும். வியாபாரிகள் புதிய வாடிக்கையாளர்களைப் பெறலாம். உதவி செய்த ஒருவருக்கு பதில் உதவி செய்வீர்கள்.

### கும்பம்



திட்டமிட்ட காரியம் ஒன்றில் திடீரென மாற்றங்களைச் செய்யலாம். தந்தை வழியில் உதவிகள் கிடைக்கலாம். நீங்கள் பெரிய அளவில் மதித்த ஒருவர் அற்பத்தனமாக நடந்து கொள்ளலாம். பழைய பொருட்கள் சிலவற்றை மாற்றுவீர்கள். உங்களிடம் வாக்குக் கொடுத்த சிலர் அதைக் காப்பாற்றாமல் இழுத்தடிக்கலாம்.

### மீனம்



அலைச்சல் இல்லாமல் இருந்த இடத்தில் இருந்தே சில வேலைகளை முடிப்பீர்கள். குழப்பம், தடுமாற்றம் இல்லாமல், எந்த விடயத்திலும் தெளிவான முடிவு எடுப்பீர்கள். நீங்கள் தேடிச் சென்று பார்க்க நினைத்த நண்பர் அல்லது உறவினர் ஒருவர் உங்களை தேடி வரலாம். சிலரிடம் உங்களின் கோபத்தை காண்பிக்கலாம்.

---

## குணபாலன் வித்தியாலய 50 ஆவது ஆண்டு நிகழ்வு

யாழ்ப்பாணம், செப்.25

ஆனைக்கோட்டை, உயரப்புலம் குணபாலன் வித்தியாலயத்தின் 50ஆவது ஆண்டு நிறைவு விழா நிகழ்வுகள் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்குக் கல்லூரி மாணிக்கம் பாக்கியம் திறந்த வெளிஅரங்கில் இடம்பெறவுள்ளன.

வித்தியாலய அதிபர் என்.தனபாலசிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாகத் தொழிலதிபர் மாணிக்கம் சுப்பிரமணியம், திருவாட்டி மாலதி சுப்பிரமணியம் ஆகியோர் கலந்து கொள்வர்.

ஆசியுரை, வாழ்த்துரை, நூல் வெளியீடு, கலை நிகழ்வுகள் என்பன இடம்பெறும்.

(ஐ)




எமது அன்புத் தெய்வம்
மூளாயூர்

**திருமதி**
**சாரதா பரஞ்சோதி**
**அவர்கள்**

**இறைபதம் எய்திய**
**3 ஆம் ஆண்டினை**
**நினைவு கூருவோம்**

தோற்றம்: 03.11.1965
மறைவு: 25.09.2007

*திதி: 21.09.2010*
*நினைவுநாள் 25.09.2010*

இல்லறப் பூங்காதன்னில் இனியதோர் மலருமாகி
நல்லறம் செய்து நல்ல மனையாளாய் தாயுமாகி
எல்லையே இல்லா இசையை வல்லமையோடுகற்று
பல்நெடுஞ் சபைகளெல்லாம் பரவசமூட்டிவிட்டு
கல்லையும் உருக்கிளம்மை கடைசிநாள் விட்டு ஏகி
மெல்லென ஆண்டு மூன்று இன்றோடு முடிந்ததாலே
செல்வமே தாயே தந்தை சோதியிற்கலந்த சாரா
அல்லும் பகலுமுன்னை நினைக்கின்றோம்
அருகில் வாராய்

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அன்புத் தெய்வத்தை
3 ஆம் ஆண்டில் நினைவு கூரும்:
குடும்பத்தவர்கள்.

டச்சுவீதி, மூளாய், சுழிபுரம்.






**நீர் வாழ்வாதாரம், வழங்குவது அன்டன்**

உங்கள் அன்றாட வீட்டுப் பாவனைக்குத் தேவையான சுத்தமான, பாதுகாப்பான நீரை வழங்கும் சேவையில் 50 வருடத்திற்கு மேற்பட்ட அனுபவத்தைக் கொண்டது அன்டன். எனவே தான் அன்டன் தரும் உன்னதமான சேவையை உங்கள் வீட்டிலேயே நீங்கள் பெறமுடிகிறது.

ANTON

அந்தனீஸ் இன்டஸ்ட்ரீஸ் குரூப் (பிரைவட்) லிமிட்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




01.05.1994

*இராணுவத் தலைமை அதிகாரியான மேஜர் ஜெனரல் லக்கி அல்கமவுடன் சேர்ந்து ஜனாதிபதி டி.பி விஜேதுங்கவை பதவி கவிழ்க்க ஐ. தே.கட்சியின் பொதுச்செயலாளர் சிறிசேன கூரே சதித்திட்டம் தீட்டியிருந்தமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிப்பு.

*அமைச்சர் சிறிசேன கூரே இன்று ஐ.தே கட்சி பொதுச்செயலாளர் பதவியை இராஜினாமா செய்யவுள்ளதாகத் தெரிவிப்பு.

02.05.1994

*ஒடுக்குமுறையின் கருவியான இராணுவத்தின் முதுகெலும்பு முறிக்கப்படும் வரை எமது போராட்டம் தொடரும் என யாழ்ப்பாணத்தில் நடந்த மே தினக் கூட்டத்தில் தமிழீழ கல்விக்கழகத் துணைப் பொறுப்பாளர் பாலகுமாரன் தெரிவிப்பு.

*அரச தரப்பினால் நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசவின் வெண்கலச் சிலைத் திறப்பு வைபவத்தில் ஜனாதிபதி டி.பி. விஜேதுங்க கலந்துகொள்ளவில்லை எனத் தெரிவிப்பு.

03.05.1994

*தமிழ் அகதிகளின் உயிருக்கு உத்தரவாதம் இல்லையென்பதால் தமிழகத்தில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகளை இலங்கைக்குத் திருப்பி அனுப்பும் முயற்சியை நிறுத்துமாறு தமிழக, இந்திய மத்திய அரசுகளிடம் அகதிகளுக்காக ஐ.நா தூதரகத்தின் ஜெனீவா தலைமையகம் வேண்டுகோள்.

*தமிழகத்திலுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளாலும், தீவிரவாதிகளின் அனுதாபிகளாலும் தமிழக மற்றும் முழு இந்தியாவினதும் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகத் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா தெரிவிப்பு.

04.05.1994

*இவ்வருட இறுதிக்குள் வடக்கு- கிழக்குப் பிரச்சினைக்கு சுமூகமான தீர்வு காணும் பொறுப்பை நான் ஏற்றிருக்கிறேன் என ஜனாதிபதி டி.பி. விஜேதுங்க தெரிவிப்பு.

*ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றை பிரதான எதிர்க்கட்சியான சுதந்திரக்கட்சியுடன் 3 கட்சிகள் இணைந்து நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளதாகத் தெரிவிப்பு.

05.05.1994

*ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க கடும் போக்கைக் கடைப்பிடிப்பது என கட்சித் தலைவரும் ஜனாதிபதியுமான டி.பி.விஜேதுங்க முடிவுசெய்துள்ளதாகத் தெரிவிப்பு.

*சுதந்திரக் கட்சித் தலைவி சிறிமாவோ நாட்டின் அடுத்த ஜனாதிபதியாக இவ்வருடம் தெரிவு செய்யப்படலாம் என உலக அரசியல் ஆய்வாளர்கள் குழு இந்த ஆண்டுக்கான தனது ஆய்வறிக்கையைத் தெரிவிப்பு.

06.05.1994

*நாட்டில் சமாதானத்தை உருவாக்குவதற்காக அரசியல் ரீதியில் பேச்சுவார்த்தை நடத்த விடுதலைப்புலிகள் முன்வர வேண்டும் என்றும் அதற்கு ஏனைய அரசியல் கட்சிகளும் ஆதரவு வழங்க வேண்டும் எனவும் அரச தரப்பு நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவிப்பு.

*தமிழகத்திலிருந்து ஈழ அகதிகளை இலங்கைக்கு அழைத்து வரும் பணியை அகதிகளுக்கான ஐ.நா தூதரகம் தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளதாகத் தெரிவிப்பு.

07.05.1994

*விடுதலைப்புலிகளின் நீதிமன்றத்தில் ஊழல் இல்லை. வழக்கு விசாரணைகளில் தாமதம் இல்லை. இதனை இலங்கைஅரசு முன்மாதிரியாகக் கொள்ளலாம் என தமிழர் விடுதலைக் கூட்டணி யாழ். மாவட்ட எம்.பி ஸ்ரீகாந்தா நேற்று நாடாளு மன்றத்தில் தெரிவிப்பு.

*தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவானோரை தமது பதவிகளை இராஜினாமாச் செய்யுமாறு ஜனாதிபதி டி.பி.விஜேதுங்க கேட்டுக் கொண்டுள்ளதாகத் தெரிவிப்பு.

08.05.1994

* மன்னாரிலும், வன்னி மாவட்டத்திலும் விடுதலைப்புலிகள் நேற்று நடத்திய இருவெவ்வேறு தாக்குதல்களில் மொத்தம் 7 படையினர் கொல்லப்பட்டதாகத் தெரிவிப்பு.

*தென் மாகாணசபைத் தேர்தலில் ஆளும் ஐக்கிய தேசியக் கட்சி தோல்வியுற்றதால் அரசின் மரண படையினர் அரசுக்கு எதிரான பலரைக் கொன்றதாக பத்திரிகைத் தகவல்கள் தெரிவிப்பு.

09.05.1994

*விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை அழைத்து வாருங்கள். பேச்சுவார்த்தை மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணலாம் என வடக்கு கிழக்கு ஆயர்களிடம் ஜனாதிபதி டி.பி.விஜேதுங்க தெரிவிப்பு.

*ஈழத் தமிழ் அகதிகளை தமிழகத்திலிருந்து பலவந்தமாக இலங்கைக்குத் திருப்பி அனுப்பும் நடவடிக்கைகளில் தமிழக அரசு அதிகாரிகள் ஈடுபட்டுள்ளதாகக் குற்றச்சாட்டு.

10.05.1994

*தென்னிலங்கையில் பல அரசியல் கொலைகளைப் புரிந்து வரும் மரணப் படையைக் கண்டுபிடிப்பதற்கு பொலிஸார் தீவிர முயற்சியை மேற்கொண்டு வந்த போதிலும் அப்படையை இயக்குவிக்கும் அரசியல் பெரும்புள்ளிகள் பொலிஸாரின் முயற்சிக்கு மறைமுகமாக குந்தகம் விளைவிப்பதாக விமர்சிப்பு.

*தென்னாபிரிக்காவின் புதிய நாடாளுமன்றம் நேற்றுக் கூடி, நாட்டின் புதிய ஜனாதிபதியாக டாக்டர் நெல்சன் மண்டேலாவை ஏக மனதாகத் தெரிவு செய்துள்ளதாக அறிவிப்பு.

11.05.1994

*ஐ.தே. கட்சியின் 6 உதவிச் செயலாளர்களை உடனடியாகப் பதவி விலகுமாறு கட்சியின் புதிய பொதுச் செயலாளர் காமினி விஜேசேகர கேட்டுக்கொண்டுள்ளதாகத் தெரிவிப்பு.

*சுவிற்சர்லாந்து அரசாங்கம் அங்கு வாழும் இலங்கைத் தமிழர்களுக்கு அந்நாட்டை விட்டு வெளியேறுமாறு கடிதங்களை அனுப்பி வருவதாகத் தெரிவிப்பு.

12.05.1994

*இலங்கை அரசுக்கு ஆயுதங்கள் விற்பனை செய்வதை உடனடியாக நிறுத்துமாறு ஆபிரிக்காவின் புதிய ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவிடம் விடுதலைப் புலிகள் இயக்கம் கோரிக்கை விடுப்பு.

*யாழ். குடாநாடு மீதான பாரிய இராணுவ நடவடிக்கையை பின்போடுவது குறித்து பாதுகாப்பு அமைச்சு ஆராய்ந்து வருவதாகத் தெரிவிப்பு.

13.05.1994

*வடக்கு- கிழக்கு மாகாணத்தில் இன்னும் சுமூக நிலை ஏற்படவில்லை. ஆகவே இலங்கைத் தமிழ் அகதிகளை திருப்பி அனுப்ப எடுக்கும் முடிவை மறுபரிசீலனை செய்யுமாறு ஐ.நா. தூதரகத்தின் ஜெனீவா தலைமையகம் மேற்கு நாடுகளிடம் கோரிக்கை விடுப்பு.

*கொழும்பில் இயங்கும் மரணப்படை ஒன்றின் தலைவரான சொத்தி உபாலி என்ற உபாலி ரஞ்சித் நேற்று பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிப்பு.

14.05.1994

* தமிழர் பிரச்சிரனைக்குத் தீர்வு காண்பதற்கு போரைத் தொடர்ந்து நடத்துவதா அல்லது அரசியல் தீர்வு காண முயற்சிப்பதா என்பது குறித்து முடிவெடுக்க இயலாத நிலைமை அரசு சிரமப்படுவதாகச் சர்வதேச தொண்டர் நிறுவன அதிகாரி ஒருவர் தெரிவிப்பு.

*காலஞ்சென்ற ஜனாதிபதி பிரேமதாசவின் மனைவியான ஹேமாவை எம்.பி ஆக்கி அமைச்சராக நியமித்தால் மட்டுமே தாம் தமதுஎம்.பி பதவிகளை இராஜினாமா செய்ய இயலும் என ஐ.தே.கட்சியின் தேசியப்பட்டியல் எம்.பிக்கள் தெரிவிப்பு.

15.05.1994

*முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசவின் படுகொலை குறித்து விசாரணை செய்ய ஆணைக்குழு ஒன்றை நியமிக்கு மாறு பிரேமதாசவின் குடும்பத்தினர் ஜனாதிபதி விஜேதுங்கவிடம் கோரிக்கை முன்வைப்பு.

*இந்தியாவில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீதான தடையை மேலும் இரு வருடங்களுக்கு இந்திய அரசு நீடித்துள்ளதாக அ[illegible]

# சர்வதேச ரீதியில் கிளைகளை அமைக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீர்மானம்

கொழும்பு, செப். 25

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சர்வதேச ரீதியில் கிளைகளை நிறுவுவதற்கு திட்டமிட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஐரோப்பா உள்ளிட்ட தமிழ்ப் புலம்பெயர் மக்கள் வாழும் சகல நாடுகளிலும் கிளைகள் நிறுவப்பட உள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஓர் பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சியாக உருவாக்கியதன் பின்னர், கிளைகளை நிறுவும் பணி ஆரம்பமாகும் என்று மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பாக்கிய செல்வம் அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.

விடுமுறையில் வெளிநாடு சென்றுள்ள தேர்தல் ஆணையாளர் நாடு திரும்பும் வரையில் தாம் காத்திருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

பதிவு செய்யப்பட்டதன் பின்னர் உலகின் பல பாகங்களிலும் உள்ள இளைஞர்களை கட்சியில் இணைத்துக் கொள்ளத் திட்டமிட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கட்சியின் கிளைகளை நிறுவுவதற்கு புலம்பெயர் தமிழர்களிடம் ஏற்கனவே உதவிகள் கோரப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (சி)

# மகாஜனக் கல்லூரியின் புகழ்பூத்த அதிபர்கள் வரிசையில் அமரர் நாகராஜா



வயாவிளான் கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட பெரும் நிலாச்சுவாந்தார் செல்லப்பா தம்பதியினரதும், மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் மலேசியாவை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா தம்பதியினரதும் தாய்வழி, தந்தை வழிப் பேரனாக அவதரித்தவர் அமரர் கதிர்காமத்தம்பி நாகராஜா ஆவார்.

இவர் கடமை வீரனாக, ஆசிரியராக, உப அதிபராக உயர்வு கண்டு உன்னத பாரம்பரியம் மிக்க தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் அதிபர் பதவியில் 1985.12.04 ஆம் நாளில் அமர்ந்து கொண்டார்.

பதவியில் அமர்ந்து கொண்டார் என்பதைவிடக் கல்லூரியோடு இரண்டறக் கலந்துகொண்டார் என்பதே சாலப் பொருந்தும். மகாஜனா அவரது உயிர்மூச்சு என்றால் அது மிகையாகாது.

மகாஜனாத்தாய் நூற்றாண்டு விழாக் கண்டு பூரித்து நிற்கும் இந்த நாளிலே அவளது அன்புக்குரிய மைந்தன் மகாஜனன் அமரர் கதிர்காமத்தம்பி நாகராஜாவின் சேவைகளை நினைவு கூருவது மிகவும் பொருத்தமான ஒன்றாகும். அஞ்சா நெஞ்சமும் விடாமுயற்சியும் செயற்றிறனும் மலர்ந்த முகமும், சுறுசுறுப்புடன் கூடிய தேகாரோக்கியமும் அமரர் அவர்களை மகாஜனக் கல்லூரி வரலாற்றிலேயே மீண்டும் ஒரு பொற்கால அதிபராக நிலைகொள்ள வைத்த பெருமையைத் தேடித் தந்தது எனலாம். அன்னை மகாஜனாவின் ஸ்தாபகர் பாவலர் துரையப்பாபிள்ளையும் அவரது வழித்தோன்றல்களும் நீண்டகாலம் அதிபராகக் கடமையாற்றினார்கள். அவர்களுக்குப் பின்பு கடமையாற்றியவர்களுள் அமரர் நாகராஜா 13 ஆண்டுகள் வரை (04.12.1985-29.11.1998) மகாஜனாத் தாயைக் கண்ணை இமைக்காப்பது போல் வண்ணமுறக் காத்து வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.




இவரது அதிபர் சேவைக்காலம் என்பது பாரிய நெருக்கடிக்குட்பட்ட காலமாகும். பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுக்க நேர்ந்த காலமாகும். யாழ். மாவட்டம் முழுமையுமே போர் மேகங்களால் சூழப்பட்டு இடி, மின்னல், புயல் வீசிய அமைதிகுலைந்த காலமாகும்.

அடிப்படை வசதிகளற்று, போக்குவரத்து வசதிகளற்று, மின்சாரமற்ற ஏனைய பிரதேசங்களிலிருந்து துண்டிக்கப்பட்ட சூனியப் பிரதேசமாக இருள் சூழ்ந்து கிடந்த காலத்தில் முற்றாகக் கல்லூரி இடம்பெயர்ந்த நினைவுகள் இன்றும் எமது கண்களுக்குள் நிழலாடுகின்றன.

எத்தனை உயிராபத்தான கட்டங்கள், தரையோடு தரையாகத் தவழ்ந்து சென்று எறிகணை வீச்சுக்கள் மத்தியிலே தொலை தூரத்திலேயே நிறுத்தி வைத்திருந்த லொறிகளில் பாடசாலை உடைமைகளை ஏற்றிப் பாதுகாப்பான இடங்களுக்கு நகர்த்திய வேளைகள் அமரரோடு துணைநின்ற கல்லூரி விசுவாசிகள்- அவர்களுக்கும் அமரரின் தன்னலங் கருதாத உன்னத மானிட நேயம் கொண்ட நல்ல மனமும் செயலாற்றுத் திறனும் முகாமை செய்யும் ஆற்றலும் என்றென்றும் நினைவு கூரவேண்டியவை.


அமரரின் கல்விப்பணிக்குச் சற்றும் குறையாத சமூகப் பணியும் அவரது இன்னோர் பரிமாணத்தை வெளிக்கொணர்ந்தமையானது அன்னாரின் சமூக நோக்கின் விரிந்த பார்வையை எடுத்துக்காட்டி நிற்கின்றது. இந்து சமய கலாசார அமைச்சின் யாழ்ப்பாண மாவட்ட இணைப்பாளராக இருந்த போது அவர் முழுநேரத் தொண்டனாகவே மக்களுக்குப் பணியாற்றினார்.

அறநெறிப்பாடசாலைகளுக்கு அவற்றின் வளர்ச்சிக்கு வேண்டிய உதவிகளைப் பெற்றுக் கொடுத்து உயர் பணியாற்றினார். அரசாங்க ஓய்வூதியர் சங்கத்தின் யாழ். மாவட்டச் செயலாளராக இருந்து ஓய்விலும் ஓயாது சேவை செய்தார்.

தெல்லிப்பழை அரிமாக் கழகத்தில் உறுப்பினராகவும் ஒரு வருட காலம் தலைவராகவும் சேவையாற்றினார். தெல்லிப்பழை வைத்தியசாலை நிர்வாக உறுப்பினராக அனைவருக்கும் தனது உதவிகளை வழங்கினார். அகில இலங்கை சமாதான நீதிவானாக இருந்தமையாலும் அவரை நாடிவரும் அனைவரும் பாகுபாடின்றி மறக்காது உதவி வழங்கும் இனிய பண்பாளராக முதுமை என்பதையே சந்திக்காத நல்ல ஆரோக்கியத்துடன் தனது இறுதி நொடியில் கூடக் கலங்காத உறுதி மனம் படைத்த உத்தமர் புரட்டாதிப் பௌர்ணமி நாளில் அமரத்துவம் அடைந்தார்.

இ.சுஜீபன்

(பழைய மாணவன், மகாஜனக் கல்லூரி)






அச்சுவேலி வடக்கைச் சேர்ந்த ஆசிரியர் கனகரத்தினம் கனகலிங்கம் அகில இலங்கை சமாதான நீதிவானாக யாழ். நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ. ஆனந்தராசா முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலையில் ஆசிரியராகக் கடமை புரியும் க.கனகலிங்கம் இலங்கை ஆசிரியர் சேவை தரம் I ஐ சேர்ந்தவர். பிரபல சமூக சேவையாளர் என்பதும் குறிப்பிடத்தக்கது.



யாழ். மாவட்ட மக்களுக்கு பல்வேறு வழிகளில் அளப்பரும் சேவையாற்றிய "நிக்கொட்" நிறுவனத்தின் யாழ். மாவட்டப் பிரதித்திட்டப் பணிப்பாளர் என்.எஸ். ஆர். சிவரூபன் அண்மையில் உயர் அதிகாரிகளால் பாராட்டப்பட்டுள்ளார்.

இவரது வினைத்திறன் யாழ். மாவட்ட முன்னாள் அரச அதிபர் கே.கணேஷ், 'நிக்கொட்' நிறுவனத்தின் முன்னாள் பணிப்பாளர் ரி.லங்காநேசன் ஆகியோராலும் அவுஸ்திரேலியா அரசாங்கத்தின் சிறப்பு நிலை அதிகாரியினால் 'மெய்ச்சுரை' வழங்கியும் கௌரவிக்கப்பட்டவருமாவார்.

மல்லாகத்தைச் சொந்த இடமாகக் கொண்ட இவர் யாழ். பல்கலைக்கழகத்தின் வணிகத்துறை பட்டதாரியுமாவார்.

(9-302)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமாதான முயற்சி தோல்வியடைந்தது ஏன்? விசாரணை நடத்தத் தயாராகிறது நோர்வே

கொழும்பு, செப். 25

இலங்கையில் முன்னெடுக்கப்பட்ட சமாதான முயற்சிகள் தோல்வியடைந்தமை குறித்து விரிவான விசாரணைகள் நடத்தப் படவுள்ளன என நோர்வே அறிவித்துள்ளது.

குறிப்பாக இறுதிக் கட்ட யுத்தத்தின் போது சமாதான முனைப்புகள் ஏன் தடைப் பட்டதென்பதைக் கண்டறியும் நோக்கில் இந்த விசாரணைகள் நடத்தப்படும் என நோர்வேப் பிரதமர் ஜென்ஸ் ஸ்டொல்ஸ் டன்பெர்க் தெரிவித்துள்ளார்.

நோர்வேயால் மத்தியஸ்தம் வகிக்கப் பட்ட சமாதான முன்னெடுப்புகள் தோல் வியடைந்தமைக்கான காரணங்களைக் கண்டறியும் நோக்கில் விரிவான விசாரணை கள் நடத்தப்பட உள்ளன எனவும், தனி யார் நிறுவனமொன்று இந்த விசாரணை களை நடத்த உள்ளது எனவும் தெரிவிக் கப்படுகிறது.

நோர்வேயின் மத்தியஸ்தத்துடன் விடு தலைப் புலிகளுடன் கைச்சாத்திடப்பட்ட சமாதான உடன்படிக்கையை அரசு 2008 ஆம் ஆண்டு ரத்துச் செய்தது.

இந்தியா மற்றும் சீனாவுடனான நோர்வே யின் உறவு, புலம்பெயர் தமிழர்களுடன் நோர்வேயின் உறவு, 2001 டிசம்பர் முதல் 2004 ஏப்ரல் வரையிலான இலங்கையின் அரசியல் சூழ்நிலை, சிவில் அமைப்புகளு டனான உறவு, முஸ்லிம் மற்றும் ஊட கங்களுடனான உறவு, யுத்த நிறுத்த உடன் படிக்கையின் குறைபாடுகள், போர் நிறுத் தக் கண்காணிப்புக் குழுவின் வரைய றைகள் ஆகியன குறித்து விரிவாக ஆராயப் படவுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

யுத்த காலப்பகுதியில் இராணுவத்தின ரும், தமிழீழ விடுதலைப் புலிகளும் சர்வ தேச மனிதாபிமான சட்டங்களுக்கு மதிப் பளித்துச் செயற்பட்டனரா என்பது குறித் தும் இந்த விசாரணைகளின்போது கவ னம் செலுத்தப்படவுள்ளது என்றும் -

இலங்கை அரச அதிகாரிகள், புலம் பெயர் தமிழர்கள், சர்வதேச அமைப்புகள், ஐக்கிய நாடுகளின் உயரதிகாரிகள் ஆகி யோரிடம் விசாரணை நடத்தப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## 16ஆம் நாள் அந்தியேட்டியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 15 . 08 . 1924



மறைவு 11 . 09 . 2010

### திருமதி கனகம்மா பேரம்பலம்

(பரசாலை தெற்கு)

கடந்த 11.09.2010 அன்று சிவபதம் அடைந்த எமது குடும்ப விளக்கின் வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் நாளை (26.09.2010) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அந்நிகழ்வில் பங்குகொண்டு அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத் திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவ ரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

164, குட்செட் வீதி,
வவுனியா.
024 2220682, 077 6135310.

குடும்பத்தினர்- P.கெங்காசோதி, P.கெங்காபரம், P.கெங்காராசா.

(103627)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 05 . 07 . 1921



மறைவு 26 . 08 . 2010

### அமரர் வேலாயுதபிள்ளை சண்முகராசா

(RETIRED RAILWAY HEAD GUARD C.G.R.)

கடந்த 26.08.2010 அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வம் அமரர் வேலாயுதபிள்ளை சண்முகராசா அவர்களின் அந்தியேட்டிக் கிரி யைகள் இன்று (25.09.2010) சனிக்கிழமை காலை 7 மணியளவிலும் வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் முற்பகல் 11 மணியளவில் தொண்டைமானா றில் உள்ள அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங் கள் தங்கள் குடும்பத்தினருடன் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத் திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

'சாந்தி',
உடுப்பிட்டி வீதி, தொண்டைமானாறு.

குடும்பத்தினர்.

(சி/571305)

## இராணுவ நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிராக சரத் பொன்சேகா மேன்முறையீடு

கொழும்பு, செப். 25

நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன் சேகா, தமக்கு எதிரான முதலாவது இரா ணுவ நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு செய்துள்ளார்.

கடந்த 13 ஆம் திகதி சரத் பொன்சேகா வின் அனைத்துப் பதவிகள், பதக்கங்கள், விருதுகள், ஓய்வூதியம் என்பவற்றை ரத்துச் செய்யுமாறு முதலாவது இராணுவ நீதிமன் றம் உத்தரவிட்டிருந்தது.

இந்தத் தீர்ப்பு சட்டத்துக்கு விரோதமா னது எனவும், அதை ரத்துச் செய்யுமாறும் பொன்சேகா மனுத் தாக்கல் செய்துள்ளார்.

குறித்த மனுவில் இராணுவ தளபதி மற் றும் முதலாம் இராணுவ நீதிமன்றின் நீதிப திகள் உள்ளிட்ட 5 பேரை பிரதிவாதி களாக பொன்சேகா குறிப்பிட்டுள்ளார். (சி)

## சம்பந்தன் எம்.பிக்கு 3 மாத விடுமுறை

கொழும்பு, செப். 25

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், நாடா ளுமன்ற உறுப்பின ருமான ஆர். சம்பந் தன் மூன்று மாதங் களுக்கு நாடாளு மன்றத்துக்குச் சமூ கம் கொடுக்கா திருக்கக் கூடியதாக நேற்று நாடாளு மன்றத்தால் விடு முறை வழங்கப்பட் டது.

சம்பந்தனுக்கான விடுமுறையைக் கோரும் பிரேர ணையை கூட்ட மைப்பு நாடாளு மன்ற உறுப்பினர் சுமந்திரன் நேற்று முன்தினம் காலை [illegible] முன்வைத்தார். (சி)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
கந்தையா பத்மநாதன்
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

மண்ணில்
29.09.1932

விண்ணில்
05.10.2009

திதி: துதியை

அன்பாலும் பண்பாலும்
எங்கள் எல்லோரையும் அரவணைத்த
எங்கள் அன்புத் தெய்வமே எங்கள் அப்பாவே!
ஆண்டு ஒன்று ஆனாலும் அழியாது உங்கள் நினைவுகள்
ஆத்மா சாந்தியடைய வேண்டுதல் செய்யும்....

114, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

நீங்கள் பீனிசம், பீனிச வாய்வு, இளநரை, தலையிடி,
தலைப்பாரம், மூக்கினால் இரத்தம் வடிதல், காதடைப்பு,
கண்மங்கல் என்பவற்றால் அவதிப்படுகிறீர்களா ?
இதோ பாவியுங்கள்
கண்ணுக்குக் குளிர்ச்சியும் முகத்திற்கு அழகும் உண்டாக்கி
கூந்தலை நீளமாகவும் கறுப்பாகவும் அழகாகவும் வளரச்செய்யும்
சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட
சித்தாரா பொன்னாங்காணித் தைலம்
பொன்னாங்காணித் தைலம் வாங்கும்போது வர்ணமூடியுடன் சித்தாரா
டிஸ்பென்ஸரி வைத்திய முத்திரைக் குறியீடு உள்ளதா எனப் பொதி
செய்யப்பட்ட பெட்டியைத் திறந்து சரிபார்த்து வாங்குங்கள்.

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw
(Reg.No:- 6382) AR/PR/No.228

யாழ்.மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:
சிவா நறுமணப்பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2567

(C/564561)

## அறிவித்தல்

இத்தால் சகலருமறிய, இல.11/1, பிரப்பங்குளம் ஒழுங்கை, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்,அருளானந்தம் வாகீசன் ஆகிய நான் அறியத்தருவது:

சின்னத்தம்பி பத்மநாதனுக்கு முன்னர் சொந்தமாகவிருந்ததும், வண்ணார்பண்ணை, வடமேற் திசையில் அமைந்துள்ளதும், நில அளவையாளர், கே.ஐயாறு அவர்களால் அளந்து வரையப்பட்ட 28.04.1978 திகதிய 2507ஆம் இலக்கப் படத்தில் 2ஆம் துண்டாகச் சுட்டப்பட்டதுமான ஆதனத்தினை 2009ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 8ஆம் திகதி (கொழும்பு) பிரசித்த நொத்தாரிசு யோகேஸ்வரி பாலசுப்பிரமணியம் முன்பாக எழுதி நிறைவேற்றிய 2023ஆம் இலக்க விற்பனை ஒப்பந்தம் மூலம் நான் கொள்வனவு செய்து ஆட்சியிலுள்ளேன் என்பதை அறியத் தருகின்றேன்.

ஆகவே இவ்வாதனத்தை எவரும் அறுதியாகவோ, நன்கொடையாகவோ அல்லது வேறு எவ்வழியிலாவது கையேற்க வேண்டாமென இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

என்னைத்தவிர, வேறு எவருக்கும் குறித்த ஆதனத்தைப் பராதீனம் செய்யும் உரிமை குறித்த சின்னத்தம்பி பத்மநாதனுக்கு இல்லை என்றும் அறியத்தருகின்றேன்.

இப்படிக்கு
உண்மையுள்ள அ.வாகீசன்.

(103729)

## 30ஆவது பிறந்த தினமும் 3ஆவது ஆண்டு நெஞ்சை விட்டகலாத நினைவுகளும்



அமரர்
குலேந்திரமோகன்
சுதாகர்
(ஐதுஷ் சுவைத் தென்றல்,
உரிமையாளர்
- கண்ணன்)

மலர்வு: 25.09.1980
உதிர்வு: 23.09.2007

கண்ணா!
பாசத்தின் திருவுருவாய் பண்பின் உறைவிடமாய்
எங்களுக்கெல்லாம் அன்பு காட்டி
அரவணைத்த என் அன்புக் கண்ணா!
மூன்றாண்டுகள் சென்றாலும் உங்கள்
நினைவுகள் எம் நெஞ்சங்களை
விட்டு என்றும் நீங்காது
கண்ணா! எங்களை விட்டுச் சென்றாலும்
உங்கள் உருவம் தான் மறைந்தாலும்
உங்கள் அழகான புன்சிரிப்பு முகம் மறையவில்லை
கண்ணான கண்ணா எம்மை விட்டுச் சென்றது ஏன்?
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
தாய் மற்றும்
சகோதரர்: சுதா, சுயாதா, சுரேஸ், ராதா, ராதிகா, அனு,
மனைவி: ரத்னா, பிள்ளைகள்: ஐதுஷன், பிரவின், சத்தியன்.

ஐயனார் வீதி,
பருத்தித்துறை.

(சி/571314)

## முதலாம் ஆண்டு நினைவில்



05.05.1975
துளிராய்

20.09.2009
சருகாய்

### கந்தசாமி கிருஷ்ணரூபன்

முத்தானவனை எங்கள் முதல்வனை இழந்த
முதலாம் ஆண்டின் நிறைவு
மூழ்கிய துயரக்கடலும் - எம்மை
மீள விட முயலவில்லை- உனையிழந்து
சித்தம்கலங்கி வாழ்வதுதான்
ஆண்டவன் சித்தமெனின் நாமென்செய்வோம்
ஆண்டவன் அடியில் நீ ஆறுதல் அடைய அஞ்சலிப்போம்
ஆராதிப்போம்.

பண்டிதத்தறை,
நெல்லியடி, கரவெட்டி.

குடும்பத்தினர்.

(சி/571317)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைத்தியர்கள் பற்றாக்குறையால் அல்லாடும் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை

யாழ்ப்பாணம்,செப்.25

கிளிநொச்சி வைத்தியசாலையில் 14 வைத்தியர்கள் மட்டுமே கடமையாற்றுவதால் சிகிச்சைபெறச் செல்கின்ற நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:-

கிளிநொச்சி வைத்தியசாலையில் குறைந்தது 30 வைத்தியர்கள் கடமையாற்ற வேண்டும். ஆனால் 14 வைத்தியர்கள் மட்டுமே தற்போது கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

வெளிநோயாளர் பிரிவில் தினமும் 600ற்கு மேற்பட்ட நோயாளர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

ஆனால் அங்கு 3 வைத்தியர்கள் மட்டும் கடமை புரிவதாகவும் அதனால் நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகவும் தெரிகின்றது.

சிகிச்சைக்கு நீண்டநேரம் காத்திருக்க வேண்டிய அவலநிலைக்குள் நோயாளர்கள் தள்ளப்பட்டுள்ளதாகவும் விசனம் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை-கிளிநொச்சி வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் இதுவரை நிரந்தரமாக வைத்தியர் ஒருவர் நியமிக்கப்படவில்லையென்றும் அதனால் விடுதிகளிலும், வெளிநோயாளர்கள் பிரிவிலும் கடமைபுரிகின்ற வைத்தியர்களே அங்கு சுழற்சி முறையில் கடமையாற்றுகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

கொடிய யுத்தத்தினால் பாதிப்படைந்துள்ள கிளிநொச்சி மாவட்ட மக்களின் வைத்திய சேவையினைப் பூர்த்திசெய்கின்ற நிறுவனமாக கிளிநொச்சி வைத்தியசாலை விளங்குகின்றதால் அங்கு நிலவும் வைத்தியர் பற்றாக்குறையினை நிவர்த்தி செய்து பொதுமக்களுக்குச் சீரான சேவையினைப் பெற்றுக்கொடுக்க வேண்டியது சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் பொறுப்பு என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-9)

## மூன்றாவது ஆண்டில் 'காலச் சுவடுகள்'

மன்னார்,செப்.25

மூன்றாவது ஆண்டில் கால்பதிக்கும் 'காலச் சுவடுகள்' மாசிகையின் மூன்றாம் ஆண்டு விழா அடுத்தமாதம் கொண்டாடப்படவுள்ளதாக அதன் வெளியீட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்விழா தொடர்பாக விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாகவும் தமிழ் ஆர்வலர்களும், தமிழ்ப் பத்திரிகைகளின் ஆசிரியர்களும், எழுத்தாளர்களும் இந்த விழாவுக்கு அழைக்கப்படவுள்ளதாகவும் இவர்கள் மேலும் தெரிவித்தனர்.

மன்னார் நகர மண்டபத்தில் நடைபெறவுள்ள இவ்வைபவத்தில் 'காலச் சுவடுகள்' முற்றிலும் மாறுபட்ட விதத்தில் புதுப்பொலிவுபெறுமென இதன் ஆலோசகரான மக்கள்காதர் தெரிவித்தார். (க-82)

## உதவிகள் எவையுமின்றி பச்சிலைப்பள்ளி மீனவர்கள்

யாழ்ப்பாணம்,செப்.25

மீளக்குடியமர்த்தப்பட்ட பச்சிலைப்பள்ளி பிரதேச சபைப் பகுதியைச் சேர்ந்த மீனவர்களுக்கு கடற்றொழில் செய்வதற்கு அனுமதிகள் வழங்கப்பட்டபோதிலும் இதுவரையும் எந்தவித உதவிப் பொருள்களோ, கொடுப்பனவுகளோ வழங்கப்படவில்லை என மீனவர்கள் விசனம் தெரிவிக்கின்றார்கள்.

பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு வலை கள், மீன்பிடி உபகரணங்கள், கொடுப்பனவுகள் தருவதாகக் கூறியபோதிலும் இது தொடர்பான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லையெனவும் கூறப்படுகிறது.

கடற்றொழிலைத் தொடர்ந்து மேற்கொள்வதில் நாம் சிரமங்களை எதிர்கொள்கிறோம். எமது பிரதேசத்தில் கடற்றொழில் தான் பிரதான தொழில் என்பதால் வேறு தொழில்களை எம்மால் மேற்கொள்ள முடியாது.

எனவே தொடர்ச்சியாக சிறந்த முறையில் எமது தொழிலை மேற்கொள்ள எமக்கு உதவுமாறு கேட்டுக்கொள்கிறோம் என அந்த மீனவர்கள் கூறினார்கள். (313-315)



மாங்குளம் பகுதியில் 'ஏ ஏ ஏ மூவிஸ் இன்ரர்நசனல்' நிறுவனம் உதவிப் பொருள்களை வழங்கும்போது எடுக்கப்பட்ட படம். இந்த நிறுவனத்தின் இயக்குநர் எஸ்.செல்வேள் பொதுமகன் ஒருவருக்கு சைக்கிள் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

### 5ஆம் தரப் புலமைப் பரிசில்

## அகில இலங்கை ரீதியில் மன்னார் மாணவன் 3ஆம் இடம்



மன்னார்,செப்.25

தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையின் மாணவன் யூட் விதுர்சன் 190 புள்ளிகளைப்பெற்று அகில இலங்கை ரீதியில் மூன்றாவது இடத்தினைப் பெற்றுள்ளார்.

தமிழ்மொழிமூலம் இப்பரீட்சைக்குத் தோற்றிய விதுர்சன் மன்னார் பள்ளிமுனைப் பகுதியைச் சேர்ந்தவர். இவர் பெற்றிருக்கும் 190 புள்ளிகளே மன்னார் மாவட்டத்தில் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் இதுவரை பெற்ற அதிக புள்ளிகளாகும்.



இதேவேளை-கிளிநொச்சி மத்திய மகாவித் தியாலய மாணவியான செல்வி செபஸ்ரியன் குரூஸ் தேனுஜா 173 புள்ளிகளைப் பெற்று மாவட்ட மட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-80)

## மன்னாரில் மின்விநியோகம் சீரானது

மன்னார்,செப்.25

மன்னாரில் கடந்த இரண்டு தினங்களாக அமுலில் இருந்த மின்வெட்டு நீங்கியபோதும் நீர்வெட்டு இன்னமும் நீங்கவில்லையெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரதேசத்தில் மின்வெட்டும், நீர்வெட்டும் வாடிக்கையாக மாறியுள்ளன. குழாய்நீரை நம்பியிருக்கும் சுமார் 15 ஆயிரம் குடும்பங்கள் இதனால் பெரிதும் பாதிக்கப்படுகின்றன. இவர்களில் அநேகமானோர் திருக்கேதீஸ்வரம், வங்காலை, மன்னார் ஆகிய இடங்களில் வாழ்கின்றனர். நீர்வெட்டால் இவர்களது இயல்பு வாழ்க்கையே பெரிதும் பாதிக்கப்படுகின்றது.

கடந்த இரு தினங்களும் இந்த மக்கள் தமது நீர்த் தேவைகளுக்காக அரச திணைக்களங்கள், பாடசாலைகள் ஆகியவற்றை நாட வேண்டிய அவலநிலைக்குத் தள்ளப்பட்டனர்.

உரியவர்களின் கவனத்திற்கு இதனைச் சமர்ப்பிப்பதாகப் பொதுமக்கள் கூறுகின்றனர். (க-80)

## மாங்குளம் மக்களுக்கு உதவிப் பொருள்கள்

யாழ்ப்பாணம்,செப்.25

போரினால் பாதிக்கப்பட்ட மாங்குளம் பகுதியில் ஏஏஏ மூவிஸ் இன்ரநசனல் நிறுவனத்தினர் உதவிப் பொருள்களை வழங்கியுள்ளனர்.

இந்த நிறுவனத்தினர் மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்களையும், மக்களின் தேவைகளுக்காக நீரிறைக்கும் இயந்திரங்களையும், சனசமூக நிலையம் ஒன்றுக்கு மிதிவண்டி ஒன்றையும் இவர்கள் வழங்கியுள்ளனர். (க-315-313)

# கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளுக்கு இடையிலான ஆங்கில தினப் போட்டி முடிவுகள் - 2010

கிளிநொச்சி,செப்.25

கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளுக்கிடையே வலய மட்டத்தில் நடத்தப்பட்ட இந்த ஆண்டுக்கான ஆங்கில தினப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவ, மாணவியரின் விவரங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

வெற்றி பெற்றோர் விவரம் வருமாறு:-

பார்த்து எழுதுதல்

தரம்-3

முதலாம் இடம்- நகுலேஸ்வரன் நர்மதா (முழங்காவில் மகா வித்தியாலயம்), இரண்டாம் இடம்-சிவாஜி ஆரணி (மசார் அரசாங்க த.க.பாடசாலை), மூன்றாவது இடம் - எஸ்.பிரசாந்தினி (பரந்தன் இந்து மகா வித்தியாலயம்).

தரம்-4

முதலாம் இடம்-எஸ்.நிவேதிகா (கிளிநொச்சி மகா வித்தியாலயம்), இரண்டாம் இடம்-எஸ்.சதுர்சிகன் (பிரமனந்தனாறு மகா வித்தியாலயம்), மூன்றாம் இடம்-பி.மேனன் (பளை மத்திய கல்லூரி), மூன்றாம் இடம்-கே.தனோஜா (முழங்காவில் மகா வித்தியாலயம்).

தரம்-5

முதலாம் இடம்-ஜே.அனுஷா (புனித திரேசா மகளிர் கல்லூரி), இரண்டாம் இடம்-தயாபரன் (முழங்காவில் மகா வித்தியாலயம்), மூன்றாம் இடம்-என். அனோஜா (முழங்காவில் மகா வித்தியாலயம்).

தரம்-6

முதலாம் இடம்-சுதாகரன் ரிவீனா (இராமநாதபுரம் மேற்கு அரசாங்க த.க. பாடசாலை), இரண்டாம் இடம்-ஜே. திலுக்கா (அக்கராஜன் மகா வித்தியாலயம்), மூன்றாம் இடம்-பி.கிந்துஜா (முழங்காவில் மகா வித்தியாலயம்).

தரம்-7

முதலாம் இடம்-ஜ.சங்கீர்த்தனா (கிளிநொச்சி இந்துக் கல்லூரி), இரண்டாம் இடம்-என்.அகல்யா (முழங்காவில் மகா வித்தியாலயம்), மூன்றாம் இடம்-ஆர். சஸ்மித்யா (கிளிநொச்சி மகா வித்தியாலயம்).

தரம்-8

முதலாம் இடம்- ஆர்.இலக்கியா (கிளிநொச்சி மத்திய கல்லூரி), இரண்டாம் இடம்- எஸ்.மேனகா (முழங்காவில் மகா வித்தியாலயம்), மூன்றாம் இடம்-ஆர். லக்ஸனா (கிளிநொச்சி இந்துக்கல்லூரி).

*(வளரும்)*

## வெள்ளி விழா இன்று

மன்னார்,செப்.25

மன்னார் துயர்துடைப்பு மறுவாழ்வுச் சங்கம் தனது வெள்ளி விழாவை சிறப்பான முறையில் கொண்டாடவிருப்பதாக அதன் தலைவரான அருட்பணி சேவியர் குரூஸ் அடிகளார் தெரிவித்துள்ளார்.

இன்று காலை 9 மணிக்கு மன்னார் நகர மண்டபத்தில் வெள்ளி விழா நிகழ்வுகள் ஆரம்பமாகவிருக்கின்றன.

இதில் பிரதம விருந்தினராக மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு யோசேப் கலந்துகொள்வார்.

பல்வேறு நெருக்கடியான காலங்களில் இந்தச் சங்கம் மன்னார் மக்களுக்கு அளப்பரிய சேவைகள் ஆற்றி வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-80)





## மன்னார் நாகதாழ்வு பகுதியில் மக்கள் மீளக்குடியமர அனுமதி

மன்னார்,செப்.25

மன்னார்ப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட நாகதாழ்வுப் பகுதியில் மீள்குடியேற்றத்திற்காக மக்கள் நேற்றுமுன்தினம் அழைத்துச் செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. நாட்டில் கடந்த காலங்களில் இடம்பெற்றுவந்த யுத்தத்தின் காரணமாக 1985ஆம் ஆண்டுக்குப் பிற்பட்ட காலப்பகுதிகளில் இந்தப் பகுதியிலிருந்து மக்கள் இடம்பெயர்ந்தனர். இவ்வாறு இடம்பெயர்ந்தவர்களில் மன்னார் செயலகப் பிரிவுக்கு உட்பட்ட மன்னார் நகர் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் தங்கியிருந்தவர்களில் 44 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 148 பேர் நேற்று முன்தினம் மீள் குடியேற்றப்பட்டவர்களாவர்.

மன்னார் பிரதேச செயலகம் முன்பு கூடிய இந்த மக்கள் அனைவரும் மன்னார் பிரதேச செயலாளர் திருமதி நந்தினி ஸ்ரான்லி டி மெல்லினால் தனியார் பேருந்துக்கள் மூலம் அழைத்துச் செல்லப்பட்டனர்.

இவ்வாறு அழைத்துச் செல்லப்பட்டவர்களுக்கான மதிய உணவினை மன்னார் பிரதேச செயலகம் வழங்கியது. இவர்களுக்கான தற்காலிக இருப்பிடங்களை மன்னார் வாழ்வுதயம் அமைப்பும், உலர் உணவு அல்லாத வீட்டுப் பாவனைப் பொருள்களை ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகர் காரியாலயமும் வழங்கின.

இதைவிட இவர்களுக்கு ஆறுமாத காலத்திற்கான உலர்உணவுப் பொருள்களை வழங்குவதற்கு பிரதேச செயலகம் ஊடாக அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. (க-80)

## மீளாய்வுக் கூட்டம்

மன்னார்,செப்.25

மீள்குடியேற்றப்பட்ட மன்னார்-நாகதாழ்வு கிராம மக்களின் அடிப்படை வசதிகளை ஆராயும் மீளாய்வுக் கூட்டமொன்று நேற்று முன்தினம் நடைபெற்றுள்ளது.

நாகதாழ்வு மீள்குடியேற்றக் கிராமத்தில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் 542 ஆவது படைப்பிரிவின் கட்டளைத் தளபதி லெப்டினன் கேர்ணல் நலிந்த மஹாரித்தாரண, பிரிகேடியர் லிக்கும் லியனகே உள்ளிட்ட இராணுவ அதிகாரிகளும், மன்னார் பிரதேச செயலர் ஸ்ரான்லி டிமெல், மன்னார் ஆயர் இராயப்பு யோசவ் உள்ளிட்ட பலர் இதில் கலந்துகொண்டனர். (க-80)

## சிறுவர் தின நிகழ்வுகள்

வட்டக்கச்சி,செப்.25

கல்மடு நகரில் சிறுவர்கள் தினத்தை முன்னிட்டு சிறுவர்தின விழாவும், விளையாட்டுப் போட்டியும் இடம்பெறவுள்ளன.

அடுத்தமாதம் முதலாம் திகதி கல்மடு நகர் சுதாங்கனி முன்பள்ளி வளாகத்தில் இந்த நிகழ்வுகள் இடம்பெறும்.

இந்த நிகழ்வுகளானது போரின் காரணமாக இடம்பெயர்ந்து மீளக்குடியமர்ந்துள்ள சிறுவர்களை மகிழ்வூட்டி அவர்களது உளவளத்தை விருத்தி செய்வதே ஏற்பாட்டாளர்களின் நோக்கமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-450)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் கிரிக்கெட் விளையாட்டை மேம்படுத்துவது குறித்துக் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,செப்.25

யாழ்.மாவட்டத்தில் கிரிக்கெட் விளையாட்டை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3 மணிக்கு சென்,ஜோன்ஸ் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் ஸ்ரீலங்கா கிரிக்கெட்டின் பயிற்சியாளர் குழுவினரும் யாழ்.மாவட்ட துடுப்பாட்டப் பயிற்சியாளர்களில் தரம்-1 சித்தியடைந்தவர்களும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்தக் கலந்துரையாடலில் புதிய பயிற்சி நுட்பங்கள் பற்றியும், கிரிக்கெட்டை யாழ்ப்பாணத்தில் மேம்படுத்த எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் கலந்துரையாடப்படவுள்ளன.

இதில் பயிற்சியாளர் தரம்-1 இல் கலந்துகொண்ட அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா கிரிக்கெட் பயிற்சியாளர்கள் தமது பயிற்சிநுட்பங்கள் தொடர்பாக இந்தக் கலந்துரையாடலில் விளக்கமளிப்பர்.(த)

## சைக்கிள் ஓட்டப் போட்டி

யாழ்ப்பாணம், செப்.25

இணுவில் அண்ணா சனசமூக நிலையத்தின் 60 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு நடத்தப்படுகின்ற மாபெரும் சைக்கிள் ஓட்டப் போட்டி நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 6.30 மணியளவில் இணுவில் வைத்தியசாலை முன்றிலில் ஆரம்பமாகவுள்ளது.

வயதுக் கட்டுப்பாடின்றி நடத்தப்படுகின்ற இந்தப்போட்டிகளில் ஆர்வமுள்ளவர்கள் எவரும் கலந்துகொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (த-9)

## யாழ்.மாவட்டப் பெண்கள் அணி கோல்காப்பாளருக்குப் பாராட்டு



யாழ்ப்பாணம், செப்.25

வவுனியாவில் நடைபெற்ற வடமாகாண உதைபந்தாட்டப் போட்டியில் முதலிடம் பெற்ற யாழ்.மாவட்டப் பெண்கள் அணியின் கோல்காப்பாளரான வேலணை மத்திய கல்லூரியைச் சேர்ந்த மாணவி பொன்னம்பலம் புஸ்பமாலினி நேற்றுப் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார்.

புஸ்பமாலினியைக் கௌரவித்து யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ் திரி அலன்டின் விளையாட்டு உபகரணங்களை வேலணைப் பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கினார். இதில் வேலணைப் பிரதேச செயலர் மு.நந்தகோபாலன் மற்றும் பிரதேச செயலக அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (த-7)

## 400 மீற்றர் ஓட்டத்தில் லக்காசினியின் சாதனை பதிவு

வலி.வடக்கு, செப்.25

வட மாகாண விளையாட்டுத் திணைக்களம் மாவட்ட அணிகளுக்கு இடையே நடத்திய பெண்களுக்கான தடகளப் போட்டியில் 400 மீற்றர் ஓட்டப் போட்டியில் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த கே.லக்காசினியின் 1:04:4 செக்கன் வட மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் சாதனையாக பதிவு செய்யப்படவுள்ளது.

வட மாகாண விளையாட்டுத் திணைக்களம் மாகாண மட்டத்திலான சாதனைப் பட்டியலை பதிவு செய்ய நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

கடந்த மூன்றாண்டுகளின் பெறுபேறுகளின் அடிப்படையில் இந்தச் சாதனைகளைப் பதிவு செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

2007ஆம் ஆண்டு மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த என்.ஆனந்தறீற்றா 1:11:4 செக்கனிலும், 2009ஆம் ஆண்டு யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த எம்.மோசாந்தி 1:06:8 செக்கனிலும், 2010ஆம் ஆண்டு வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த கே.லக்காசினி 1:04:4 செக்கனிலும் 400 மீற்றர் ஓட்டத்தை ஓடியிருந்தனர்.

இதனடிப்படையில் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த கே.லக்காசினியின் 1:04:4 செக்கன் வட மாகாண விளையாட்டுக் கழகத்தின் புதிய சாதனையாக பதிவு செய்யப்படவுள்ளது. (த-86)

## கரப்பந்தாட்ட இறுதியாட்டம்

யாழ்ப்பாணம், செப்.25

யாழ்.மாவட்டக் கரப்பந்தாட்டச் சங்கம் நடத்திய இணைந்த கழகங்களுக்கு இடையிலான ஆண், பெண் இருபாலருக்குமான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் இன்று சனிக்கிழமை இரவு 7 மணியளவில் சங்க மைதானத்தில் மின் ஒளியில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக தொழிலதிபர் ஈ.எஸ்.பி.நாகரத்தினம் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி திருமதி ஏ.எவ்.ஜே.ரூபசிங்கம், இலங்கை வங்கியின் மேற்தரக்கிளை முகாமையாளர் எஸ்.மகாதேவா ஆகியோர் கலந்துகொள்வர்.

இலங்கைக் கரப்பந்தாட்டச் சம்மேளனத்தின் உதவிச் செயலாளர் லெப்டினன்ட் கேணல் மீகேஸ் அபயரத்ன கௌரவ விருந்தினராகக் கலந்துகொள்வார். (த-23)

## சர்வதேச அஞ்சல் தினத்தையொட்டிய மெய்வன்மைப் போட்டியில் வென்றோர்

தென்மராட்சி கிழக்கு,செப்.25

சர்வதேச அஞ்சல் தினத்தை ஒட்டி வட மாகாண அஞ்சல் திணைக்களத்தினர் தமது பிரிவில் இயங்கும் அஞ்சலக சமூகத்தினரிடையே நடத்திய மெய்வன்மைப் போட்டிகளில் வெற்றிபெற்றோரின் விவரம் வெளியாகியுள்ளது. அவர்களின் விவரங்கள் வருமாறு:-

**100 மீற்றர் ஓட்டம் - ஆண்**

(முதலாவது இடம்- ரி.கஜேந்திரன் (யாழ்ப்பாணம் அஞ்சலகம்), 2ஆம் இடம்- ரி. சூசைப்பிள்ளை (மன்னார் அஞ்சலகம்), 3ஆம் இடம்- ரி.ஜெகதீசன் (வவுனியா அஞ்சலகம்).

**200 மீற்றர் ஓட்டம் - ஆண்**

முதலாவது இடம்- ரி.ஜெகதீசன் (வவுனியா அஞ்சலகம்), 2ஆம் இடம் - சி.ஏ. ஆதித்தன்(யாழ்ப்பாணம் அஞ்சலகம்), மூன்றாம் இடம் - எம்.ஆர்.ரி.குரூஸ் (சிலாவத்துறை அஞ்சலகம்)

**400 மீற்றர் ஓட்டம்(ஆண்)**

சி.ஏ.ஆதித்தன்(யாழ்ப்பாண அஞ்சலகம்), எவ்.றொக்சன்(மன்னார் அஞ்சலகம்), எம்.கொன்சலஸ்(மன்னார் அஞ்சலகம்)

**800 மீற்றர் ஓட்டம்(ஆண்)**

ஏ.இரத்தினம் (முருங்கன் அஞ்சலகம்), எஸ்.பிராங்ளின்(மன்னார் அஞ்சலகம், பி. கண்ணதாசன்(வேலணை அஞ்சலகம்).

**1500 மீற்றர் ஓட்டம்(ஆண்)**

ஏ.அமிர்தரட்ணம்(மன்னார் அஞ்சலகம்), பி.றொக்சன்(மன்னார் அஞ்சலகம்), பி.கண்ணதாசன்(வேலணை அஞ்சலகம்)

**நீளம் பாய்தல்(பெண்)**

ஏ.செல்வகுமாரி(அஞ்சல் அத்தியட்சகர் அலுவலகம், யாழ்ப்பாணம்), கே.தனரூபினி(வவுனியா அஞ்சலகம்).

**ஈட்டி எறிதல்(பெண்)**

கே.தனரூபினி(வவுனியா அஞ்சலகம்), சி.பத்மதேவி(வவுனியா அஞ்சலகம்).

**வளையம் எறிதல்(பெண்)**

சி.பத்மதேவி(வவுனியா அஞ்சலகம்).

**குண்டெறிதல்(பெண்)**

செல்வி சி.பத்மதேவி(வவுனியா அஞ்சலகம்)

**4X100 மீற்றர் அஞ்சல் ஓட்டம்(ஆண்)**

முதலாவது இடம் - மன்னார், 2ஆவது இடம் - யாழ்ப்பாணம். 3ஆவது இடம் - வவுனியா)

**4X200 மீற்றர் அஞ்சல் ஓட்டம்(ஆண்)**

முதலாவது இடம்- வவுனியா, 2ஆவது இடம் - யாழ்ப்பாணம், மூன்றாவது இடம் - வவுனியா. (தொடரும்) (த-122)

## பல்கலை அணி கொழும்புக்கு

யாழ்ப்பாணம், செப்.25

இலங்கை பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான 10ஆவது விளையாட்டு விழாவினை முன்னிட்டு பெண்களுக்கான வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி எதிர்வரும் 28ஆம், 29ஆம் திகதிகளில் சிறீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது. இதில் பங்குகொள்வதற்காக யாழ்.பல்கலைக்கழக அணி நாளை ஞாயிற்றுக்கிழமை கொழும்பு புறப்படுகின்றது. (த-23)

## குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

## நாவாந்துறை சென்.மேரிஸ் வி.கவை இலகுவாக வென்றது ஊரெழு றோயல்

யாழ்ப்பாணம், செப்.25

நாவாந்துறை சென்மேரிஸ் விளையாட்டுக் கழகத்தை ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணி வென்றது.

பாஷையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழகத்தின் 75ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி யாழ்.உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையில் நடத்தப்பட்டுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் கடந்த வியாழக்கிழமை பாஷையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணி மோதியது. இந்த ஆட்டத்தில் தன்னை எதிர்த்து விளையாடிய நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக் கழக அணியை 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி கொண்டது. (ஜ-23)


## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், செப்.25

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் 15 வயதுப் பிரிவினருக்கான யாழ்.மாவட்ட பாடசாலை இடையில் நடத்தப்பட்டுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் ஆட்டங்கள் இன்று காலை 8 மணியளவில் பாஷையூர் சென். அன்ரனிஸ், யாழ்.மத்திய கல்லூரி மைதானங்களில் இடம்பெறவுள்ளன.

* யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் - ஏழாலை சிறிமுருகன் வித்தியாலய அணி எதிர் உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் வித்தியாலயம்.
* புனித ஹென்றியரசர் கல்லூரி எதிர் வலைப்பாடு ஜி.ரி.எம்.எஸ்.
* கொக்குவில் இந்துக் கல்லூரி எதிர் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்.
* சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழக மைதானம் - தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி எதிர் கிளிநொச்சி பாலி நகர் மகாவித்தியாலயம்.
* வசாவிளான் மகாவித்தியாலயம் எதிர் சென்.ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலை.
* தேவரையாளி இந்துக் கல்லூரி எதிர் அளவெட்டி அருணோதையக் கல்லூரி.

(ஜ-23)







சுவிஸ் நாட்டின் அபிவிருத்திக்கும் ஒத்துழைப்புக்குமான முகவர் அமைப்பின் நிதி பங்களிப்புடன் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் அமைக்கப்பட்ட விளையாட்டு வீரர்களின் நிலையம் நேற்றுமுன்தினம் வைபவரீதியாகத் திறந்துவைக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. விருந்தினர்கள் பாண்ட் வாத்திய அணி வகுப்புடன் வரவேற்கப்படுவதை முதல்படத்திலும் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவர் சங்கத் தலைவர் பேராசிரியர் என்.நடராஜசுந்தரம் மங்கள விளக்கேற்றுவதை இரண்டாவது படத்திலும் விளையாட்டு வீரர்களின் நிலையத்தினை சுவிஸ் நாட்டின் அபிவிருத்திக்கும் ஒத்துழைப்புக்குமான முகவர் அமைப்பின் யாழ். மாவட்டத் தலைமை அதிகாரி ஹான்ஸ் பீற்றர் ஏற்[illegible] நாடா வெட்டித் திறந்துவைப்பதை இறுதிப் படத்திலும் காணலாம். (படங்கள்:தமிழினியன்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கொமன்வெல்த் போட்டியிலிருந்து முன்னணி வீரர்கள் திடீர் விலகல்



## அணிகள் வருவதிலும் தாமதம்

புதுடில்லி,செப் 25

கொமன்வெல்த் விளையாட்டுப் போட்டியிலிருந்து முன்னணி வில்வித்தை வீரர்கள் 2 பேர் விலகியுள்ளனர். அதேவேளை, கனடா, நியூஸிலாந்து அணிகள் வருகையிலும் தாமதம் ஏற்பட்டுள்ளது.

கொமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள் அடுத்த மாதம் 3ஆம் திகதி முதல் 14ஆம் திகதி வரை டில்லியில் நடக்கவுள்ளன. போட்டி தொடங்க இன்னும் 9 நாள்கள் மட்டுமே உள்ள நிலையில் பல்வேறு சிக்கல்கள் ஏற்பட்டு வருகின்றன.

தொடக்க விழா நடைபெறும் மைதானத்தின் அருகில் உள்ள நடைபாதை மேம்பாலம் மற்றும் பளுதூக்கும் மைதானத்தின் மேல் கூரையின் சில பகுதிகள் இடிந்து விழுந்ததும், டில்லியில் வெளிநாட்டவர்கள் மீது தீவிரவாதிகள் துப்பாக்கிச் சூடு நடத்தியதும் புதிய பிரச்சினையை உருவாக்கியது.

அதோடு வீரர்கள் தங்குவதற்காகக் கட்டப்பட்டுள்ள விளையாட்டுக் கிராமத்தில் போதிய வசதிகள் இல்லாமல் சுகாதாரச் சீர்கேடுகள் நிறைந்து விளங்குவதாகவும் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் சில தினங்களுக்கு முன்பு தெரிவித்த கருத்து போன்றவை காரணமாக வெளிநாட்டு வீரர்கள் போட்டியில் பங்கேற்பதில் தயக்கம் காட்டி வருகிறார்கள். இங்கிலாந்து மற்றும் ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த சம்பியன் வீரர்கள் சமீபத்தில் போட்டியிலிருந்து விலகினார்கள்.

இந்த நிலையில் கனடாவைச் சேர்ந்த முன்னணி வில்வித்தை வீரர்களான கெவின், டிட்மர் ஆகியோர் போட்டியிலிருந்து விலகியுள்ளனர். பதக்கத்தை எந்த நாளிலும் வென்று கொள்ளலாம். எங்கள் பாதுகாப்பு முக்கியமானது என்று அவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

ஏற்கனவே ஸ்கொட்லாந்து வீரர்கள் தமது பயணத்தைத் தள்ளிவைத்தது போல் டில்லி வரத் தயாராகவிருந்த கனடா வீரர், வீராங்கனைகளை சில நாள் தங்கள் பயணத்தைத் தள்ளிவைக்கும் படியும், நிலைமை நன்கு அறிந்த பின்னர் செல்லலாம் என்று அந்த நாட்டு விளையாட்டு அமைப்புகள் தெரிவித்துள்ளன.

இதேபோல் நியூஸிலாந்து, அயர்லாந்து, இங்கிலாந்து ஆகிய நாடுகளும் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் குறித்துப் போட்டி ஒருங்கிணைப்பாளர்களிடமிருந்து உறுதிமொழி கிடைத்த பின்னரே தங்கள் பயணத்தைத் தொடரலாம் என்று காத்திருக்கின்றன.

# ஆசியக் கண்டத்தை நோக்கி படையெடுக்கும் அணிகள்!

இந்திய துணைக் கண்டத்தில், உலகக் கிண்ணக் (50 ஓவர்) கிரிக்கெட் தொடர் ஆரம்பமாக இன்னும் சில மாதங்களே உள்ள நிலையில் ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து உள்ளிட்ட அணிகள் ஆசிய மண்ணில் கிரிக்கெட் தொடரில் பங்கேற்பதற்காகப் படையெடுக்கின்றன. இதன்மூலம் ஆசிய மைதானங்களுக்கு ஏற்ப தங்களை தயார்படுத்திக்கொள்ளத் திட்டமிட்டுள்ளன.

இந்தியா, இலங்கை, பங்களாதேஷ் ஆகிய நாடுகள் இணைந்து, உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரை அடுத்த ஆண்டு பெப்ரவரி 19ஆம் திகதி முதல் ஏப்ரல் 2ஆம் திகதிவரை நடத்தவுள்ளன. இதற்காக ஒவ்வொரு அணிகளும் வீரர்களைத் தயார்படுத்தி வருகின்றன.

இதுதவிர, சில அணிகள் ஆசிய மண்ணில் டெஸ்ட் மற்றும் ஒருநாள் தொடர்களில் விளையாடத் திட்டமிட்டுள்ளன.

தற்போது இந்தியா சென்றுள்ள ஆஸ்திரேலிய அணி 2 டெஸ்ட் போட்டிகள், 3 ஒருநாள் போட்டிகளைக் கொண்ட தொடரில் பங்கேற்கிறது. இதேபோல அடுத்த மாதம் பங்களாதேஷுக்குச் சுற்றுப்பயணம் செய்யவுள்ள நியூஸிலாந்து அணி 5 ஒருநாள் போட்டிகளைக் கொண்ட தொடரில் பங்கேற்கவுள்ளது. அதன்பின்னர் நவம்பர் மாதம் இந்தியாவில் மூன்று டெஸ்ட் போட்டிகள் மற்றும் 5 ஒருநாள் போட்டிகளைக் கொண்ட தொடரில் பங்கேற்கவுள்ளது.

இதுகுறித்து நியூஸிலாந்து அணியின் தலைவர் டானியல் வெற்றோரி கூறியவை வருமாறு:-



உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடருக்கு முன்னதாக ஆசிய மண்ணில் கிரிக்கெட் போட்டியில் விளையாடுவது மகிழ்ச்சியளிக்கிறது. இதன்மூலம் உலகக் கிண்ணத் தொடருக்கு வீரர்களைத் தயார்படுத்திக்கொள்ள முடியும்.

இதுதவிர, ஆசிய தட்ப வெட்ப நிலை, மைதானத்தின் தன்மைக்கேற்ப பயிற்சி மேற்கொள்ள முடியும்.

பங்களாதேஷ், இந்திய அணிகளுக்கு எதிரான தொடரை; உலகக் கிண்ணத் தொடருக்கான சிறந்த பயிற்சியாகக் கருதுகிறேன். உலகக் கிண்ணத் தொடரில் கிண்ணத்தை வெல்வது நியூஸி லாந்து அணியின் கனவாகவே நீடிக்கிறது.

இம்முறை ஆசிய மண்ணில் நடக்க விருப்பதால், தேவையான பயிற்சிகளை மேற்கொண்டு கிண்ணத்தைக் கைப்பற்றப் போராடுவோம்.

சமீபத்தில் இலங்கையில் நடந்த முத்தரப்புத் தொடரில் நியூஸிலாந்து அணியின் பலம், பலவீனம் குறித்து நன்கு அறிந்து கொள்ள முடிந்தது. இதற்கேற்ப பங்களாதேஷ் மற்றும் இந்தியாவுக்கு எதிரான தொடர்களுக்கு சிறந்த வீரர்களைத் தெரிவுசெய்து, சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தத் திட்டமிட்டுள்ளோம்.

இலங்கைத் தொடரில் விளையாடாத பிரண்டன் மக்கலம், ஜெசி ரைடர், ரோஸ் ரெய்லர், ஸ்கொட் ஸ்ரைரிஸ், மில்ஸ் உள்ளிட்டோர் இம்முறை பங்கேற்பார்கள் என நினைக்கிறேன்.

ஆசியப் பயணத்தை நியூஸிலாந்து அணி, உலகக் கிண்ணத் தொடருக்கான பயிற்சிப் போட்டியாகக் கருத்திற்கொண்டு விளையாடும்.

- இவ்வாறு வெற்றோரி கூறினார்.(சி)

## உலகக் கிண்ணத்தை இந்தியா வெல்வது கடினம்

''உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் (2011), இந்திய அணிக்கு கடும் நெருக்கடி காத்திருக்கிறது'' - இவ்வாறு சவுரவ் கங்குலி தெரிவித்துள்ளார்.

அடுத்த ஆண்டு சொந்த மண்ணில் நடக்கவுள்ள உலகக் கிண்ணத் தொடரில், கிண்ணத்தை வெல்ல அதிக வாய்ப்பு உள்ள அணியாக இந்தியா கருதப்படுகிறது.

இந்நிலையில், இது மிகவும் சிரமம் என்கிறார் முன்னாள் இந்திய அணித் தலைவர் கங்குலி.

''சொந்த மண்ணில் உலகக் கிண்ணத் தொடரில் விளையாடவுள்ள இந்திய அணிக்கு நெருக்கடி அதிகம். உள்நாட்டு ரசிகர்களின் அதிகப்படியான எதிர்பார்ப்பு, இந்திய அணி வீரர்களுக்கு மனதளவில் நெருக்கடியை எற்படுத்தும். இந்திய அணிக்கு சச்சின்தான் பலம். கடந்த 20 ஆண்டுகளாக கிரிக்கெட் விளையாடிவரும் சச்சின், இந்த முறை இந்திய அணிக்கு அவர் உலகக் கிண்ணத்தைப் பெற்றுத் தருவார் என எதிர்பார்க்கிறேன்''- என்றார்.(சி)




## எந்தச் சவாலையும் சந்திக்கத் தயார் - கிளார்க்

சண்டிகர், செப். 25

''இந்தியாவுக்கு எதிரான தொடரில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினால் எந்தச் சவாலையும் சமாளிக்க முடியும். அதற்காக நாங்கள் தயாராகவே உள்ளோம்.''

- இவ்வாறு ஆஸ்திரேலிய வீரர் மைக்கல் கிளார்க் கூறியுள்ளார்.

ஆஸ்திரேலியக் கிரிக்கெட் அணி இந்தியாவிற்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது. இந்தியா-ஆஸ்திரேலியா அணிகளுக்கிடையிலான 2 டெஸ்ட் போட்டிகளைக் கொண்ட தொடரின் முதலாவது போட்டி எதிர்வரும் முதலாம் திகதி மொகாலியில் தொடங்குகிறது.

அதற்கு முன்பாக இன்று முதல் இந்தியக் கிரிக்கெட் வாரிய பதினொருவர் அணிக்கு எதிராக 3 நாள் பயிற்சி ஆட்டத்தில் ஆஸ்திரேலியா விளையாடவுள்ளது.

நேற்றுமுன்தினம் பயிற்சியை முடித்துக் கொண்டபிறகு கருத்துக் கூறும்போதே கிளார்க் மேற்கண்டவாறு கூறினார். இது குறித்து அவர் மேலும் கூறியவை வருமாறு:-

சஹீர்கான் அற்புதமான ஆரம்பப் பந்துவீச்சாளர். பழைய பந்திலும் அவரால் 'ரிவர்ஸ் ஸ்விங்' செய்ய முடியும். அதேபோல, சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன்சிங் டெஸ்ட் கிரிக்கெட்டில் நிறையச் சாதித்துள்ளார். குறிப்பாக ஆஸ்திரேலியாவுக்கு எதிராக சிறப்பாக விளையாடியுள்ளார். இவர்கள் இருவரும் இந்தியாவின் சிறந்த பந்துவீச்சாளர்கள். ஆஸ்திரேலியாவுக்கு எதிராக பல போட்டிகளில் விளையாடிய அனுபவம் பெற்றவர்கள். எனவே அவர்களது பந்து வீச்சைச் சமாளிக்க நாங்கள் திட்டங்களுடன் களமிறங்க வேண்டும்.

- இவ்வாறு கிளார்க் தெரிவித்தார்.(சி)

## அனைத்து பசுபிக் டெனிஸ்: விலகினார் செரீனா



ஜப்பானில் அடுத்த வாரம் நடைபெறவுள்ள அனைத்துப் பசிபிக் ஓபன் மகளிர் சர்வதேச டென்னிஸ் தொடரிலிருந்து உலகின் முதல் நிலை வீராங்கனையான அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ் விலகியுள்ளார்.

கடந்த ஜூலையில் விம்பிள்டன் கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் சம்பியன் பட்டம் வென்ற சில நாள்களிலேயே உணவு விடுதியொன்றில் கண்ணாடிச் சில்லு காலில் ஏறி காயமடைந்தார் அவர்.

அதற்கு அறுவைச் சிகிச்சை செய்துகொண்டதால் அவருக்கு இன்னமும் ஓய்வு தேவைப்படுகிறது என்று அவரது மேலாளர் தெரிவித்தார்.

நாளை (26ஆம் திகதி) ஆரம்பமாகி அடுத்த மாதம் 2ஆம் திகதி முடிவடையும் இந்த டென்னிஸ் தொடரில் 30 முன்னணி வீரர்கள் பங்கேற்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (சி)

# ஐ.பி.எல். மோகம்

தென்னாபிரிக்காவில் நடந்துவரும் சம்பியன்ஸ் லீக் 'ருவென்ரி-20' தொடரில் அசத்தலான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தி வருபவர் தெற்கு ஆஸ்திரேலிய அணியின் தலைவர் மைக்கல் கிளிங்கர்.

இதுவரை இவர் பங்கேற்ற நான்கு போட்டிகளில் 213 ஓட்டங்களைச் சேர்த்து, தொடரில் அதிக ஓட்டங்களைக் குவித்த வீரர்களின் வரிசையில் முதலிடத் தில் உள்ளார். இப்போது இவருக்கும் ஐ.பி.எல். ஆசை வந்துள்ளதாம்.



உள்ளூர் போட்டிகளில் துடுப்பாட்டத்தில் ஆதிக்கம் செலுத்தி, சிறந்த மாநில வீரர் விருது வென்றவர் கிளிங்கர். 2008இல் விக்ரோரிய அணியிலிருந்து விலகி, தெற்கு ஆஸ்திரேலிய அணியில் இணைந்த பின்னர், இந்தப் பருவகாலத்தில் முதல்தர போட்டிகளில் 886 ஓட்டங்களைக் குவித்தார். பின்னர் அணித் தலைவராகவும் உயர்ந்த இவர், உள்ளூர் 'ருவென்ரி-20' தொடரின் சிறந்த வீரராகவும் தெரிவு செய்யப்பட்டார்.

''முதலில் ஆஸ்திரேலிய அணியில் இடம் பிடித்து விளையாட வேண்டும் என்பதுதான் முக்கிய விருப்பம். ஆனால், அணியில் சிறப்பான துடுப்பாட்ட வீரர்கள் பலர் உள்ள நிலையில், இடம்பிடிப்பதற்குக் கடுமையான போட்டியுள்ளது. இருப்பினும், இந்த சம்பியன்ஸ் லீக் தொடரில் எனது ஓட்டக் குவிப்புத் தேர்வாளர்களைக் கவர்ந்திருக்கும் என நம்புகிறேன்.

இந்தியாவில் நடக்கும் ஐ.பி.எல். தொடரில் விளையாடுவதற்குத்தான், உலகக் கிரிக்கெட் வீரர்கள் முக்கியத்துவம் கொடுக்கின்றனர். அந்த வகையில் இத்தொடரில் பங்கேற்ற நானும் ஆர்வமுடன் உள்ளேன்.

குறிப்பிட்ட அணியில் இணைந்து விளையாட வேண்டும் என நினைக்கவில்லை. இதுவரை எந்த ஒரு அணி உரிமையாளரும் என்னைச் சந்திக்கவில்லை.''- என்று கிளிங்கர் கூறினார். (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



தீவக மண்ணின் மைந்தனும் தீவக அரிமாக் கழகத்தின் தலைவரும் ஸ்ரீ வசந்த நாகபூசணி அம்பாள் மேல் தீவிர பக்தியும் நம்பிக்கையும் கொண்ட மெய்த்தொண்டன்

**உயர்திரு. லயன் சாந்தலிங்கம் J.P**

அவர்கள் 18.07.2010 அன்று தீவக அரிமாக் கழகத்தின் தலைமைப் பதவியினை ஏற்றதையிட்டும் 20.08.2010 அன்று நீதிபதி உயர்திரு அ.பிறேம்சங்கர் முன்னிலையில் யாழ்.மாவட்ட சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டமையையும் பாராட்டி வாழ்த்துவதுடன் அம்பாளின் அருளாசி கிடைக்க வணங்கி வாழ்த்துகின்றோம்.

ஏழாலை ஸ்ரீ வசந்த நாகபூசணி
அம்பாள் தேவஸ்தான
தொண்டர்கள்.

(சி/571323)

## சங்காபிஷேகமும் சமயச் சொற்பொழிவும்

யாழ்ப்பாணம்,செப்.25

அராலி கிழக்கு - மெஞ்ஞான வைரவர் ஆலயத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை நூற்றி எட்டு சங்கு வைத்து விசேட சங்காபிஷேகமும் பூசையும் மகேஸ்வர பூசையும் இடம்பெறும்.

இன்றும் நாளையும் மாலை 5.30 மணிக்கு யாழ்.பேதனா வைத்தியசாலை முன்னாள் பிரதம மேற்பார்வையாளர் கு. கைலாசபிள்ளையின் விசேட சமயச் சொற்பொழிவும் இடம்பெறும்.

அனைத்து அடியார்களையும் கலந்து சிறப்பிக்குமாறு தர்மகர்த்தா தலைவர் நா. சிதம்பரப்பிள்ளை கேட்டுள்ளார். (ஐ-302)

## யாழ்.வலய அதிபர்களுக்கு நாளை கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,செப்.25

யாழ்.வலயக் கல்வி அலுவலகத்திற்குட்பட்ட பாடசாலை அதிபர்களுக்கான அவசர கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணியளவில் யாழ்.வலயக் கல்வி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இதில் சகல அதிபர்களையும் கலந்து கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் அறிவித்துள்ளார்.(ஐ-9)

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

நவாலி,செப்.25

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவின் பிரதேச ஒருங்கிணைப்பு கூட்டம் இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு பிரதேச செயலர் திருமதி அ.எழிலரசி தலைமையில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் இடம் பெறும்.

இக்கூட்டதில் நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் கலந்து கொள்வார்.

(த-201-100)

## இன்றைய ஆட்டங்கள்

அளவெட்டி மத்திய விளையாட்டுக் கழகம் அமரர் சுப்பிரமணியம் ஞாபகார்த்த கிண்ணத்துக்கான இரண்டாவது ஆண்டாக நடத்தும் மென்பந்துக் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்று காலை 9 மணிக்கு தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத்திற்கு அருகில் அமைந்துள்ள பூமா விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு

* மல்லாகம் ஸ்ரீ முருகன் வி.க. எதிர் சங்கானை நியூஸ்ரார் வி.க.
* சங்கானை நண்பர்கள் வி.க. எதிர் ஏழலை கலைமகள் வி.க.
* உடுவில் கிங்ஸ்ரார் வி.க. எதிர் மல்லாகம் குளமங்கால் ஆபிரகாம் வி.க.
* சங்கானை உதயதாரகை வி.க. எதிர் [illegible] வி.க.

(த-86)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



செல்வன் மதிவதனன் மேருஜன்
(அளவெட்டி அருணோதயா கல்லூரி)
தரம் ஐந்தில் உயர் புள்ளி 178 பெற்று
தரணியில் நீ புகழ் பூக்க
வரும் காலமது வளமாக
வாயார உனை வாழ்த்தி
நலம் பெற நாளுமுனை -நம்
மனம்கொண்டு போற்றிடவே
நீ பல்லாண்டு காலம்
பல கலைகளையும் கற்று நீடுழி வாழ்கவே

வாழ்த்துவோர்: அப்பப்பா, அப்பம்மா, சித்தப்பாமார், சித்திமார், மாமா, அத்தை, தம்பிமார், தங்கை, மைத்துனன்(ஷரப்பிரியன்)

செட்டிச்சோலை,
அளவெட்டி.

(103740)

## தேசமான்ய எங்கள் ஆர்னோல்ட்டுக்கு பாசமிகு அன்பர்களின் வாழ்த்துப் பூ



வித்திலே உன் வினைதிறன்
கண்டோம்
விளைந்ததும் அதன் உயர்தரம்
கண்டோம்
பள்ளிப் பருவத்தில் உன்
பல் திறன் கண்டோம்
பட்டமதைப் பெற்று
பக்குவமாய் செயலாற்றும்
பண்பும் கண்டோம்
உதைபந்து உன்னிடம்
உதைபட்டு கம்பங்களில்
சரணடையக் கண்டோம்
கல்வியும் விளையாட்டும் சேர்ந்த
கலவையாக உருப்பெறக்
கண்டோம் காப்புறுதியின்
கனவானாய் நீ வலம்வரக்
கண்டோம்
அளவிட முடியாத மானிட
மானியாக உனைக் கண்டோம்
இன்றோ தேசம் தரும் மகுடமாம்
தேசமானியாகவும் கண்டோம்
கண்டோம் உன்
பலதர்சனங்களை அனைத்தும்
நிதர்சனங்களாய்.

இன்று 25.09.2010 சனிக்கிழமை இரத்தினபுரி நகரசபை மண்டபத்தில் தேசமான்ய எனும் கௌரவ பட்டம் பெறும் எமது பிராந்திய முகாமையாளர்

**இமானுவல் ஆர்னோல்ட்**

அவர்களை மேலும் பல பட்டங்கள் பெற வாழ்த்துகின்றோம்

ஜனசக்தி இன்சுரன்ஸ் PLL
யாழ்-கிளை.

(சி/571325)


BRITISH COUNCIL



பிரிட்டிஷ் கவுன்சிலில் ஏன் ஆங்கிலம் கற்க வேண்டும்?

பதிவுசெய்யுங்கள் கொழும்பிலும் கண்டியிலும் ஒக்டோபர் மாதம் ஆரம்பிக்கும் பாடநெறிகளுக்கு

நாம் பின்வருவனவற்றை வழங்குகின்றோம்.
- வயதுவந்தவர்களுக்கும் சிறுவர்களுக்கும் பலதரப்பட்ட பயிற்சி நெறிகள் (வாரநாட்கள்/வாரஇறுதி)
- சிறந்த நவீன வசதிகளுடன் கூடிய வகுப்பறைகளில் தரமான போதனை
- ஐக்கிய இராச்சிய தராதரமுடைய தொழில்சார் மற்றும் அனுபவமுடைய ஆங்கில ஆசிரியர்கள்
- பயிற்சிநெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்ததும் பிரிட்டிஷ் கவுன்சில் சான்றிதழ் வழங்கப்படும்.
- வயதுவந்த மாணவர்களுக்கு ஆங்கில கற்றல் வலயத்தில் இலவச அங்கத்துவம்

நான் எப்படி கலந்து கொள்ளுவது?
- தரப்படுத்தல் பரீட்சைக்கான நேரத்தை ஒதுக்கிக்கொள்வதற்கு: அடையாள அட்டை/கடவுச்சீட்டு (16 வயதிற்கு மேற்பட்டோர்களுக்கு) அல்லது உங்கள் பிள்ளையின் (வயது 6-15) பிறப்புச்சான்றிதழ் (கண்டி நிலையத்திற்கு)
- மீளளிக்கப்படாத கட்டணம் ரூபா 800/- தேவைப்படும்.

பிரிட்டிஷ் கவுன்சில், 49 அல்பிரட் ஹவுஸ் கார்டின்ஸ், கொழும்பு 3
தொலைபேசி: (011) 4521521, (011) 7521521, 0772521599
மின்னஞ்சல்: info.lk@britishcouncil.org

அலுவலக நேரங்கள்:
திங்கள் முதல் ஞாயிறு வரை 0830 - 1900

பிரிட்டிஷ் கவுன்சில், 88/3 கொட்டுகொடல்ல வீதி, கண்டி
தொலைபேசி: (081) 2222410, (081) 7222410
மின்னஞ்சல்: info.lk@britishcouncil.org

அலுவலக நேரங்கள்:
செவ்வாய் முதல் சனி வரை 0900 - 1600
ஞாயிறு 0900 - 1600 வரை விசாரணைகளுக்கு மட்டும்.

www.britishcouncil.org/srilanka


## ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 684 திகதி 23-09-2010

வெற்றி எண்கள்

43 51 53 56 A (ஆங்கில எழுத்து)

ஜக்பொட் பரிசு ரூ. 15,667,900/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | - | 15,667,900/= | - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 02 | 400,000/= | 800,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 04 | 2,000/= | 8,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 396 | 1,000/= | 396,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 621 | 1,000/= | 621,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 15303 | 60/= | 918,180/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 7160 | 40/= | 286,400/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 180469 | 20/= | 3,609,380/= |
| | | மொத்தம் ரூ. | 6,638,960/- |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ரூபா.50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| காலி | 700392772-8-48 |
| கொழும்பு | 700396101-9-39 |
| இரத்தினபுரி | 700387144-2-32 |
| யாழ்ப்பாணம் | 700382460-1-21 |
| கொழும்பு | 700387480-9-09 |
| வவுனியா | 700395620-9-09 |
| மட்டக்களப்பு | 700392021-8-08 |
| நுவரேலியா | 700388635-8-38 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 7,038,960/=

எதிர்வரும் திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட்
ரூ. 16,156,240/=

மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2010 செப்டம்பர் 27 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.

வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333546/7

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

## வாசனா சம்பத

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம்: 836 திகதி: 23.09.2010

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் | | | | போனஸ் இல: |
|---|---|---|---|---|---|
| U | 08 | 53 | 56 | 68 | 54 |

| | கூட்டு | பரிசுத் தொகை | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்தும் 4 இலக்கங்களும் சரியாயின் | 20,032,939.00 | - |
| 1ம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | 1,000,000.00 | 01 |
| 2ம் பரிசு | 3 இலக்கங்களும் போனஸ் இலக்கமும் சரியாயின் | 100,000.00 | 03 |
| 3ம் பரிசு | 3 இலக்கங்கள் மட்டும் சரியாயின் | 2,000.00 | 280 |
| 4ம் பரிசு | 2 இலக்கங்கள் மட்டும் சரியாயின் | 100.00 | 14553 |
| 5ம் பரிசு | 1 இலக்கம் மட்டும் சரியாயின் | 20.00 | 204291 |
| 6ம் பரிசு | ஆங்கில எழுத்து மட்டும் சரியாயின் | 20.00 | 30336 |

இவ்வாரம் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை ரூ.
8,007,840.00

சுப்பர் பரிசுத்தொகை அடுத்த வியாழக்கிழமை
20,406,876.00

ஐந்து இலட்சம் அல்லது அதற்குக் கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும்.

தேசிய லொத்தர் சபை
இணையம்: www.nlb.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்சேகாவை விடுவிக்கக்கோரி இத்தாலியில் ஆர்ப்பாட்டம்

கடற்படை தடுப்புக் காவலிலுள்ள சரத் பொன்சேகா எம்.பியை விடுவிக்கக் கோரி நாளை இத்தாலியிலுள்ள மிலானோ நகரில் ஆர்ப்பாட்டமொன்று நடைபெறவுள்ளது.

சர்வதேச ரீதியில் சரத் பொன்சேகா எம்.பியை விடுவிக்கும்படி நடைபெறவுள்ள ஆர்ப்பாட்டங்களில் நாளை நடைபெறுவது முதலாவது ஆர்ப்பாட்டமாகும். இந்த ஆர்ப்பாட்டத்தில் ஜனநாயகத் தேசிய எம்.பிக்களான அர்ஜுன ரணதுங்க, அநுர குமார திசாநாயக்கா, டிரான் அலஸ், ஐ.தே.கட்சி எம்பிக்களான ஜயலத் ஜயவர்தன, விஜேதாஸ ராஜபக்ஷ, அகிலவிராஜ் காரியவசம் ஆகியோரும் சரத் பொன்சேகாவின் புதல்வி அப்ஸரா பொன்சேகாவும் கலந்து கொள்கின்றனர். ஒக்ரோபர் 2ஆம் திகதி பாரிஸிலும் 3ஆம் திகதி ரோமிலும் ஆர்ப்பாட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை, ஒக்டோபர் 2ஆம் திகதி ஜெனிவாவிலுள்ள மனித உரிமைகள் மாநாட் டில் ஐ.தே.கட்சி எம்.பி டாக்டர் ஜயலத் ஜயவர்தன, ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பு எம்.பி டிரான் அலஸ் ஆகியோர் கலந்துகொண்டு சரத் பொன்சேகா எம்.பி தொடர்பாகப் பேசவுள்ளனர்.


ஆசியாவிலேயே முதன்மை நிலை வகிக்கும்
An ISO 9001:2000 Certified Company
Spoken English பயிற்சி மையம்
veta®
Experts in English Training


Foundation, First Step க்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்
யாழ்ப்பாணம்
Sat,Sun 8.30 a.m.
Sat, Sun 10.00 a.m.
Mon,Wed 10.30 a.m.
நெல்லியடி
Tue,Thu 9.00 a.m.
Sat, Sun 9.00 a.m.
நவீன நுட்பங்களுடன் அடிப்படையில் இருந்து இலகுவான முறையில் ஆங்கிலம் பேச பயிலலாம்.
DMI COMPUTER EDUCATION
No.113, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். Tel. : 021-222 4403
M.M.V. வீதி, (மத்திய மகாவித்தியாலயம் முன்பாக) நெல்லியடி. Tel. : 021 - 320 7700




Study in UK
Admission with out
IELTS
November Intake
புதிய விசா நடைமுறையின் கீழ் VISA Processing வெற்றிகரமாகச் செய்து தரப்படும்.
★ குறைந்த தகைமை G.C.E (O/L)
★ Sponsorship ஆலோசனைகள்
★ 02 Year work permit.
BFC Services,
233, Navalar Rd,
Jaffna.
T.P: 0213206826


## நினைவஞ்சலி
## நன்றி செலுத்தும் ஆராதனை

*நான் நிர்மூலமாகாமல் இருப்பது*
*கர்த்தருடைய கிருபை : அத்தியாயம் புலம்பல் 3.22*

*பிறப்பு* 03 . 06 . 1947



*இறப்பு* 23 . 08 . 2010

### கதிரன் செல்லன்

கடந்த 23.08.2010 அன்று இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் நன்றி செலுத்தும் ஆராதனை இன்று (25.09.2010) சனிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*மெதடிஸ்த நகர்,*
*அல்வாய் வட மேற்கு, அல்வாய்.* **குடும்பத்தினர்.**

## 31ஆம் நாள் நினைவு அஞ்சலி



திருமதி
**செல்லம்மா ஆறுமுகம்**

அன்னையின் மடியில்
08.10.1928

ஆண்டவன் அடியில்
26.08.2010

குடும்பத்தின் ஒளிவிளக்காய் வாழ்ந்து
எம்மை அன்புடன் அரவணைத்து
நன்நெறி காட்டி வாழவைத்த
எங்கள் அன்புத்தெய்வமே!

உங்கள் ஆத்ம சாந்திக்காய் என்றும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கடந்த 26.08.2010 அன்று இறைவனடி சேர்ந்த எங்கள் அன்பு தெய்வத்தின் 31ஆம் நாள் நினைவுநாளான இன்று (25.09.2010) சனிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.

குறிப்பு: இந்த அழைப்பினைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

5/1, புகையிரத வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம். (103767) **குடும்பத்தினர்.**

## தவறிவிட்டது

சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகம் தெற்கு என்னும் முகவரியுடைய தேவராசா பவிராஜ் (922502757V) என்னும் இலக்கத்தையுடைய தே.அ.அட்டை றொட்டியாலடிக்கும் K.K.S. வீதி உப்புமடச் சந்திக்குமிடையில் தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் T.P. இலக்கத்துடன் தொடர்புகொண்டு ஒப்படைத்துதவவும். T.P.: 0773821399

## வீடு தேவை

யாழ்.மாநகரசபைக்குட்பட்ட பகுதியில் நிறுவனம் ஒன்றுக்கு வாடகைக்கு வீடு தேவை.

*தொடர்பு கொள்ள:*
*கிரான் பீற்றர்*
*077347843*

## மரண அறிவித்தல்
### பரராஜசிங்கம் மனோன்மணி



குப்பிளான் வடக்கு, காளிகோயிலடியைப் பிறப்பிடமாகவும் ஊரெழு கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட பரராஜசிங்கம் மனோன்மணி நேற்று (24.09.2010) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரிப்பிள்ளை - நல்லம்மா தம்பதிகளின் அன்பு மகளும் நெல்லியடியைச் சேர்ந்த பரராஜசிங்கத்தின் அன்பு மனைவியும் தங்கவேல் (கனடா), புனிதவதி (கனடா), ஞானாமிர்தம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), சிவயோகம் (ஆசிரியர், யா/ஊரெழு கணேசா வித்தியாசாலை), குணபூசணம் (ஆசிரியர், யா/புன்னாலைக்கட்டுவன் அ.த.க.பாடசாலை) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஊரெழுவில் நேற்று (24.09.2010) வெள்ளிக்கிழமை நடைபெற்று பூதவுடல் குப்பிளான் காடகரம்பை மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*ஊரெழு கிழக்கு,* **க.வைத்தியநாதன்**
*சுன்னாகம்.* *(103766)* **சாந்தகுமார்** *(மைத்துனர்கள்)*

## காரைநகர் பிரதேச சபை, காரைநகர்.
## வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல் - 2010

பின்வரும் வேலைகளுக்குப் பொருத்தமான அட்டவணையில் காட்டப்பட்டவாறான (ICTAD) தகுதி உடைய ஒப்பந்தகாரரிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

1. கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும் திகதி :- 27.09.2010-01.10.2010 பி.ப. 2 மணி வரை.
2. கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி :- 05.10.2010 நண்பகல் 12 மணிவரை.
3. கேள்விகள் திறக்கப்படும் திகதி :- 05.10.2010 பி.ப. 12.30 மணி.
(கேள்விகள் திறக்கப்படும் சமயத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்களோ அல்லது பிரதிநிதிகளோ சமுகமளிக்கலாம்)
4. பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரங்கள் அரக்கு முத்திரையிட்டுக் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் வேலையின் பெயருடன் அந்த வேலைக்கான கேள்வி என எழுதி, ''செயலாளர், காரைநகர் பிரதேச சபை, காரைநகர்'' என முகவரியிட்டு, பதிவுத்தபாலிலோ அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் நேரடியாகவோ சமர்ப்பிக்க முடியும். அதன் பிரதியை ''பிரா/உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிரா/உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்'' என்ற முகவரிக்கு நேரடியாகவோ, தபால் மூலமோ சமர்ப்பிக்க வேண்டும்.
5. மேலதிக விவரங்களை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

| இல. | வேலை விவரம் | பதிவுத் தரம் | மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்புப்பணம் | மீளளிக்க முடியாதது | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | கேள்விப் பத்திரம் | VAT வரி 12 % | NBT வரி 3 % |
| 01 | காரைநகர் கசூரினா சுற்றுலா மையத்தில் இளைப்பாற்று மண்டபம் அமைத்தல் | C 9 | 5100.00 | 1000.00 | 120.00 | 30.00 |
| 02 | காரைநகர் கசூரினா சுற்றுலாமையத்தில் தேநீர்ச் சாலை அமைத்தல் | C 9 | 9300.00 | 1000.00 | 120.00 | 30.00 |

**இரா. லோகநாதன்,**
**செயலாளர்,**
**பிரதேச சபை,**
**காரைநகர்.**

(சி/571329)

## மரண அறிவித்தல்
### கந்தர் இராஜரட்ணம்



இணுவில், மஞ்சத்தடியைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கு, காளி கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தர் இராஜரட்ணம் நேற்று (24.09.2010) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தர் - இலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, முத்துப்பிள்ளை மற்றும் இராசம்மா ஆகியோரின் சகோதரரும் உதயசாந்தி, வசந்தராஜன் (டென்மார்க்), சுகந்தி (ஜேர்மனி), ஜெயந்தி (ஜேர்மனி), மோகன்ராஜ் (ஜேர்மனி), காலஞ்சென்ற வரதராஜன் மற்றும் தமயந்தி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் விஜயகுமார் (ஓய்வுபெற்ற ஊழியர், சிமெந்துக் கூட்டுத்தாபனம்), இளங்கேசன் (ஜேர்மனி), கோவிந்தராஜன் (ஜேர்மனி), குணசேகரம் (லண்டன்), பாமினி (டென்மார்க்), சபிதா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும் சாரங்கா, சுருதி, சுபாங்கி, வியாசன், விதுரன், வியாசகி, வாரதி, விஸ்வா, மௌலிசா, சந்தியா, அணந்திகா, விஷ்ணுகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.09.2010) சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இணுவில் காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**காளி கோயிலடி,**
**கொக்குவில் கிழக்கு,**
**கொக்குவில்.** (103764)

தகவல் :
**மு.விஜயகுமார்**
**(மருமகன்).**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## கந்தையா ஆறுமுகசாமி (செல்வம்)



தெல்லிப்பழை, துர்க்காபுரத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கந்தையா ஆறுமுகசாமி நேற்று (24.09.2010) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா மற்றும் சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சபாபதி மற்றும் பார்வதி தம்பதியரின் அன்பு மருமகனும் மல்லிகா தேவியின் அன்புக் கணவரும் சிவாஜினி (இறுதியாண்டு மாணவி, கலைப்பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்), நிசாந்தி, துளசி, அஜிதா, கிரிசா (மாணவிகள், யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் இராசரத்தினம் (KR), கதிர்காமத்தம்பி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.09.2010) சனிக் கிழமை மு.ப. 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் கட்டுப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

துர்க்காபுரம்,
தெல்லிப்பழை. (103765)

## சங்கரப்பிள்ளை சிவகுமாரி (மணி)



நீர்வேலி தெற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை சிவகுமாரி நேற்று (24.09.2010) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - முத்தம்மா தம்பதிகளின் ஏக புத்திரியும் காலஞ்சென்ற நவசிவாயம் மற்றும் செல்வராணி தம்பதிகளின் மருமகளும் ரவீந்திரன், புவனேந்திரன், ஞானேந்திரன், சித்திரா, யசோதரா, கலாதரா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.09.2010) சனிக்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்துக்கு தகனத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.

தகவல்:
சித்திரா புவனேஸ்வரன்


## டொல்பின் விற்பனைக்கு

மிகவும் நல்ல நிலையிலுள்ள டொல்பின் ஒறிஜினல் 12 A/C, PB 22 xxxx தொடர் இல. வாகனம் விற்பனைக்குண்டு. (உற்பத்தி 2001 டிசெம்பர், ஒறிஜினல் மைலேஜ், கம்பனிப் பராமரிப்பிலுள்ளது) சனிக்கிழமை மட்டுமே பார்வையிடலாம்.

தொடர்பு:
0773910667

## வீடு காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கே.கே.எஸ் வீதி தட்டாதெரு சந்திக்கு அண்மையில் உள்ள 1 பரப்பு 3/4 குளி வீட்டுடன் சேர்ந்த காணி விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை.

தொடர்பு கொள்ள:
0771554641

## உடனடி வேலைவாய்ப்பு

தனியார் நிறுவனம் ஒன்றிற்கு
Telephone Operator
(தொலைபேசி இயக்குநர்)
Receptionist
(வரவேற்பாளர்)
ஆகிய பதவிகளுக்கு பெண் பிள்ளைகள் தேவை.

தொடர்புகளுக்கு:
233, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
0775518040


## தவறிவிட்டது

LD 6719 எனும் இலக்கமுள்ள லொறியின் இலக்கத்தகடு கடந்த 15.09.2010 அன்று மந்திகைச் சந்திக்கும் இருபாலைச் சந்திக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 0776583592 எனும் தொ.பே.இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.


## கணனி விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள P4, 2.26 GHz, Computers Full Set மற்றும் கணனிப் பொருள்கள் என்பன ஒரு வருட உத்தரவாதத்துடன் உடன் விற்பனைக்குண்டு. (விலை 16,750/= மட்டுமே).

தொடர்பு:
SKY COMPUTER SYSTEM
162, Main Street, Jaffna. T.P.: 021 222 1417


# கண்ணீர் அஞ்சலி

## தங்கராசா சத்தியகுமார்

(தாமரைக் குளத்தடி, துன்னாலை மத்தி)



*வையகத்தில் வாழ்ந்த வாழ்வில் மண்ணில் மறவாத நினைவுகளைத் தந்த சத்தியரே! ஆலய ஆன்மீக பணிகளிலும் சமூக சேவைகளிலும் உம் பணியை என்றும் இந்த வையகமே மறவாது உம் பிரிவால் துயருறும் அனைத்து உள்ளங்களுக்கும் எம் ஆழ்ந்த கவலைகளைத் தெரிவிப்பதோடு அமைதியுடன் அடைக சாந்தி என்று இறைவனை வேண்டுகின்றோம்.*

சிவஸ்ரீ ராம் சாமநாதக் குருக்கள்
சின்னராசா ஐயர்,
அல்லையம்பதி, துன்னாலை. (ச-571324)

துயரால் துயருறும்
சாரதா பீடம் குடும்பத்தினர்.

## கேள்வி கோரல்

எமது சங்கத்திலுள்ள வெற்றுச் சாக்கு, பை என்பன கேள்விப் பத்திரம் மூலம் விற்பனை செய்யப்படவுள்ளன. கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பிக்க விரும்புவோர் கிழமை நாள்களில் அலுவலக நேரத்தில் வெற்றுப் பொருள்களைப் பார்வையிட்டு கேள்விப் பத்திரங்களை 30.09.2010ஆம் திகதிக்கு முன் சமர்ப்பிக்கவும்.

பொது முகாமையாளர்
தெல்லிப்பழை பல நோ.கூ.சங்கம்.


## CANADA Work Permit

பெறுவதற்கான ஆலோசனைகள்

- வயதெல்லை – upto 40 years
- ஆங்கில அறிவு சரளமாக இருத்தல் வேண்டும்.
- அங்கீகரிக்கப்பட்ட Diploma / Degree உடையவர்களுக்கு முன்னுரிமை
- குறைந்த பட்சம் ஒரு வருட வேலை அனுபவம் தேவை.

SIC Center, 734, Hospital Road, Jaffna.
Tel : 0776 209 887


# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



## திருமதி பிருந்தா நவநீதன்

(முகாமைத்துவ உதவியாளர், வலிகாமம் கல்வி வலயம்)

தேனூறு மலரை அடைந்ததுன்
சொற்கள்
கானூறு புலியை அடைந்ததுன்
பொறுமை
மலர்க்கையான் கர்ணனை அடைந்ததுன்
கொடை
கவினூறு தாமரை அடைந்ததுன்
விழிகள்
வெண்ணிற முல்லையை அடைந்ததுன்
சிரிப்பு
எம் உள்ளத்தை அடைந்ததுன்
நினைவுகள்
எம் சிரிப்பெல்லாம் தொலைந்ததுன்
இறப்போடு
உன் நினைவுகள் மட்டும் என்றும் எம்மோடு...

தோற்றம்
12 . 12 . 1979

மறைவு
28 . 08 . 2010

கடந்த(28.08.2010) சனிக்கிழமை இவ்வுலகை நீத்த எமது அன்புச் செல்வத்தின் அந்தியேட்டிக் கிரியை இன்று (25.09.2010) சனிக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் 27.09.2010 திங்கட்கிழமை வீட்டுக்கிருத்திய நிகழ்வு அன்னாரது இல்லத்திலும் நடைபெறும் . அன்றையதினம் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும்வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு:- இறுதி நிகழ்வில் கலந்து கொண்டவர்கள், அனுதாபச்செய்திகள் தெரிவித்தோர் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதோடு இந்த நிகழ்வில் கலந்துகொண்ட நல் உள்ளங்களை நினைவுபடுத்த முடியாத காரணத்தால் அனைவரையும் இவ் அழைப்பினைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நீங்கா நினைவுகளுடன்
கணவர், குடும்பத்தினர்.

37, சிவப்பிரகாசம் வீதி,
வண்ணார் பண்ணை,
யாழ்ப்பாணம்.(ரமேஸ் கடை) TP: 021 222 6183

# மரண அறிவித்தல்

## தம்பித்துரை சொர்ணம்மா



சாந்தை, பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பித்துரை சொர்ணம்மா 21.09. 2010 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா மற்றும் சிவக்கொழுந்து தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற ஆறுமுகம் மற்றும் கற்பகம் தம்பதியினரின் மருமகளும், தவராசசிங்கம் (ஓய்வுபெற்ற இ. போ.ச பரிசோதகர், காரைநகர் சாலை), குணத்திலகம் (ஓய்வுபெற்ற ஆசிரியர், சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி), பாலசூரியன், திருச்செல்வராசா (கனடா), பசுங்கிளிராணி (கொழும்பு), பாலச்சந்திரன் (நோர்வே), பாரததேவி (கனடா), புஷ்பராகம் (குடும்பநல சேவையாளர், சில்லாலை), பாஷமலர் (அமெரிக்கா), ஆறுமுகநாதன் (சுவீடன்), ரசீகலா (லண்டன்) ஆகியோரின் அருமைத்தாயாரும் கலைவாணி, மகேந்திரவதனி, பரமேஸ்வரி (தாதிய உத்தியோகத்தர், யாழ். போதனா வைத்தியசாலை), சுலோசனா (கனடா), மனோகரன் (கப்பற் பொறியியலாளர், கொழும்பு), நந்தினி (நோர்வே), சிதம்பரநாதன் (கனடா), இராதாகிருஷ்ணன், லோகேஸ்வரன் (அமெரிக்கா), சிவகௌரி (சுவீடன்), மதன்மோகன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் அமரர் பாலசிங்கம், அமரர் இரத்தினம்மா, அமரர் ஆராய்ச்சி மற்றும் சிவப்பிரகாசம் (கனடா), அமரர் சந்திரசிங்கம் ஆகியோரின் அன்புச்சகோதரியும் நாகரத்தினம் (லண்டன்), ஏகாம்பேஸ்வரி, அமரர் சுப்பிரமணியம், தாய்வாணி (கனடா), வாழ்வுமலர் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியும், தவரூபன் (லண்டன்), இந்துஜா (ஆசிரியை, திருமலை ஸ்ரீ சண்முக வித்தியாலயம்), தனுஷா, காசிபன் (அமெரிக்கா), அனிந்திகா (நோர்வே), பிரணவன், சொரூபிகா (ஆசிய பல்கலைக்கழகம், பங்களாதேஷ்), கௌந்திகா, நிஷாந்தன் (மாணவன்), ஆகீசன் (மாணவன்), கீர்த்தனன் (மாணவன்,யாழ்.இந்துக் கல்லூரி), ஸ்ரீ சாயுச்சியா (யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி), கயந்தன், சொயந்தன், விஜந்தன் (கனடா), கபிலன் (பொறியியலாளர் - லண்டன்), கௌசிகா (கனடா), விபுலன் (லண்டன்), வியாசிகா (மாணவி - சைவ மங்கையர் வித்தியாலயம், கொழும்பு), தகேசன், யட்சிகா (நோர்வே), லதீபன், காந்தீபன், தாட்சாயணி (கனடா), துவாரகன் (மாணவன் - சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி), பதிகரன் (சுழிபுரம் ஆறுமுக வித்தியாசாலை), சோபனா, நவீனன் (U.S.A.), ஹர்சன், ஹர்சா (சுவீடன்), மிதிலன், தருண், அருண்யா (லண்டன்) ஆகியோரின் பேர்த்தியாரும் சாதுர்ஜா, சாத்வீகா, சாரங்கி (லண்டன்), சகீல், சுபஜீ (திருமலை), கேசிகன் (நோர்வே) ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.09.2010) சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சம்பில்துறை மளுவை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
த.தவராசசிங்கம் (ஓய்வுபெற்ற பரிசோதகர் இ.போ.ச, காரைநகர் சாலை),
த.குணத்திலகம் (ஓய்வுபெற்ற ஆசிரியர், சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி),
த.பாலசூரியன், இ.புஷ்பராகம் (குடும்பநல சேவையாளர், சில்லாலை),
ம.பசுங்கிளிராணி (கொழும்பு)

சாந்தை,
பண்டத்தரிப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழிக்கப்பட்ட புலிகள் இயக்கத்திற்கு ஏன் இந்தியாவில் தடை விதிப்பு?

**பழ.நெடுமாறன் கேள்வி**

கொழும்பு, செப். 25

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, புலிகளை முற்றாக அழித்துவிட்டோம் என்று கூறுகின்றார். அது உண்மை என்றால், அழிக்கப்பட்ட இயக்கத்திற்கு ஏன் இந்தியாவில் தடை விதிக்கவேண்டும்.

- இவ்வாறு கோவையில் நேற்று செய்தியாளர்களிடம் தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன் தெரிவித்துள்ளார்.

''இந்தியாவில் விடுதலைப் புலிகள் அமைப்பைத் தடைசெய்ய வேண்டும் என்று மத்திய, மாநில அரசுகள் கூறிவருகின்றன.

நியூஸிலாந்தில் சமீபத்தில் விடுதலைப் புலிகளின் ஆதர்வாளர்கள் என்று கைதுசெய்யப்பட்டவர்கள் மீது தொடுக்கப்பட்ட வழக்கில் தீர்ப்பு வழங்கிய நீதிபதிகள், ''விடுதலைப் புலிகள் அமைப்பு என்பது ஓர் அரசியல் இயக்கத்திற்கான அம்சங்களையும், நேர்மையையும் கொண்ட ஒரு மிகப்பெரிய தேசிய விடுதலை இயக்கம்'' - என்று கூறியிருக்கிறார்கள்.

ஆனால், இங்கே மட்டும் மத்திய, மாநில அரசுகள் விடுதலைப் புலிகள் இயக்கம் தடை செய்யப்பட வேண்டிய இயக்கம் என்கிறார்கள்; தீவிரவாத இயக்கம் என்கிறார்கள்.

இலங்கையில் விடுதலைப் புலிகளை முற்றாக அழித்துவிட்டோம் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூறுகின்றார். அது உண்மை என்றால், அழிக்கப்பட்ட இயக்கத்திற்கு இந்தியாவில் தடை ஏன்?

- இப்படி பழ. நெடுமாறன் தெரிவித்தார்.

## மஹிந்தவை..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனவும் அந்த இணையதளம் தெரிவிக்கின்றது.

ஜனாதிபதியுடன் சென்றிருந்த பாதுகாப்புப் பிரிவினர் ஐக்கிய நாடுகள் சபையிலுள்ள இலங்கை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு இந்தப் பதாகையை அகற்ற வழி இல்லையா எனக் கேட் டனர் என்று தெரிவிக்கப்படு கிறது.

எவ்வாறாயினும் இந்தப் பதா கையுடனான குட்டி விமானம் நீண்ட நேரம் வானத்தில் சுற்றிக் கொண்டிருந்ததாக நியூயோர்க்கி லுள்ள இலங்கையர்கள் தெரிவித்தனர். (சி)

## விவாகரத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்படுத்த நீதிமன்றங்கள் முயச்சிக்கின்ற போதும் பிரிந்து செல்வதில் தம்பதிகள் பிடிவாதமாக இருக்கின்றனர் என மாவட்ட நீதி மன்ற உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார். (உ-9)

## ஒபாமா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவை ஒவ்வொன்றுக்கும் ஒரு லட்சத்து 20ஆயிரம் ரூபா செலவிடப்பட்டுள்ளது. மற்றும் இவர்களுடன் சென்றுள்ள 50 பேருக்கும் விமான டிக்கெட்டுகளுக்கென 50 லட்சம் ரூபா மில்லியன் வரை செலவிடப்பட்டுள்ளது.

ஐ.நா.மாநாடு போன்ற முக்கிய நிகழ்வுகளுக்கு ஜனாதிபதி கலந்துகொள்வது முக்கியமாகும். இருந்தும் மக்களின் வரிப் பணத்தைச் செலவிட்டு பெரியபட்டாளத்தைத் தம்முடன் அழைத்துச் செல்வது நாட்டின் பொருளாதாரத்தைப் பாதிக்கும் - என்றார் அவர். (சி)

## வன்னி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்ய வேண்டும் என்று ஆளுநர் கோரிக்கை முன்வைத்துள்ளார். எனினும் இதுவரை அதற்கான பதில் எதுவும் இந்தியத் தரப்பால் தெரிவிக்கப்படவில்லை.

30 ஆண்டுகளாகத் தொடர்ந்த போர் காரணமாக வன்னிப் பிரதேசத்தில் உள்ள பாடசாலைகள் மிகமோசமாகச் சேதமடைந்திருந்தன. ''பௌதீக ரீதியாக சிறியளவு சேதத்தைத்தானும் சந்திக்காத பாடசாலை எதுவும் வன்னியில் கிடையாது'' - என வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக் னேஸ்வரன் தெரிவித்தார்.

வன்னியில் மக்கள் மீளக்குடியமர்ந்து இயல்பு வாழ்க்கை மீண்டுவரும் இந்தச் சந்தர்ப்பத்தில் அங்குள்ள பாடசாலைகளைப் புனரமைக்க வேண்டியது மிக முக்கிய பணி. உடனடியாக அப்பணிகளை நிறைவேற்ற வேண்டி இருப்பதனாலேயே இந்திய அரசின் உதவியை ஆளுநர் நாடி உள்ளார் என ஆளுநர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-9)

## யாழ்ப்பாணம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செல்லும்போதுதான் பிரதி அமைச்சர் பதில் அமைச்சராகப் பதவிப்பிரமாணம் செய்துகொள்வார்.

ஆனால், பாரம்பரியக் கைத்தொழில்கள் மற்றும் சிறு கைத்தொழில்கள் அபிவிருத்தி அமைச்சர் யாழ்ப்பாணம் சென்றுள்ள நிலையில் பிரதி அமைச்சர், பதில் அமைச்சராகப் பதவிப் பிரமாணம் செய்து கொண்டுள்ளார். அப்படியானால், யாழ்ப்பாணம் ஒரு தனிநாடாகுமா? இதனைத் தெளிவுபடுத்தவேண்டும் எனக் குறிப்பிட்ட ரவி கருணாநாயக்க இப்போது அமைச்சராக இருப்பது டக்ளஸ் தேவானந்தாவா அல்லது அவரது பிரதி அமைச்சரா என்றும் கேள்வி எழுப்பினார்.

## 7 கோடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைப்பிலிடுவதற்காக வானில் பணம் கொண்டுசெல்லப்பட்டது.

அப்போது மோட்டார் சைக்கிளில் வந்த ஆயுததாரிகள் ஐவர் வானை மறித்து அதிலிருந்து பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் இருவரினதும் துப்பாக்கிகளைப் பறித்தனர். அத்துடன் ஆறரைக் கோடி ரூபா பணத்தையும் கொள்ளையடித்துச் சென்றனர்.

இச்சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் எவரும் இதுவரை கைதுசெய்யப்படவில்லை. சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்கென இரு விசேட பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

- இவ்வாறு பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரசாந்த ஜயக்கொடி தெரிவித்தார்.

## சிப்பாய்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் சம்பவம் குறித்து இணையத் தளங்களில் வெளியான செய்தியில் குறிப்பிடப்பட்டிருப்பவை வருமாறு:-

கனகாம்பிகைக்குளம் 10 வீட்டுத்திட்டத்தில் உள்ள முதலாம் இலக்க வீட்டினுள் நேற்றுமுன்தினம் இரவு 9.30 மணிக்கு குறித்த படைச்சிப்பாய் நுழைய முற்பட்டுள்ளார்.

இதனை அறிந்து கொண்ட வீட்டின் உரிமையாளர் கூக்குரலிட்டதுடன் கத்தியை எடுத்துக்கொண்டு சிப்பாயைத் துரத்தியுள்ளார். அங்கிருந்து ஓடிய சிப்பாய் அருகிலிருந்த கல் குவியலுக்குப் பின்னால் ஒளிந்து நின்று வீட்டு உரிமையாளரைத் தாக்கியுள்ளார்.

இதனைத் தொடர்ந்து வீட்டு உரிமையாளர் கையிலிருந்த கத்தியால் சிப்பாய் மீது குத்தியுள்ளார். காயமடைந்த சிப்பாய் தப்பித்து ஓடியுள்ளார்.

சம்பவம் தொடர்பாக முகாமிலுள்ள இராணுவத்தினருக்கு தகவல் தெரிவிக்கப் பட்டதைத் தொடர்ந்து குறித்த பகுதியை இராணுவத்தினர் சோதனையிட் டுள் ளனர்.

இதன்போது கத்திக்குத்திற்கு இலக்கான சிப்பாய் ஓடிய இடமெல்லாம் இரத்தம் காணப்பட்டுள்ளது. அத்துடன் சிப்பாய் வேலி பாய்ந்தபோது அவரின் சப்பாத்து ஒன்று வேலியில் சிக்கிக்கொண்டமையும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பின்னர் காயமடைந்த சிப்பாய் கண்டுபிடிக்கப்பட்டு வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

மறுநாள் காலை (நேற்று) குறித்த இடத்திற்கு வந்த படையினர் மக்கள் செய்த செயல் சரியானதெனக் கூறினராம்.

- இப்படி இணைத் தளத்தில் செய்தி வெளியிடப்பட்டிருந்தது.

இச்சம்பவம் தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் முழுமையான விசாரணை முடிவடைந்த பின்னரே இது குறித்த விவரத்தை தம்மால் வெளியிட முடியும் என்றும் இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார். (சி)

## பொன்சேகா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பதாகக் கூறினீர்கள்.

இதன் பின்பு இடம்பெற்ற கட் சித் தலைவர்களின் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய நீங்கள் (சபாநாயகர்) இராணுவச் சட்டத்தின் 147ஆவது பிரிவின் படியே பொன்சேகா சபைக்கு வர அனுமதிக்கப்படவில்லை என்று கூறினீர்கள்.

ஆனால், அந்த இராணுவ சட் டத்தின் நாடாளுமன்ற உறுப்பினர் நாடாளுமன்றம் செல்வதைத் தடுக்கும் வழிகள் இல்லை. இதை நான் உங்களின் கவனத்துக்குக் கொண்டு வருகின்றேன். இன்றும் (நேற்று) பொன்சேகா சபைக்கு வர அனுமதிக்கப்படவில்லை. அவரை உடன் அழைத்துவர சபாநாயகர் நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்று கூறினார்.

இதனைத் தொடர்ந்து எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க கூறியவை வருமாறு:-

பொன்சேகாவுக்கு எதிரான இராணுவ நீதிமன்றத் தீர்ப்புத் தொடர்பான பத்திரத்தில் ஜனாதிபதி கையெழுத்திட்டால் மாத்திரமே தீர்ப்பு நடைமுறைக்கு வரும். அந்த வகையில் ஜனாதிபதி இன்னும் கையெழுத்திடாததால் பொன்சேகா நாடாளுமன்றம் வருவதை இராணுவ நீதிமன்றத்தால் தடுக்க முடியாது.

பொன்சேகா மக்களின் வாக்குகளால் தெரிவுசெய்யப்பட்ட ஒரு மக்கள் பிரதிநிதி. அவ்வாறான ஒருவரை நாடாளுமன்றம் வரவிடாமல் தடுப்பது சட்டவிரோதமானதாகும். அவரை நாடாளுமன்றம் வரவிடாமல் தடுக்கும் அதிகாரம் இராணுவ நீதிமன்றத்துக்கு இல்லை - என்றார்.

மிகச் சிறந்த யுத்த வீரரான பொன்சேகாவைக் கொன்று விடாதீர்கள் என்று ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பி னர் தயாசிறி ஜயசேகர அரசிடம் கோரிக்கை விடுத்தார்.

சரத் பொன்சேகா ஒரு குற்றவாளி என இராணுவ நீதிமன்றம் அறிவித்துள்ளது. ஒரு குற்றவாளி நாடாளுமன்றம் வருவதை எப்படி அனுமதிக்க முடியும் என்று பிரதி அமைச்சர் விஜயமுனி சொய்ஸா கேள்வி எழுப்பினார்.

இதுதொடர்பாக ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பதாகவும் பொன்சேகா ஒரு வீரரா இல்லையா என்று ஆராய்ந்து பார்ப்பது தனது கடமையல்ல என்றும் சபாநாயகர் கூறினார். (சி)


18 ஆவது பிறந்த நாள் வாழ்த்து



வி. பிருந்தாபன்

இன்று (25.09.2010)
சனிக்கிழமை தனது
18ஆவது
பிறந்தநாளைச் சுவிஸில்
கொண்டாடும்
வி.பிருந்தாபனைப்
பல்கலையும் கற்று
பல்லாண்டு வாழ்கவென
வாழ்த்துகின்றோம்.



நந்தினி சித்தி குடும்பம், அம்மம்மா,
சின்னக்கிளி மாமா குடும்பம்,
ரஞ்சி சித்தி குடும்பம், புவனேஸ்வரி பெரியம்மா குடும்பம்.

தாவடி வடக்கு, கொக்குவில். (103699) இணுவில் கிழக்கு, இணுவில்.

பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/இடைக்காடு மகாவித்தியாலயம்

2010 பல்கலைக்கழகத்திற்குத் தெரிவான விஞ்ஞானப்பிரிவு மாணவர்கள்



சி.தவநீஸ்



க.கபிலன்



க.சர்மிளா



பா.பிருந்தா

2010 - தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர்



கோ.சுஜானி (156 புள்ளிகள்)



சி.போகீசன் (147 புள்ளிகள்)



சி.நிவேதிகா (143 புள்ளிகள்)



ம.மகேந்தினி (143 புள்ளிகள்)

மேற்படி பரீட்சைகளில் சித்தியடைந்த இம் மாணவர்களிற்கு இன்றைய பரிசளிப்பு விழாவில் புலமைப் பரிசில் வழங்கி வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகின்றோம். இவர்களை கற்பித்த ஆசிரியர்களும் வழிநடத்திய அதிபரும் என்றும் எம் நன்றிக்கும் பாராட்டுக்கும் உரியவர்கள். வாழ்க அவர் தம் சேவை! வளர்க நம் கல்வி!

பழைய மாணவர் சங்கம், யா/இடைக்காடு ம.வி.

(103746)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாதம் குறித்து இலங்கை - இந்தியா வலுவான புலனாய்வுத் தகவல் பரிமாற்றம்

## அமைச்சர் கெஹலிய தெரிவிப்பு

கொழும்பு, செப். 25

இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையில் வலுவான புலனாய்வு தகவல் பரிமாற்றம் உள்ளது என்றும், தென்னாசிய பிராந்தியத்தில் இடம்பெறக் கூடிய எந்தவொரு பயங்கரவாத நடவடிக்கையையும் இலங்கை - இந்தியப் புலனாய்வு நடவடிக்கைகளால் முறியடித்து விட முடியும் என்றும் ஊடக அமைச்சர் கெஹலியரம்புக்வெல்ல தெரிவித்தார்.

பிராந்தியத்தின் தீவிரவாத நடவடிக்கைகள் தொடர்பில் இரண்டு நாடுகளுக்கும் இடையில் சிறப்பான புலனாய்வுத் தகவல் பரிமாற்றம் காணப்படுகிறது என்றும் அவர் கூறினார்.

லக்ஸர் ஈ தொய்பா தீவிரவாத அமைப்பு தொடர்பில் அமெரிக்கா வெளியிட்டுள்ள எச்சரிக்கைகள் குறித்து கருத்து வெளியிட்ட போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

''பிராந்தியத்தில் இடம்பெற்று வரும் பிரச்சினைகள் தொடர்பில் இந்தியா மிகவும் விழிப்புடன் இருக்கிறது. இந்தியாவை விடவும் பிராந்திய விவகாரங்களை வேறு தரப்பினர் அறிந்து வைத்திருக்கச் சாத்தியமில்லை.

தீவிரவாத நடவடிக்கைகள் குறித்து கண்காணித்து அது பற்றி உடனுக்குடன் இலங்கைக்கு இந்தியா அறிவிக்கும்.

லஷ்கர்-இ-தொய்பா தீவிரவாதிகள் இலங்கையில் செயற்படுகின்றார்கள் என்பது வெறும் கட்டுக்கதை. மறைமுகமான நோக்கங்களைக் கொண்ட தரப்பினரால் இவ்வாறான அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது'' - என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, ''உலகின் எந்தவொரு பயங்கரவாத அமைப்பிற்கும் இலங்கை மண்ணில் இடம் அளிக்கப்படமாட்டாது. அவர்கள் இலங்கை மண்ணை மிதிப்பதற்கு அனுமதியளிக்க மாட்டோம்'' - என்று பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இஸ்லாமிய தீவிரவாத அமைப்பான லஷ்கர் ஈ தொய்பா தீவிரவாதிகள் இலங்கையில் பயிற்சி பெற்றுக் கொண்டனர் என வெளியான செய்திகளுக்குப் பதிலளிக்கும் வகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

# உதகையில் கைதாகிய ஈழத் தமிழர்கள் மீண்டும் முகாம்களுக்கு அனுப்பிவைப்பு

கூடலூர், செப். 25

நீலகிரி மாவட்டம், உதகையில் பொலிஸாரிடம் சிக்கிய இலங்கை தமிழர்கள் 57 பேரும், நேற்றுமுன்தினம் பொலிஸ் பாதுகாப்புடன் அவரவர் முகாம்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

நீலகிரி மாவட்டத்தில் வீதியில் வாகனச் சோதனையில் இருந்தபோது, மூன்று வாகனங்களில் வந்த சுற்றுலாப் பயணிகளை, சந்தேகத்தின் பேரில் விசாரித்தனர். வாகனங்களில் வந்த 11 குழந்தைகள் உட்பட 57 பேரும் இலங்கைத் தமிழர்கள் என்பதும், இவர்கள் முறையான ஆவணங்கள் இன்றி வந்திருப்பதும் தெரியவந்தது. இவர்கள், தமிழகத்தில் உள்ள புழல், கும்மிடிப்பூண்டி, பல்லாவரம், மண்டபம் முகாம்களைச் சேர்ந்தவர்கள். விசாரணையில், இவர்களை ஆஸ்திரேலியா அனுப்புவதாகக் கூறி ரூபன் என்பவர் பணம் வசூலித்ததும், அதற்கான ஏற்பாடு செய்யும் வரை, சுற்றுலா சென்று வரும்படி அனுப்பி வைத்ததும் தெரியவந்தது.

சிக்கிய 57 பேர் பற்றிய விவரங்களை பெற்ற பொலிஸார், அவர்களது கைரேகைகளையும் பதிவு செய்து கொண்டனர்.

இதுபற்றி நீலகிரி எஸ்.பி., காளிராஜ் மகேஷ்குமார் கூறுகையில் -

சிக்கியவர்களில் விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்தவர்கள் அல்லர். இவர்கள், வெவ்வேறு முகாம்களில் தங்கியுள்ள இலங்கை அகதிகள் என்பது தெரியவந்தது. ஆஸ்திரேலியா அனுப்புவதாக இவர்களிடம் பணம் வசூலித்த ரூபன் குறித்தும், இதன் பின்னணியில் உள்ளவர்கள் குறித்தும் விசாரணை மேற்கொண்டுள்ளோம். இவர்கள் அனைவரும் அந்தந்த முகாம்களுக்கு அனுப்பப்படுவர் - என்று கூறினார்.

அதன்படி, இலங்கை தமிழர்கள் 57 பேரும் பொலிஸ் பாதுகாப்புடன் நேற்று முன்தினம் அவரவர் முகாம்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

# சன் சீ கப்பல் அகதிச் சிறுவருக்கு ஆங்கில மொழி விசேட வகுப்புகள்

ஒட்டாவ, செப். 25

சன் சீ கப்பல் மூலம் கனடா சென்று, பேர்னப தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சிறார்களுக்கு ஆங்கில மொழியில் விசேட வகுப்புகள் நடத்தப்படவுள்ளன.

பேர்னப மாவட்ட கல்வி அதிகாரிகள் அடுத்த வாரம் முதல் முகாமில் தங்கியுள்ள சிறார்களுக்கு விசேட ஆங்கில மொழிப் பயிற்சி வழங்கவுள்ளன என அறிவித்துள்ளனர்.

இவர்களுக்கு கனடாவில் தங்குவதற்கான நிரந்தர வாய்புக் கிட்டும் பட்சத்தில் அவர்களுக்கு இப்படியான ஆங்கில அறிவைப் புகட்டுவதன் மூலம், அவர்களை கனடாவில் சிறந்த பிரஜைகளாக மாற்ற முடியும் என கல்வி நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான இலியோட் கிரீவ் தெரிவித்துள்ளார்.

மாகாண கல்வி அமைச்சும் குடும்ப நலன்களை பேணும் அமைப்பும் இணைந்து இந்த திட்டத்தை அமுல்படுத்த முன்வந்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே கனேடிய தடுப்பு முகாம்களில் உள்ள சிறுவர்களுக்கு கனேடிய முறையிலான அடிப்படைக் கல்வி வழங்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (சி)

## ஸ்ரீரங்கா எம்.பி. மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கத் தீர்மானம்

கொழும்பு, செப்.25

நுவரெலியா மாவட்டத்தில் ஐ.தே. கட்சிப் பட்டியலில் போட்டியிட்டு அரசுப் பக்கம் தாவிய ஸ்ரீரங்கா எம். பி. மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க கட்சியின் செயற்குழு தீர்மானித்துள்ளதாக திஸ்ஸ அத்தநாயக்க எம்.பி. தெரிவித்தார்.

ஸ்ரீரங்கா தமக்கு வாக்களித்த ஐ.தே. கட்சி ஆதரவாளர்களை ஏமாற்றிவிட்டார். ஸ்ரீரங்காவுக்கும் ஐ.தே.கட்சிக்கு மிடையில் இனி எந்தவொரு தொடர்பும் இல்லை. அவருடனான உடன்பாடுகள் அனைத்தும் ரத்துச் செய்யப்பட்டுள்ளதால் ஸ்ரீரங்காவின் தீர்மானங்களுக்கு கட்சி ஒரு போதும் தடையாக இருக்காது. அத்துடன் அவரது தனிப்பட்ட தீர்மானங்களுக்கு ஐ.தே.க, பொறுப்பேற்காது எனவும் அவர் தெரிவித்தார்.

## பொன்சேகாவுடன் கைதான நால்வர் நேற்று விடுவிப்பு

கொழும்பு,செப்.25

நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகாவுடன் இணைந்து அரசுக்கு எதிராகச் செயற்பட்டார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்யப்பட்டிருந்த சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் மூவரையும், ஊடகவியலாளர் ஒருவரையும் கொழும்பு நீதிவான் நீதிமன்றம் நேற்று வெள்ளிக்கிழமை விடுதலை செய்துள்ளது.

மேஜர் ஜெனரல் உபாலி எதிரிசிங்க, மேஜர் ஜெனரல் சுனில் சில்வா, பிரிகேடியர் துமிந்த கெப்பிட்டிவலன மற்றும் ஊடகவியலாளரான றுவான் வீரக்கோன் ஆகியோரே விடுதலையாகினர்.

சரத் பொன்சேகாவுடன் இணைந்து அரசைக் கவிழ்க்க சூழ்ச்சி செய்தார்கள் என்ற சந்தேகத்தின் பேரிலேயே இவர்கள் கைது செய் யப்பட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## $O^+$ இரத்தம் அவசரமாகத் தேவை

யாழ்ப்பாணம்,செப்.25

யாழ்.போதனா வைத்திய சாலையின் இரத்த வங்கியில் $O^+$ (பொசிட்டிவ்) ரக இரத்தத்துக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. குருதிக்கொடையாளர்கள் அவசரமாக வங்கிக்கு இரத்ததானம் செய்யுமாறு வைத்தியசாலை இரத்த வங்கி பொறுப்பு வைத்தியர் எஸ்.சிந்துஜா கேட்டுக்கொண்டுள்ளார். (உ)

# போர் நிறுத்த ஒப்பந்தம் செய்தபோது முஸ்லிம்கள் ஓரங்கட்டப்பட்டனர்

## நல்லிணக்க ஆணைக்குழு முன் பேரியல் அஷ்ரப் சாட்சியம்

கொழும்பு, செப். 25

''இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் 2002 ஆம் ஆண்டு போர் நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்தான போது முஸ்லிம்கள் குறித்து அப்போதைய அரசு கவனம் செலுத்தவில்லை; ஓரங்கட்டப்பட்டனர். அத்துடன் பாகுபாடான முறையில் நோக்கப்பட்டனர்'' - என்று முன்னாள் அமைச்சர் பேரியல் அஷ்ரப் தெரிவித்துள்ளார்.

நல்லிணக்க ஆணைக்குழு முன் நேற்று சாட்சியம் அளிக்கையிலே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பொதுவாக இனம், மொழி என்ற அடிப்படையில் இலங்கையில் பாகுபாடு காட்டப்பட்டது என்றும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

யுத்தம் நிறைவடைந்து சமாதானம் ஏற்பட்டுள்ள நிலையிலும் உண்மையாகப் பாதிக்கப்பட்டவர்கள் பயன் அடைந்துள் ளார்களா என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

அழகிய கடற்கரைகளைக் கொண்ட பிரதேசங்கள் வெளிநாட்டு உல்லாசப் பயணிகளுக்கு ஏற்ற வகையில் அபிவிருத்தி செய்யப்படும் நிலையில், போரின்போது பாதிப்படைந்தவர்கள் என்ன நன்மையைப் பெறுகிறார்கள் என்பது குறித்தும் அவர் கேள்வியெழுப்பினார்.

அவர்களின் குறைநிறைகளை நிவர்த்தி செய்ய சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனவும் பேரியல் அஷ்ரப் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சமாதானப் பேச்சுகள் இடம்பெற்று வந்த காலப் பகுதியில், முஸ்லிம் பிரதிநிதித்துவம் குறித்து அவர் கருத்துத் தெரிவிக்கையில், சமாதானப் பேச்சு ஒப்பந்த நகல் தயாரிக்கப்பட்டபோது முஸ்லிம்கள் குறித்து அப்போதைய அரசு கவனம் செலுத்தவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

இதுகுறித்து தனிப்பட்ட முறையில் எவரையும் தான் குற்றம் சாட்டவில்லை எனத் தெரிவித்த அவர், அப்போது ஆட்சியில் இருந்த அரசே இதற்கான காரணம் எனத் தாம் நம்புகிறார் என்றும் தெரிவித்தார்.

பேச்சுகளில் அரசு சார்பாக முஸ்லிம் பிரதிநிதி கலந்துகொண்ட போதிலும் அந்தப் பிரதிநிதித்துவத்தை ஒட்டு மொத்த முஸ்லிம்கள் சார்பானது என தான் நம்பவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

பாராட்டி வாழ்த்துகின்றோம்



பாசையூர் மண்ணின் மைந்தன்
இம்மானுவல் ஆனல்ட்
[B.A.(Hons), Spl Phy. MSS & AMTC - Limra International (USA), அகில இலங்கை சமாதான நீதிவான். ஜனசக்தி காப்புறுதி யாழ். பிராந்திய முகாமையாளர்]
இன்று (25.09.2010) சனிக்கிழமை இரத்தினபுரி மாநகரசபை மண்டபத்தில் அகில இனநல்லுறவு ஒன்றியத்தினரால் நடத்தப்படும் சாமஸ்ரீ தேசிய பட்டமளிப்பு விழாவில் ''தேசமான்ய'' கௌரவ பட்டம் பெறும் எமது நண்பனை மேலும் பல விருதுகளைப் பெற்று மக்கள் சேவையில் மேலோங்கிட மனமுவந்து வாழ்த்துகின்றோம்.
ரைட்ராணிக் நண்பர்கள், பாசையூர்.
(103761)

வெளிவந்துவிட்டது
புதிய பொது அறிவு - 2011
அழகியல் பட்டதாரிகளுக்கான போட்டிப்பரீட்சை,
கல்விசாரா ஊழியர்களுக்கான போட்டிப்பரீட்சை,
முன்பள்ளி ஆசிரியர்களுக்கான போட்டிப்பரீட்சை,
இலங்கை வங்கியின் போட்டிப்பரீட்சை
வழிகாட்டி நூல்
விலை 400 ரூபா
P. கமல்தாசன்
பூபாலசிங்கம் புத்தகசாலை,
யாழ்ப்பாணம்.

Diploma Courses... Ms Office
Fast Track 01 Month
Unlimited Practicals
Multimedia
Accounting
Closing Date 26.09.2010
AutoCAD-2&3D
Web Development
90% Schol.
Rs.800 Upwards
கற்கும் அனைத்து மாணவர்களுக்கும் Free
MCS
Supported By UNDP/JRRP
SMS your name & course to 772 395 895 & Get Schol.
324,Palaly Road,Parameswara Junction
Dip. in English
ICDL DTP

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25.09.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org